# சமகால கல்விச் சிந்தனைகள்
## CONTEMPORARY EDUCATIONAL THOUGHTS



ஆ.நித்திலவர்ணன்
நி.நிஷாந்தினி

# சமகால கல்விச் சிந்தனைகள்

## CONTEMPORARY EDUCATIONAL THOUGHTS

ஆ.நித்திலவர்ணன்
நி.நிஷாந்தினி

# நூற் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூற் தலைப்பு | : | சமகால கல்விச் சிந்தனைகள் |
| நூலாசிரியர்கள் | : | ஆ. நித்திலவர்ணன் & நி. நிஷாந்தினி |
| பதிப்பாண்டு | : | 1 ஆம் பதிப்பு - 2026 |
| பக்கங்கள் | : | 123 + viii |
| படிகள் | : | 350 |
| அச்சிடல் | : | குரு பிறிண்டேர்ஸ்,<br>இருபாலை. |
| வெளியீடு | : | நி. தக்ஷனா & நி. கிருஜன்<br>ஐயனார் வீதி, பருத்தித்துறை. |
| ISBN – NO | : | 978-624-93019-3-1 |

| | | |
|---|---|---|
| Title | : | CONTEMPORARY EDUCATIONAL THOUGHTS |
| Author | : | A.Niththilavarnan & N.Nishanthiny |
| Edition | : | 1st Edition 2026 |
| Printed by | : | Guru Printers,<br>Irupalai.<br>021 221 4777 |
| Published by | : | N.Thaksanaa & N.Kirujan<br>Iyanar Street,<br>Pointpedro. |

# அமரர் நிஷாந்தினி நித்திலவர்ணன்



தவப்பேறு
08.11.1981

சிவப்பேறு
10.12.2025

# உள்ளடக்கம்


**இயல் ஒன்று - நிலைபேண்தகு அபிவிருத்தி** ப.இல

1. நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான கல்வி 1 - 8
2. நிலைபேறான அபிவிருத்திக்கான தேடல் 9 - 11
3. தரமான கல்விக்கான கூட்டிணைவு 12 - 19
4. நிலைபேறான அபிவிருத்திக்கான இலக்குகள்: ஒருங்கிணைந்த அணுகுமுறை - சர்வதேச பயிற்சி அனுபவங்கள் 20 - 23

**இயல் இரண்டு - புதிய கல்வித் தேவைகள்**

5. இருபத்தியோராம் நூற்றாண்டு ஆசிரியர்களுக்கான தேர்ச்சிகள் மற்றும் திறன்கள் 24 - 34
6. நெருக்கடிகளைத் தாங்கக்கூடிய கல்வி முறைமைகளை உருவாக்குதல் 35 - 52
7. இலங்கையில் காலத்தின் தேவையாகவுள்ள பெற்றோருக்கான கல்வி 53 - 55
8. STEM மற்றும் STEAM கல்வி: ஓர் அறிமுகம் 56 - 58
9. பேரறிகையும் சுயநெறிப்படுத்தப்பட்ட கற்போரும் 59 - 62

**இயல் மூன்று - சமகால கல்வியும் பரீட்சைகளும்**

10. பொதுப்பரீட்சை அடைவுகள் மட்டுமே கல்வியின் குறிகாட்டிகள் அல்ல 63 - 69
11. க.பொ.த உயர்தரத்தில் பொருத்தமான பாடத்துறையை தெரிவு செய்தல் 70 - 75
12. பொதுப்பரீட்சைகளுக்கு தயாராகும் மாணவர்களுக்கான வழிகாட்டல் 76 - 79
13. வினைத்திறனான இணையவழிக்கல்வி 80 - 84

**இயல் நான்கு - சமூகமாற்றமும் கல்வியும்**


14. முன்பள்ளி சிறார்களின் உளவிருத்தி 85 - 87

15. மாணவர் இடைவிலகலும் போதைப்பழக்கமும் 88 - 92

16. சமூகமும் உளநலமும் 93 - 96

17. வடமாகாண பாடசாலைக் கல்வியின் பேண்தகுநிலை 97 - 100

18. வெற்றிகரமான தொழில் வாழ்க்கைக்கான வழிகாட்டல்கள் 101 - 106


**இயல் ஐந்து - ஆய்வுக் கட்டுரைகள்**


19. முன்பள்ளிச் சிறார்களின் நடத்தைக் கோலங்களில் பண்பாட்டுக் காரணிகளின் செல்வாக்கு 107 - 116

20. திறன் வகுப்பறையைப் பயன்படுத்தி தமிழ்ப்பாடம் கற்றல் - கற்பித்தல் 117 - 123

# முன்னுரை

சமகால கருத்தமர்வுகள், செயலமர்வுகள் மற்றும் கல்விசார் நிகழ்வுகளில் வெளிப்படுத்திய கல்விசார் விடயங்களையும் சமூகத்திற்கு கல்வி வழங்கும் நோக்கோடு, சமூக ஊடகங்களில் பதிவிட்ட விடயங்களையும் உள்ளடக்கி இந்நூலை உருவாக்கியுள்ளோம்.

இந்நூலில் இருபது கட்டுரைகள், ஐந்து இயல்களில் ஒழுங்கமைக்கப் பட்டுள்ளன. நிலைபேண்தகு அபிவிருத்தி (Sustainable Development) என்ற முதலாவது இயலில், நிலைபேறான அபிவிருத்திக்கான தேடல், நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான கல்வி, மற்றும் SDG இலக்குகளை அடைவதற்கான ஒருங்கிணைந்த அணுகுமுறை மற்றும் தரமான கல்விக்கான கூட்டிணைவு (Collaboration for Quality Education) ஆகிய விடயங்கள் ஆராயப்பட்டுள்ளது.

இயல் இரண்டு புதிய கல்வி தேவைகள் தொடர்பாக ஆராய்கின்றது. இருபத்தியோராம் நூற்றாண்டு ஆசிரியர்களுக்கான தேர்ச்சிகள் மற்றும் திறன்கள், நெருக்கடிகளை தாங்கக்கூடிய கல்வி முறைகளை உருவாக்குதல், பெற்றோருக்கான கல்வி, STEM மற்றும் STEAM கல்வி மற்றும் பேரறிகை ஆகிய விடயங்கள் பற்றி விரிவாக பேசுகின்றது.

சமகால கல்விப்பிரச்சினைகள் தொடர்பாக, பத்திரிகைகள் மற்றும் தொலைக்காட்சிகளுக்கு வழங்கிய நேர்காணல்கள் மற்றும் கட்டுரைகள் என்பன பொருத்தமான முறையில் இந்நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பொதுப்பரீட்சைகளில் மாணவர் அடைவுவீழ்ச்சி, க.பொ.த உயர்தரத்தில் பொருத்தமான பாடத்துறையை தெரிவு செய்தல், இடர்காலத்தில் பொதுப்பரீட்சைகளுக்கு தயாராவதற்கான வழிகாட்டலகள் மற்றும் வினைத்திறனான இணையவழிக்கல்வி ஆகிய விடயங்கள் இயல் மூன்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

முன்பள்ளி சிறார்களின் உளவிருத்தி, மாணவர் இடைவிலகலும் போதைப்பொருள் பாவனையும், சமூகமும் உளநலமும், வடமாகாண

பாடசாலைக் கல்வியின் பேண்தகுநிலை மற்றும் வெற்றிகரமான தொழில் வாழ்க்கைக்கான வழிகாட்டல்கள் ஆகிய விடயங்கள் இயல் நான்கில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

நிஷாந்தினி நித்திலவர்ணன் அவர்களது இரண்டு ஆய்வுகள், இயல் ஐந்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. 'முன்பள்ளிச் சிறார்களின் நடத்தைக் கோலங்களில் பண்பாட்டுக் காரணிகளின் செல்வாக்கு (Factors influencing on the behavioral patterns of the Preschool Children: A study based on the Preschools in Vadamaradchi North Divisional Secretariat)' என்ற தலைப்பிலான ஆய்வுக்கட்டுரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் International Movement for Tamil Culture, Canada என்ற அமைப்பும் இணைந்து நடாத்திய 13th International Conference on Challenges and Initiatives of the Tamil Language and Culture என்ற சர்வதேச ஆய்வு மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வாகும். மேலும் இவ்வாய்வு அவரது பண்பாட்டியல் முதுகலைமாணி பட்டத்திற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரையை அடிப்படையாகக் கொண்டதுமாகும்.

இரண்டாவது ஆய்வு 'திறன் வகுப்பறையைப் பயன்படுத்தி தமிழ்ப்பாடம் கற்றல் - கற்பித்தல் (Teaching - Learning Tamil by using SMART board)' என்ற தலைப்பிலான ஆய்வுக்கட்டுரை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை நடாத்திய Educational Research Symposium - 2023 என்ற கல்வி ஆய்வு மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வாகும். மேலும் இவ்வாய்வு அவரது கல்வி முதுமாணி பட்டத்திற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரையை அடிப்படையாகக் கொண்டதுமாகும்.

இந்நூலிலுள்ள ஒவ்வொரு விடயமும் வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களில், சமூகத்தின் பல்வேறு தரப்பினரிடமும் இருந்து கிடைக்கப்பெற்ற பயனுள்ள பின்னூட்டல்களே இந்நூலினை வெளியிட

எம்மைத் தூண்டின. மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் உள்ளிட்ட கல்விசார் ஆளணியினர் மற்றும் பொதுமக்கள் பயனடையும் வகையில் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

நூலை சிறப்பாக வடிவமைத்து அச்சிட்ட குரு பிறின்டேர்ஸ் நிறுவனத்தினருக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். என்றும் எமது நல்முயற்சிகளுக்கு உறுதுணையாக இருக்கின்ற எமது குடும்பத்தினரையும் இச்சந்தர்ப்பத்தில் நன்றியுடன் நினைத்துப் பார்க்கின்றோம். இந்நூல் தொடர்பான பின்னூட்டல்களை வாசகர்களாகிய உங்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.

**நூலாசிரியர்கள்**

## இயல் - 01

# 01 நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான கல்வி

தற்கால உலகளாவிய அபிவிருத்திப்போக்கானது பேண்தகு நிலையுடையதாக இல்லை என்பதை பொருளாதாரம், சூழல் மற்றும் சமூக குறிகாட்டிகள் எடுத்துக்காட்டுகின்றன. தமக்கான நிலைபேண்தகு அபிவிருத்திக்கான பயணத்தில் பல்வேறு சவால்களினை ஒவ்வோரு நாடும் எதிர்நோக்க வேண்டியுள்ளது. இச்சவால்களில் பல, எல்லா நாடுகளுக்கும் பொதுவானவையாகவும் சில குறிப்பிட்ட நாடுகளுக்கு தனித்துவமானவை யாகவும் காணப்படுகின்றன. இவ்வாறான சவால்களை எதிர்கொண்டு பேண்தகு அபிவிருத்தியை அடைவதற்கான முக்கியமான வழிமுறையாக கல்வி மற்றும் முறையான பயிற்சி என்பன விளங்குகின்றன. தனியே தொழில்நுட்ப தீர்வுகளாலோ, அரசியல் சீராக்கங்களாலோ அல்லது நிதிசார் கருவிகளாலோ பேண்தகு அபிவிருத்தியை அடைந்துவிட முடியாது. மாறாக எமது சிந்தனை மற்றும் செயற்பாட்டுப்பாதையை மாற்றியமைக்க வேண்டியுள்ளது.

### நிலைபேண்தகு அபிவிருத்திக்கான உலகளாவிய தேவை


உலகளாவியரீதியில் மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள். அதிகரித்த வறுமை, உலகளாவிய காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புக்கள், சக்தி வளங்களின் வினைத்திறனற்ற பாவனை, நீர்ப்பாதுகாப்பின்மை, அதிகரித்த சூழல் மாசடைதல், மனித உரிமை

துஸ்பிரயோகம், சுய போக்குவரத்தின் மிதமிஞ்சிய பாவனை, சுற்றாடல் தரம்குன்றல், மற்றும் உலகமயமாக்கல் போன்றவை அவற்றுள் முக்கியமானவை ஆகும்.

தற்கால உலகளாவிய அபிவிருத்திப்போக்கானது பேண்தகைமை யுடையதாக இல்லை என்பதை சூழல், பொருளாதாரம் மற்றும் சமூக குறிகாட்டிகள் எடுத்தியம்புவதாக ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயலாளர் நாயகம் பான்கீன்மூன் அவர்கள் குறிப்பிடுகின்றார். மேலும் தற்கால உலகில் வளங்கள் வரையறுக்கப்பட்டவையாக இருப்பதுடன் அதிகரித்த சவால்களையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகவும், இதற்கு பேண்தகு அபிவிருத்தியே ஒரே தீர்வாகும் எனவும் வலியுறுத்துகின்றார்.

**நிலைபேண்தகு அபிவிருத்தி (Sustainable Development) என்றால் என்ன?**

அனைத்து நாடுகளிலும் பயன்படுத்தப்படும் தனித்துவமான எண்ணக்கருவாகும். இதனை வரைவிலக்கணப்படுத்துவது கடினமானதாகும். ஏனெனில் தொடர்ச்சியாக விருத்தியடைந்து(Evolving) செல்லும் ஒரு எண்ணக்கருவாக காணப்படுகின்றது. "எதிர்காலச் சந்ததியினர்க்கு பாதிப்பினை ஏற்படுத்தாத வகையில் மக்களின் இன்றைய தேவையினை பூர்த்திசெய்வது மற்றும் வறுமையினை குறைப்பதற்குமான ஓர் நடவடிக்கையென பேண்தகு அபிவிருத்தயை பிரெண்லாண்ட் ஆணைக்குழு(1987) வரைவிலக்கணப் படுத்தியுள்ளது. இது பொருளாதாரம், சமூகம், மற்றும் சூழல் என்கின்ற மூன்று தளத்திலே கட்டியெழுப்பப்படுகின்றது. கலாச்சாரம் மற்றும் தனிமனிதன் என்பனவும் இதன் கூறுகளாக தற்காலத்தில் கருதப்படுகின்றன.



பேண்தகு அபிவிருத்தியானது பின்வரும் ஐந்து வழிகாட்டல் தத்துவங்களினால் இயக்கப்படுகின்றது.

1. சுற்றாடல் வரையறைக்குள் வாழ்தல்
2. உறுதியான, ஆரோக்கியமான சமூகத்தை உறுதிப்படுத்தல்
3. பேண்தகு பொருளாதாரத்தை அடைதல்
4. நல்ல ஆளுகையை உறுதிப்படுத்தல்
5. விஞ்ஞான அறிவை பொறுப்புணர்வுடன் பயன்படுத்தல்

**நிலைபேண்தகு அபிவிருத்திக்கான 17 இலக்குகள்**

செப்டெம்பர் 25, 2015 அன்று ஐக்கிய நாடுகள் பொதுச்சபையிலுள்ள 193 நாடுகள் "எமது உலகத்தை உருமாற்றுதல்" (Transforming our world) என்ற தலைப்பிலான 2030 வளர்ச்சி செயல்நிரலுக்கு அங்கீகாரமளித்தன. இச்செயல்நிரலில் அடங்கியுள்ள 17 குறிக்கோள்களாவன

1. வறுமை இன்மை (No Poverty) : சகல இடங்களிலும், எல்லா வகைகளிலுமான வறுமையை ஒழிக்க வேண்டும்.
2. பசி இன்மை (Zero Hunger) : பசியை ஒழித்தல், பட்டினியை விரட்டுதல், உணவுப் பாதுகாப்பை அடைதல், ஊட்டச்சத்து மேம்பாட்டை எய்துதல் மற்றும் நிலையான, பேண்தகு விவசாயத்தை ஊக்குவித்தல்.
3. சிறந்த ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு (Good health & wellbeing) : எல்லோருக்கும், எல்லா வயதிலும், நலம்குன்றா உயிர்வாழ்வை உறுதிசெய்தலும், எலலோருக்கும் எல்லா வயதிலும் நலவாழ்வை முன்னெடுத்தலும்.
4. தரமான கல்வி (Quality Education) : அனைவரையும் உள்ளடக்கிய, சமவாய்ப்புள்ள, சமத்துவமான, தரமான கல்வியை உறுதிப்படுத்துதல், மற்றும் எல்லோருக்கும் வாழ்நாள் முழுதுமான கல்வி கற்றலுக்கான வாய்ப்பை ஊக்குவித்தல்.
5. பாலின சமத்துவம் (Gender Equality) : பாலின சமத்துவத்தை அடைதல், மற்றும் அனைத்து பெண்கள், சிறுமிகளுக்கும் அதிகாரமளித்தலும்.
6. தூய்மையான நீர் மற்றும் சுகாதாரம் (Clean water and sanitation) : எல்லோருக்கும் நீரும், துப்புரவும் கிடைக்கச் செய்தலும் அவற்றை நீடிக்கத் தக்கவாறு சுகாதாரத்தின் நிலையான மேலாண்மை செய்தலும்.

7. புதுப்பிக்கவல்ல மற்றும் மலிவான சக்தி (Affordable and clean energy) : எல்லோருக்கும் மலிவான, நம்பகமான, நிலையான மற்றும் புதுமையான சக்தி கிடைப்பதை உறுதிசெய்து கொள்ளுதல்.
8. நல்ல வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி (Decent work and Economic growth) : எல்லோருக்கும் நிலையான, யாவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலையான, நீடிக்கத்தகு பொருளாதார வளர்ச்சி, முழுமையான, ஆக்கவளம் கொண்ட, கண்ணியமான பணி.
9. புதுமை மற்றும் நல்ல உள்கட்டமைப்பு (Industry, innovation and infrastructure) : தாங்கும் திறன் கொண்ட உட்கட்டமைப்புகளை உருவாக்குதல், உள்ளடக்கிய மற்றும் பேண்தகு தொழில்மயமாதலை முன்னெடுத்தல், புதுமையாக்கத்தைப் பேணி வளர்த்தல்.
10. சமமின்மையை குறைத்தல் (Reduced inequality) : நாடுகளுக்குள்ளேயும், நாடுகளுக்கிடையேயுமான சமமின்மையை, சமத்துவமின்மையைக் குறைத்தல்.
11. நிலையான நகரங்கள் மற்றும் சமூகங்கள் (Sustainable cities and communities) : நகரங்களையும், மனித சமூகங்களையும், குடியிருப்புகளையும் எல்லாரையும் உள்ளடக்கிய, பாதுகாப்பானதாக, தாங்கும் திறன் கொண்ட, நீடிக்கத்தக்கனவாக ஆக்குதல்.
12. வளங்களை பொறுப்பான முறையில் நுகர்தலும் உற்பத்திசெய்தலும் (Responsible consumption and production) : நிலையான, நீடிக்கத்தகு முறையிலான நுகர்வு மற்றும் உற்பத்தியை, உற்பத்தி வடிவங்களை உறுதிசெய்து கொள்ளுதல்.
13. காலநிலைமாற்ற நடவடிக்கை (Climate Action) : காலநிலை மாறுபாட்டையும் அதன் பாதிப்புகளையும் எதிர்கொள்ளக்கூடிய வகையிலான உடனடி நடவடிக்கை எடுத்தல்.
14. கடல்சார் வளங்களைப் பாதுகாத்தல் (Life below water) : பெருங்கடல்கள், கடல்கள் மற்றும் கடல்சார் வளங்களைப் பேணுதலும், பேண்தகு வளர்ச்சிக்காக அவற்றை நீடிக்கத்தகுந்த விதத்தில் பயன்படுத்தலும்.
15. நிலவளங்களைப் பாதுகாத்தல் (Life on Land) : நில சூழலியல் அமைப்புகளை பாதுகாத்து, மீட்டமைத்து, அவற்றின் நீடித்த பயன்பாட்டை ஊக்குவித்தல், நீடிக்கத்தக்கவாறு காடுகளை நிலைப்பாடான முறையில் நிர்வகித்தல், பாலைவனமாதலுக்கு

எதிராகப் போரிடல், நிலச் சீர்கேட்டைத் தடுத்து மீட்டமைத்தல், மற்றும் பல்லுயிர் இழப்பைத் தடுத்து நிறுத்துதல்.

16. அமைதி மற்றும் நீதிக்கான வலுவான நிறுவனங்கள் (Peace, justice and strong institutions): நிலையான, பேண்தகு வளர்ச்சிக்காக அமைதியான, யாவரையும் உள்ளடக்கிய சமூகங்களை உருவாக்குதல், அனைவருக்கும் நீதி கிடைக்கச் செய்தல், எல்லா நிலைகளிலும் சிறப்பான, பொறுப்பான மற்றும் உள்ளடக்கிய சூழல்களை உருவாக்குதல். செயல்திறமிக்க, பதிலளிக்கும் பொறுப்புடைய, யாவரையும் உள்ளடக்கிய நிறுவனங்களை எல்லா மட்டங்களிலும் ஏற்படுத்துதல்.
17. இலக்குகளை அடைவதற்கான கூட்டிணைவு (Partnerships for the goals) : நிலையான அபிவிருத்திக்காக செயற்பாட்டு முறைகளை பலப்படுத்துதல், பேண்தகு வளர்ச்சிக்கான உலகளாவிய கூட்டமைப்புகளுக்கு புத்துயிர் அளித்தல்.

## நிலைபேண்தகு அபிவிருத்திக்கான கல்வி (Education for Sustainable Development - ESD) என்றால் என்ன?

கல்வி, பயிற்சி மற்றும் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு என்பவற்றால் சமூகத்தை பேண்தகுநிலை நோக்கி நகர்த்த முடியும் என உலகளாவியரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. பேண்தகு அபிவிருத்திக்கு தடைக்கல்லாக உள்ள பிரச்சனைகளையும், அவற்றுக்கான தீர்வுகளையும் கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளில் இணைத்தல் பேண்தகு அபிவிருத்திக்கான கல்வி எனப்படும். 8 மிலேனியம் அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான ஓர் பொறிமுறையாகவும் இது கருதப்படுகின்றது. பேண்தகு அபிவிருத்தியின் தத்துவங்களையும், எண்ணங்களையும் அடிப்படையாகக்கொண்ட கற்றல்-கற்பித்தல் அணுகுமுறை இதுவாகும். பேண்தகு அபிவிருத்திக்கான கல்வி பின்வரும் மூன்று எண்ணக்கருக்கருக்களால் உலகளாவியரீதியில் அழைக்கப்படுகின்றது. UNESCO ஆவணங்களில் அதிகளவில் பயன்படுத்தப்படுவது ESD என்ற எண்ணக்கருவாகும்.

1. Education for Sustainable Development (ESD)
2. Education for Sustainability (EfS)
3. Sustainability Education (SE)

"பேண்தகு அபிவிருத்திக்கான கல்வி" என்ற எண்ணக்கருவானது 2000 ஆம் ஆண்டளவில் உருவாக்கம்பெற்ற எண்ணக்கருவாக காணப்படுகின்றது. அது 1950 ஆம் ஆண்டில் இயற்கை பற்றிய கல்வி (Nature Education) எனவும், 1980 ஆம் ஆண்டில் சூழல்சார்கல்வி (Environmental Education) எனவும் அழைக்கப்பட்டது. சூழல்சார்கல்வியின் மிகப்பிந்திய பரிணாமமாகவே இது தற்போது கருதப்படுகின்றது.

பேண்தகு அபிவிருத்திக்கான கல்வியானது, பேண்தகு எதிர்காலத்துக்கு தேவையான அறிவு, திறன், மனப்பாங்கு மற்றும் விழுமியங்களைப் பெற்றுக்கொள்ள உதவுகின்றது. மேலும் இது ஒவ்வோர் நாட்டுடனும், சமூகத்துடனும் தொடர்புடையதாகவும், அவர்களின் கலாச்சாரத்துக்கு பொருத்தமானதாகவும் இருப்பதுடன் சுதேச அறிவையும், சுதேச மொழிகளையும் கல்வியில் பயன்படுத்துவதை ஊக்குவிக்கின்றது.

ஐக்கிய நாடுகள் நிறுவனம் 2005 - 2014 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியை பேண்தகு அபிவிருத்திக்கான கல்விக்குரிய பத்தாண்டாக பிரகடனப்படுத்தியிருந்தது. பெரும்பாலான உலக நாடுகள் முறைசார் கல்வியில், ESD இற்கான கொள்கை, கலைத்திட்ட விருத்தி, உத்திகள், மற்றும் ஆசிரியர் பயிற்சி மற்றும் கையேடுகளின் விருத்தி என்பனவற்றில் ஈடுபட்டு வருகின்றன ஆனால் இலங்கையில் 2012 டிசம்பரில்தான் சமாதானம் மற்றும் பேண்தகு அபிவிருத்தி கல்விக்கான கொள்கை உருவாக்கப்பட்டது.

பேண்தகுஅபிவிருத்திக்கானகல்வி வாய்ப்புக்களினை, முறைசார் கல்வியின் ஆரம்பபிள்ளைப்பருவக்கல்வி தொடக்கம் உயர்கல்வி வரையிலான கலைத்திட்டத்தில் பொருத்தமாக உள்ளடக்குவதுடன், முறைசாரக்கல்வி மற்றும் சமுதாய மேம்பாட்டிலும் பயன்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

### நிலைபேண்தகு அபிவிருத்திக்கானகல்வியின் கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

பேண்தகுஅபிவிருத்திக்கானகல்வியின் கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகளாக பின்வருவன இனங்காணப்பட்டுள்ளன.

- அனுபவம்சார் கற்றல் (Experiential learning)
- விசாரணையை அடிப்படையாகக்கொண்ட கற்றல் (Inquiry based learning)

- கூட்டாகக் கற்றல் (Collaborative learning)
- செயற்றிட்டங்களை அடிப்படையாகக்கொண்ட கற்றல் (Project-based learning)
- தகவல் தொடர்பாடல் தொழிலநுட்பத்தை பொருத்தமாக ஒன்றிணைத்தல் (Integration of ICT)
- வகுப்பறைக்கு வெளியிலான கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுதல் (Learning outside the classroom)
- சமூகம்சார் பிரச்சினைகளைத்தீர்த்தல் (Community problem solving)

**பாடசாலைகளில் நிலைபேண்தகு அபிவிருத்திக்கானகல்விக்கான செயற்பாடுகள்**

பெரும்பாலான பாடசாலைகள் பாடசாலைக்சூழலை அழகுபடுத்தலையே நோக்ககாகக்கொண்டு செயற்படுகின்றன. ஆனால் இது பேண்தகு அபிவிருத்திக்கானகல்விக்கு உதவப்போவதில்லை. மாறாக பின்வரும் செயற்பாடுகள், பேண்தகுஅபிவிருத்திக்கான கல்விச் செயற்பாடுகளாக உலகளாவியரீதியில் இனங்காணப்பட்டுள்ளன.

1. மாணவர்களை பயனுள்ள செயற்றிட்டங்களில் ஈடுபடுத்தல்
2. பாடசாலைக்கட்டடங்ளை சூரியப்படல்களுடன்கூடிய பசுமைமிக்க கட்டடங்களாக்குதல்
3. மீழ்சுழற்சி செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல்
4. நீர்ப்பாதுகாப்பு நடைமுறைகளைப்பின்பற்றல்
5. பாடசாலையைச்சூழ மரங்களை நாட்டுதல்
6. பாடசாலையில் காய்கறித்தோட்டத்தையும், மூலிகைத் தோட்டத்தையும் அமைத்தல்
7. கலைத்திட்டத்தின் எல்லா விடயங்களிலும், பேண்தகு அபிவிருத்திக்கானகல்வி வாய்புக்களிருப்பதை பாடசாலை நிர்வாகமும், ஆசிரியர்களும் உறுதிப்படுத்த வேண்டும்.

**பேண்தகுஅபிவிருத்திக்கானகல்வி அமுலாக்கத்துக்கான சவால்கள்**

1. பேண்தகுஅபிவிருத்திக்கானகல்வி அமுலாக்கம் தொடர்பான கொள்கைகள், மற்றும் தூரநேக்குகளின்மை.

2. கல்விசார் ஆளணியினரிடமும் மற்றும் பொதுமக்களிடமும் இது தொடர்பான விழிப்புணர்வின்மையும் அறிவின்மையும்.
3. கலைத்திட்டத்தில் பொருத்தமாக பேண்தகு அபிவிருத்திக்கானகல்வி வாய்ப்புக்களை உட்புகுத்துவதில் சிரமப்படுதல்
4. சமூகத்துடன் ஒருங்கிணைந்து பேண்தகு அபிவிருத்திக்கான கல்விச்செயற்பாடுகளை முன்னெடுப்பதில் சிரமப்படுதல்.
5. ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு இதுதொடர்பான பயிற்சி வழங்குவதில் இடர்பாடுகளை எதிர்கொள்ளல்.

## முடிவுரை

இலங்கையின் பாடசாலை மற்றும் பல்கலைக்கழக கல்வியில், பேண்தகு அபிவிருத்திக்கானகல்வி வாய்ப்புக்கள் ஆங்காங்கே உள்ள போதும், உலகளாவியரீதியில் அபிவருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுடன் ஒப்பிடுகையில், இதன் அமுலாக்கத்தில் பின்தங்கியே உள்ளது. பேண்தகுஅபிவிருத்திக்கானகல்வியினை இலங்கையில் அமுலாக்குவது தொடர்பாக தீவிரமாக சிந்தித்து செயற்பட வேண்டியுள்ளது.

## உசாத்துணைகள்


1. UNESCO World Conference on Education for Sustainable Development, Learning Today for a Sustainable Future, 10-12 November 2014, Aichi-Nagoya, Japan, Available at http://unesdoc.unesco.org/images /0021/002173/217373E.pdf, Retrieved on 03-03-2014.
2. UNESCO(2014), Green Schools Asia, http://www.unescogreenschools.org /pages/about_esd
3. UNESCO(2013), http://www.unescogreenschools.org/pages/about_esd
4. UNESCO (2012), From Green Economies to Green societies.
5. McKeown,R.(2002) Education for Sustainable Development Toolkit, Energy, Environment and Resources Center University of Tennessee,USA, http://www.esdtoolkit.org
6. Sedera,M(2010), Knowledge economy and general education, Economic Review, People Bank.
7. John Woollard, http://www.pgce.soton.ac.uk/IT/Curriculum/ICTAC/ESD
8. UNESCO(2010), Teaching and Learning for a Sustainable Future, A multimedia teacher education programme, http://www.unesco.org /education/tlsf/

# 02 நிலைபேறான அபிவிருத்திக்கான தேடல்

கொவிட்- 19 பெருந்தொற்று மற்றும் தொடர்ந்துவந்த பொருளாதார நெருக்கடி காரணமாக பல சவால்களை சமகாலத்தில் நாம் எதிர்கொள்கிறோம். எரிபொருட்களுக்கான நெருக்கடியை தொடர்ச்சியாக எதிர்கொண்டுள்ளோம். இதன் விளைவாக பல பொருளாதார பிரச்சனைகள் ஏற்பட்டுள்ளது. பொருட்களின் விலைகள் நாள்தோறும் கிடுகிடுவென உயர்கின்றன. உணவுப்பணவீக்கம் 80 சதவீதமாக காணப்படுகின்றது. இலங்கையில் ஒரு சாதாரண குடும்பத்தின் ஒருமாத வாழ்க்கைச் செலவீனம் ஒரு இலட்சத்துப் பத்தாயிரம் என பேராதனைப் பல்கலைக்கழக பொருளியல் துறையினர் தமது ஆய்வின் மூலம் கண்டறிந்துள்ளனர்.

பெரும் எண்ணிக்கையான உணவகங்கள் மூடப்பட்டுள்ளன. அரிசி, மா, சீனி, பருப்பு, பால்மா போன்ற அத்தியாவசிய உணவுப்பொருட்களின் விலைகள் என்றும் கண்டிராதவாறு உயர்வடைந்துள்ளன. மரக்கறிகளின் விலைகள் சடுதியாக உயர்வடைந்துள்ளன. ஒரு கிலோக்கிராம் மரவள்ளிக் கிழங்குகூட முந்நூறு ரூபா விற்கிறது. ஒரு கட்டு கீரைப்பிடி நூறு ரூபா விற்கிறது. ஒரு சாதாரண மரக்கறி சோற்றுப்பாசல் முந்நூறு ரூபா விற்கிறது.

கடலுணவுகள், முட்டை மற்றும் இறைச்சி என்பனவற்றின் விலைகளின் அதிகரிப்பால், சாமானிய மக்களால் அவற்றை வாங்கி உண்ண முடியவில்லை.

பெரும்பாலான இலங்கை மக்கள், தமது உணவை சுருக்கிக் கொண்டுள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றன.

பொருளாதார நெருக்கடியால் பெரும் எண்ணிக்கையானவர்கள் தமது தொழில்களை இழந்துள்ளனர். அரசாங்க உத்தியோகத்தர்களின் வாழ்க்கைச்செலவு அதிகரித்துள்ளது. ஆனால் சம்பளம் அதிகரிக்கப்படவில்லை. போக்குவரத்து செலவுகளை சமாளிக்கமுடியாமல் திண்டாடுகின்றனர்.

பொருளாதார நெருக்கடியால் வைத்தியசாலைகளில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. புற்றுநோய்க்கான மருந்துகளைக்கூட நோயாளிகள் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய துர்ப்பாக்கியநிலை காணப்படுகின்றது.

பாடசாலை மாணவர்கள் மற்றும் பிள்ளைகள் போசாக்கின்மையால் கடுமையாக பாதிக்கப்படுகின்றனர். போக்குவரத்து கட்டணங்களும் சடுதியாக உயர்ந்துள்ளன. ஆடைகளின் விலைகள் அதிகரித்துள்ளன. ஒட்டுமொத்தமாக நோக்கின் ஒவ்வொரு பொருளின் விலையும் சராசரியாக மூன்று அல்லது நான்கு மடங்கு அதிகரித்துள்ளது.

### பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்டுவரும் பாதிப்புகள்

வறுமை அதிகரித்து செல்கிறது. அண்மையில்கூட தமது பிள்ளைகளுக்கு உணவளிக்க முடியாது இரண்டு குடும்பங்கள் பொலிசில் சரணடைந்ததாக செய்திகள் கூறுகின்றன. போசாக்கின்மை அதிகரிக்கிறது. குறிப்பாக பிள்ளைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களின் போசாக்கின்மை அதிகரிக்கின்றது. பாடசாலைகளின் காலைக்கூட்டங்களில் ஆங்காங்கே மாணவர்கள் மயங்கி வீழ்கிறார்கள். சமூக குற்றச்செயல்கள் அதிகரித்துச் செல்கின்றன. குடும்ப வன்முறைகள் அதிகரித்துச் செல்கின்றன. சட்டவிரோதமாக, கடல்மார்க்கமான ஆபத்தான பிரயாணங்களை மேற்கொண்டு வெளிநாடுகள் செல்கின்றனர். கைதாகின்றனர்.

### இந்தக்கஷ்டமான சூழலில் எப்படி தன்னிறைவாக வாழ்வது

நாம் இந்தக்கஷ்டமான சூழலில் இருப்பதைக்கொண்டு மாற்றீட்டுப் பொருட்களை தயாரித்து வாழவேண்டும். வருமானம் தரக்கூடிய மாற்று வழிமுறைகளை நாம் கண்டறிய வேண்டும். கடந்த யுத்தகாலத்தில் வெற்றிகரமாக வாழ்ந்த அனுபவம் எமக்கு உண்டு. ஆனால் எமது பிள்ளைகள்

அந்த வாழ்க்கை முறைக்கு தயாராக இல்லை. எமது மாற்றமடைந்த நுகர்வு கலாசாரம், பொருளாதார தடைகளை வெற்றிகொள்ள தடையாக உள்ளது. வீடுகள் தோறும் வீட்டுத் தோட்டங்களை அமைப்பதை ஒரு சம்பிரதாயமாக அல்லாமல் ஒரு புரட்சியாகவே முன்னெடுக்க வேண்டும். தரிசு நிலங்கள் அனைத்திலும் விதைக்க வேண்டும். பயிரிட வேண்டும். கோழிவளர்ப்பு மற்றும் கால்நடை வளர்ப்பில் அனைவரும் ஆர்வம்காட்ட வேண்டும். எமது பிரதேச வளங்களைப் பயன்படுத்தி உள்ளூர் உற்பத்திகளை மேற்கொள்ள வேண்டும்.

கடற்கரையில் கொட்டப்படும் கடல் உணவுக்கழிவுகளை பயன்படுத்தி மாஸ் உற்பத்திகள் மேற்கொள்ளமுடியும். திண்மக்கழிவுகளை திறம்பட முகாமைசெய்து சேதன உரங்களை தயாரித்து வீட்டுத்தோட்டங்களுக்கு பயன்படுத்த முடியும். பெருமளவிலான உணவுப்பொருட்கள் வீடுகளிலும் விழாக்களிலும் வீணடிக்கப்படுகின்றது. அவற்றினை சிறந்த முறையில் முகாமை செய்ய வேண்டும். பனம் உற்பத்தி பொருட்களை அதிகளவில் உற்பத்தி செய்ய வேண்டும்.

# 03 தரமான கல்விக்கான கூட்டிணைவு

நாம் இருபத்தியோராம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். உலகளாவியரீதியில், கல்வியில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. வகுப்பறைகள் பல மாற்றங்களுக்குட்பட்டு வருகின்றன.

**நிலைபேண்தகு அபிவிருத்திக்கான 17 இலக்குகள்**

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையிலுள்ள 193 நாடுகள் செப்டெம்பர் 25, 2015 அன்று "எமது உலகத்தை நிலைமாற்றுதல்" (Transforming our world) என்ற தலைப்பிலான 2030 வளர்ச்சி செயல்நிரலுக்கு அங்கீகாரமளித்தன. இச்செயல்நிரலில் நிலைபேண்தகு அபிவிருத்திக்கான 17 இலக்குகள் அடங்கியுள்ளன. அவையாவன,

1. வறுமை ஒழிப்பு (No Poverty)
2. பசி இன்மை (Zero Hunger)
3. சிறந்த ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு (Good health & Wellbeing)
4. தரமான கல்வி (Quality Education)
5. பாலின சமத்துவம் (Gender Equality)
6. தூய்மையான நீர் மற்றும் சுகாதாரம் (Clean water and Sanitation)
7. புதுப்பிக்கத்தக்க மற்றும் மலிவான சக்தி (Affordable and Clean Energy)

8. நல்ல வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி (Decent work and Economic growth)
9. புதுமை மற்றும் நல்ல உட்கட்டமைப்பு (Industry, innovation and infrastructure)
10. சமமின்மையை குறைத்தல் (Reduced Inequality)
11. பேண்தகு நகரங்கள் மற்றும் சமூகங்கள் (Sustainable Cities and Communities)
12. வளங்களை பொறுப்பான முறையில் நுகர்தலும் உற்பத்திசெய்தலும் (Responsible consumption and production)
13. காலநிலைமாற்றத்திற்கு எதிரான நடவடிக்கை (Climate Action)
14. கடல்சார் வளங்களைப் பாதுகாத்தல் (Life below water)
15. நிலவளங்களைப் பாதுகாத்தல் (Life on Land)
16. அமைதி மற்றும் நீதிக்கான வலுவான நிறுவனங்கள் (Peace, Justice and strong institutions):
17. இலக்குகளை அடைவதற்கான கூட்டிணைவு (Partnerships for the Goals)

**தரமான கல்வி (Quality Education)**

அனைவரையும் உள்ளடக்கிய, சமவாய்ப்புள்ள, சமத்துவமான, தரமான கல்வியை உறுதிப்படுத்துதல், மற்றும் எல்லோருக்கும் வாழ்நாள் முழுதுமான கல்வி கற்றலுக்கான வாய்ப்பை ஊக்குவித்தல் தரமான கல்வி (Quality Education) என்பதால் கருதப்படுகின்றது.

**தரமான கல்வியின் முக்கிய கூறுகள் (Key elements in Quality Education)**

தரமான கல்வியின் முக்கிய கூறுகளாக பின்வருவன காணப்படுகின்றன.

- கல்வியின் கிடைப்பனவு (Accessibility)
- சமத்துவமும் உள்ளடங்கலும் (Equity & Inclusiveness)
- தரமான ஆசிரியர்கள் (Qualified Teachers)
- பாதுகாப்பான மற்றும் ஆதரவான கற்றல் சூழல்கள் (Safe & Supportive Learning Environments)
- பொருத்தப்பாடுடைய கலைத்திட்டம் (Relevant Curriculum)
- மாணவர்மைய அணுகுமுறை (Student-Centered Approach)

## தரமான கல்விக்கான கூட்டிணைவு (Collaboration for Quality Education)

எம்மைச் சூழலுள்ள உலகம் வேகமாக மாற்றமடைந்து வருகிறது. அத்துடன், கற்பவர்களின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகளும் மாறி வருகின்றன.

கற்போர்களுக்கு சிறந்த வாய்ப்புகளை வழங்குவதை உறுதிசெய்ய, கல்வியாளர்கள், மாணவர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் சமூகத்தினர் மத்தியில் கூட்டிணைவை ஏற்படுத்துவது மிகவும் அவசியமானதாகும்.

## கல்வியில் கூட்டிணைவின் முக்கியத்துவம் (Importance of Collaboration in Education)

கல்வி என்பது, தனிநபர்களை வாழ்க்கையில் வெற்றிபெறச் செய்யவும், அவர்கள் சார்ந்த சமூகங்களுக்கு பங்களிக்கவும், சமகாலத்தில் எதிர்கொள்ளும் சவால்களைத் தீர்க்கவும் தயார்படுத்துவதாகும்.

ஆனால் உலகம் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு காணப்படுவதால், நாம் எதிர்கொள்ளும் சவால்களின் சிக்கல் தன்மையானது விரிவடைந்து செல்கின்றது. காலநிலை மாற்றம் (Climate change) முதல் உலகளாவிய சுகாதார நெருக்கடிகள்வரை (Global Health Crisis), தொழில்நுட்ப சீர்குலைவுகள் (Technological disruptions) முதல் சமூக ஏற்றத்தாழ்வுகள்வரை (Social Inequalities), இந்த சவால்களை எந்த ஒரு தனிநபராலோ, அமைப்பாலோ அல்லது தேசத்தாலோ மட்டும் தீர்க்க முடியாது. கல்விக்கும் இது பொருத்தப்பாடுடையது. எந்தவொரு தனி நிறுவனமும் தனியாக 'தரமான கல்வி' என்ற இலக்கை அடைய முடியாது. அதற்கு ஒன்றுபட்ட முயற்சி தேவைப்படுகிறது.

கல்வியில் கூட்டிணைவானது, பல்வேறு கண்ணோட்டங்கள் (Perspectives), நிபுணத்தும் (Expertise) மற்றும் வளங்களை (Resources) ஒன்றிணைக்கிறது. மேலும் வளமான, உள்ளடக்கிய மற்றும் பயனுள்ள கற்றல் சூழல்களை உருவாக்க எமக்கு உதவிபுரிகின்றது. மேலும் ஆசிரியர்களை புதுமைப்படுத்தவும், மாணவர்கள் ஈடுபடவும், சமூகங்கள் தங்கள் எதிர்காலத்தில் முதலீடு செய்யவும் அதிகாரம் அளிக்கிறது.

### கல்வியில் கூட்டிணைவால் ஏற்படக்கூடிய நன்மைகள்

கல்வியில் கூட்டிணைவால் பல்வேறு நன்மைகளை நாம் பெற்றுக்கொள்ள முடியும்.

- மாணவர்களின் வெற்றியை அதிகரிக்க முடியும்
- கற்றல் அனுபவங்களை வளப்படுத்த முடியும்
- சிறந்த தொடர்பாடலை ஏற்படுத்த முடியும்
- பெற்றார் ஈடுபாட்டை அதிகரிக்க முடியும்
- பாடசாலைக் கலாசாரத்தை மேம்படுத்த முடியும்

### கூட்டிணைவை கட்டியெழுப்புதல் (Building Collaborative Partnerships)

தரமான கல்விக்கான கூட்டிணைவு எவ்வாறு இருக்கும்? கல்விச் சூழலின் அனைத்து மட்டங்களிலும் கூட்டிணைவு இடம்பெற வேண்டும்.

1. ஆசிரியர் ஒத்துழைப்பு (Teacher Collaboration)

   வகுப்பறை மட்டத்தில், ஆசிரியர்கள்தான் கல்வியின் இதயமாக கருதப்படுகிறார்கள். ஒன்றாக சேர்ந்து வேலை செய்வதன் மூலமும், சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்து கொள்வதன் மூலமும், ஒருவருக்கொருவர் தொழில்ரீதியாக ஆதரவளிப்பதன் மூலமும், கற்றல் மற்றும் கற்பித்தலின் தரத்தை மேம்படுத்த முடியும். கூட்டாக திட்டமிடல் (Collaborative Planning), சகபாடி வழிகாட்டுதல் (Peer mentoring) மற்றும் தொழில்முறை கற்றல் சமூகங்கள் (Professional learning Communities) என்பன மாணவர்களின் தேவைகளை சிறப்பாக பூர்த்திசெய்யவும் ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்கும் உதவிபுரிகின்றன.

   ஆசிரியர்களின் கூட்டிணைவினால், வகுப்பறைகளுக்கு அப்பால் பரவும் கற்றல் கலாச்சாரத்தை (Culture of learning) கட்டியெழுப்ப முடியும்.

2. மாணவர் கூட்டிணைவு (Student Collaboration)

   கல்வி என்பது ஒரு வழிப்பாதை அல்ல, மாறாக இடைவினையுடன் கூடிய இயக்கத்திற்குரிய செயன்முறையாகும். மாணவர்களும் கூட்டிணைவின் மதிப்பைக் கற்றுக்கொள்ள வேண்டும். படைப்பாற்றல் (Creativity), பிரச்சினை தீர்த்தல் (Problem-solving),

இசைவாக்கமடைதல் (Adaptability), மற்றும் ஒன்றாக வேலை செய்யும் திறன் (Ability to work together) என்பன மாணவர்களுக்கு மிகவும் அவசியமான திறன்களாகும்.

கூட்டுக் கற்றலானது (Collaborative learning) மாணவர்களிடையே, விமர்சன சிந்தனை (Critical Thinking), தொடர்பாடல் திறன்கள் (Communication Skills) மற்றும் ஒத்துணர்வை (Empathy) வளர்க்கின்றது. மாணவர்கள் குழுச்செயற்பாடுகள், விவாதங்கள் மற்றும் பகிரப்பட்ட செயற்றிட்டங்களில் (shared projects) ஈடுபடும்போது, அவர்கள் தங்கள் புரிதலை ஆழப்படுத்துவது மட்டுமல்லாமல், அவர்களின் எதிர்கால வாழ்க்கையில் வெற்றிக்குத் தயாராகவும் செய்கிறார்கள், இது சந்தேகத்திற்கு இடமின்றி பல்வேறு பின்னணிகள் மற்றும் திறன்களைக் கொண்ட ஏனையவர்களுடன் ஒத்துழைத்து செயற்பட வேண்டியிருக்கும்.

3. சமூகம் மற்றும் பெற்றோர் ஈடுபாடு (Community and Parental Engagement)

பாடசாலைகள் ஒரு வெற்றிடத்தில் அமைந்திருக்கவில்லை. மாணவர்களுக்கு தரமான கல்வியை வழங்குவதற்கு பெற்றோர்கள் மற்றும் சமூகங்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமானது. பாடசாலைகள், பெற்றோர்களை பொருத்தமுள்ள வழிகளில் ஈடுபடுத்த வேண்டும், பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகளின் கல்வியில் பங்காளர்களாக வரவேற்கப்படுவதையும் மதிப்பதையும் உணரும் சந்தர்ப்பங்களை உருவாக்க வேண்டும்.

உள்ளூர் வணிகங்கள், இலாப நோக்கற்ற நிறுவனங்கள் மற்றும் கலாச்சார அமைப்புகளுடனான கூட்டுறவானது வளங்களையும் நிஜ உலகக் கண்ணோட்டங்களையும் வகுப்பறைக்குள் கொண்டுவர துணைநிற்கும்.

4. நிறுவனங்களிடையிலான கூட்டிணைவு (Collaboration among the Institutions)

பாடசாலைகள் மற்றும் சமூகங்களுக்கு அப்பாலும் கூட்டிணைவு விரிவடைந்துள்ளது. ஆரம்ப, இடைநிலை மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள் பாடத்திட்டங்களை மறுசீரமைக்கவும், ஆய்வுகளை பகிர்ந்து கொள்ளவும், மாணவர்களுக்கு தடையற்ற பாதைகளை

வழங்கவும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

கொள்கை வகுப்பாளர்கள், கல்வித் தலைவர்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் இணைந்து, பிள்ளைப்பருவத்திலிருந்து உயர்கல்வி மற்றும் அதற்கு அப்பாலும் மாணவர்களின் கற்றல் பயணங்களை ஆதரிக்கும் அமைப்புகளை உருவாக்க வேண்டும். இந்த கூட்டிணைவுகளில் சர்வதேச ஒத்துழைப்பும் இருக்க வேண்டும். உலகளாவிய போக்குகள், ஆய்வு மற்றும் சிறந்த நடைமுறைகளுடன் எமது கல்வி முறைமைகள், இணைக்கப்பட்டுள்ளதை உறுதி செய்ய வேண்டும்.

5. தனியார் துறையுடனான கூட்டிணைவு

இன்றைய உலகில், கல்வி வளர்ச்சியில், தனியார்துறை பெரும்பங்கு வகிக்கிறது. குறிப்பாக தொழில்நுட்ப நிறுவனங்கள், டிஜிட்டல் கருவிகள், தளங்கள் மற்றும் புதுமைகள் மூலம் கற்றலின் எதிர்காலத்தை வடிவமைக்கின்றன. கல்வி நிறுவனங்களுக்கும் தனியார் துறைக்கும் இடையிலான கூட்டாண்மைகள் புதிய பாடத்திட்டங்கள், நிகழ்நிலை கற்றல் வளங்கள் மற்றும் மாணவர்களுக்கான வழிகாட்டுதல் திட்டங்களை உருவாக்குவதற்கு வழிவகுக்கும். இந்த ஒத்துழைப்புகள், வேலை உலகின் வேகமாக வளர்ந்து வரும் தேவைகளுக்கேற்ப கல்வியின் வேகத்தை அதிகரிப்பதையும், மாணவர்கள் எதிர்காலத்திற்குத் தேவையான திறன்களுடன் பொருத்தப்பட்டிருப்பதையும் உறுதி செய்யும்.

### கூட்டிணைவுக்கான சவால்களை வெற்றிகொள்ளல்

கூட்டிணைவு அவசியம் என்றாலும், அதில் பல சவால்கள் உள்ளன. நிர்வாக தடைகள், நிதிநெருக்கடிகள், மாறுபட்ட முன்னுரிமைகள் மற்றும் மாற்றத்திற்கான எதிர்ப்பு ஆகியவை கூட்டிணைவை தடுக்கலாம். ஆனால் இந்த சவால்கள் வெற்றிகொள்ள முடியாதவை அல்ல. திறந்த மனப்பாங்கு கலாச்சாரத்தை நாம் வளர்த்துக் கொள்ளவதன் மூலம் கூட்டிணைவுக்கான சவால்களை வெற்றிகொள்ள முடியும்.

### தொழில்நுட்பத்தின் பங்கு

இன்றைய கல்வியில் கூட்டிணைவுக்கான மிகவும் சக்திவாய்ந்த கருவிகளில் ஒன்றாக தொழில்நுட்பம் விளங்குகின்றது. மாணவர்கள்,

ஆசிரியர்கள் மற்றும் சமூகங்களுக்கு இடையிலான இடைவெளிகளை தொழில்நுட்பம் குறைக்கின்றது. தொலைதூர தொடர்பு மற்றும் கூட்டிணைவை எளிதாக்குகிறது.

நிகழ்நிலை கற்றல் தளங்கள் (Online learning platforms), மெய்நிகர் வகுப்பறைகள் (Virtual Classrooms), கூட்டிணைவு மென்பொருள் (Collaborative software) மற்றும் எண்ணிம வளங்கள் (Digital Resources) என்பன, மாணவர்கள் மற்றும் கல்வியாளர்கள் புதிய மற்றும் புதுமையான வழிகளில் ஒன்றாக இணைந்து வேலை செய்ய அனுமதிக்கின்றன. இருப்பினும், இந்த தொழில்நுட்பங்களுக்கு சமமான அணுகலை உறுதி செய்வது அவசியமானதாகும்.

**முடிவுரை**

கல்வி முறைமையின் ஒவ்வொரு மட்டத்திலும் கூட்டு முயற்சிக் கலாச்சாரத்தை வளர்ப்பதன் மூலம், அனைத்து மாணவர்களுக்கும், அவர்களின் பின்னணி அல்லது இருப்பிடம் எதுவாக இருந்தாலும், அவர்கள் தகுதியான உயர்தர கல்வியை அணுகுவதை உறுதி செய்ய முடியும்.

தரமான கல்விக்கான கூட்டு முயற்சி ஒரு அவசியமான தேவைப்பாடாகும். இது ஒரு பகிரப்பட்ட பொறுப்பாகும், இதற்கு அர்ப்பணிப்பு, படைப்பாற்றல் மற்றும் ஒரு பொதுவான இலக்கை நோக்கி ஒன்றாக வேலை செய்வதற்கான விருப்பம் என்பன தேவையாகும். கூட்டு முயற்சியை ஏற்றுக்கொள்வதன் மூலம், அனைத்து கற்பவர்களையும் வெற்றிக்குத் தயார்படுத்தும், சமூக சமத்துவத்தை வளர்க்கும் மற்றும் அனைவருக்கும் பிரகாசமான எதிர்காலத்திற்கு பங்களிக்கும் ஒரு கல்வி முறையை உருவாக்க முடியும்.

**உசாத்துணைகள்**


1. UNESCO (2017) World Teachers' Day-5th October 2017, Retrieved from https://en.unesco.org/themes/teachers/world-teachers-day on 23-10-2017.
2. McKeown,R.(2002) Education for Sustainable Development Toolkit, Energy, Environment and Resources Center University of Tennessee,USA, http://www.esdtoolkit.org

3. Sedera,M(2010), Knowledge economy and general education, Economic Review, People Bank.
4. John Woollard, http://www.pgce.soton.ac.uk/IT/Curriculum /ICTAC/ESD
5. UNESCO(2010), Teaching and Learning for a Sustainable Future, A multimedia teacher education programme, http://www.unesco.org/education/tlsf/
6. கல்வி அமைச்சு(2017), இலங்கைப்பாடசாலைக்கல்வித்துறையின் ஆய்வுகள் தினம் (Research Day) - மார்ச் - 15, இசுறுபாய, பத்தரமுல்ல.

# 04 நிலைபேண்தகு அபிவிருத்திக்கான இலக்குகள்: ஒருங்கிணைந்த அணுகுமுறை – சர்வதேச பயிற்சி அனுபவங்கள்

ஐக்கிய நாடுகள் சபையினால் 2015 ஆம் ஆண்டு 25 ஆந் திகதி 'எங்கள் உலகை உருமாற்றுதல் (Transforming of our World) என்ற தாரக மந்திரத்திற்கு அமைவாக 17 நிலைபேண்தகு அபிவிருத்திக்கான இலக்குகள் உருவாக்கப்பட்டது. இந்த இலக்குகளை நாம் 2030 ஆம் ஆண்டிற்குள் அடைய வேண்டியுள்ளது.




இந்தியாவின் தலைநகர் புதுடில்லியிலுள்ள தேசிய தொழிலாளர் பொருளாதார ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் (National Institute of Labor Economic Research and Development - NILERD) ஒகஸ்ட் மாதம்

7ஆந் திகதி தொடக்கம் 20 ஆந் திகதி வரையிலான இரண்டு வாரகாலம் ‘நிலைபேண்தகு அபிவிருத்திக்கான இலக்குகள்: ஒருங்கிணைந்த அணுகுமுறை’ (Sustainable Development Goals: Integrated Approach) என்ற தலைப்பிலான சர்வதேசரீதியிலான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (International Training Programme) நடைபெற்றது. இந்திய அரசாங்கம் இப்பயிற்சிநெறிக்கான முழுமையான அனுசரணையை வழங்கியிருந்தது.

இப்பயிற்சிநெறியில் இலங்கை, நேபாளம், அல்ஜீரியா, கோட் டிவைறே, குறேசியா, ஈக்குவடோர், எகிப்து, ஈக்குரோறியல் கினி, எதியோப்பியா, கானா, மொறிசியஸ், நைஜீறியா, பனாமா, தென்சூடான், ஸ்ரீநாம, தான்சானியா, வியட்நாம், சம்பியா மற்றும் சிம்பாபே ஆகிய 19 நாடுகளில் இருந்து 29 பேர் பங்குபற்றியிருந்தனர். இவர்கள் பல்வேறுபட்ட தொழில்சார் பின்னணியை கொண்டிருந்தனர்.

இலங்கையில் இருந்து பங்குபற்றிய நால்வருள் ஒருவராக நானும் பங்குபற்றியிருந்தேன். இப்பயிற்சிநெறியின் ஊடாக நிலைபேண்தகு அபிவிருத்திக்கான இலக்குகள் தொடர்பாகவும், அவற்றை அடைவதற்கு பல்வேறு நாடுகள் முன்னெடுத்துள்ள செயற்பாடுகள் தொடர்பாகவும் அறிந்துகொள்ள முடிந்தது. மேலும் நிலைபேண்தகு அபிவிருத்திக்கான இலக்குகளை உள்ளூர்மயப்படுத்தல் (Localization of SDGs) மற்றும் அவற்றிற்கான பாதீட்டினை தயாரித்தல் (Budgeting SDGs) தொடர்பாகவும் அமர்வுகள் இடம்பெற்றன. நிலைபேண்தகு அபிவிருத்திக்கான இலக்குகளை அடைந்துகொள்வதில், முக்கிய பங்காளர்களது வகிபாகங்கள் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது.




இப்பயிற்சிநெறியின் ஊடாக நிலைபேண்தகு அபிவிருத்திக்கான இலக்குகள் தொடர்பான இந்தியாவின் சிறந்த நடைமுறைகளை (Best

Practices) நேரடியாக அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இந்தியாவின் தேசிய தொழில்நுட்ப புத்தாக்க நிறுவனத்திற்கான (National Institute of Technological Innovation - NITI) களவிஜயத்தின் போது நிலைபேண்தகு அபிவிருத்திக்கான இலக்குகளை அடைந்து கொள்வதற்காக இந்தியா முன்னெடுத்துள்ள செயற்பாடுகளை விரிவாக அறிந்து கொள்ள முடிந்தது.

இங்கு காணப்படுகின்ற தேசிய தரவுத்தள அறை (National Data Portal Room) புதுமையானதாகவும் முன்மாதிரியானதாகவும் எனக்குத் தோன்றியது. இந்தியாவின் சகல தரவுகளும் இந்த எண்ணிம அறையில் காணப்படுகின்றது. தேசியரீதியாக, மாநிலரீதியாக மற்றும் பஞ்சாயத்துரீதியான (உள்ளூராட்சிமன்றம்) சகல தரவுகளையும் இங்குள்ள தொடுதிரையில் விரைவாக பெற்றுக்கொள்ள முடியும். மாதாந்தம் தரவுகள் இற்றைப்படுத்தப் படுகின்றது.

மத்திய சுற்றாடல், காடுகள் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான அமைச்சிற்கான (Ministry of Environment, Forestry and Climate Change) களவிஜயத்தின் போது காலநிலை செயற்பாடுகள் (Climate action), நீரின் கீழான உயிர்வாழ்க்கை (Life below water), மற்றும் தரையின் மேலான உயிர்வாழ்க்கை (Life on land) ஆகிய நிலைபேண்தகு அபிவிருத்திக்கான இலக்குகள் தொடர்பாக இந்தியா முன்னெடுத்துள்ள செயற்பாடுகள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது. அமைச்சுக்கான கட்டடம் முற்றுமுழுதாக சூழல் நேயமானதாக அமைக்கப்பட்டுள்ளமையை சிறந்த முன்னுதாரணமாகும்.

நிலைபேண்தகு அபிவிருத்திக்கான இலக்கு - 5 (பாலின சமத்துவம்) மற்றும் இலக்கு - 11 (பேண்தகு நகரங்கள் மற்றும் சமுதாயங்கள்) தொடர்பான அமர்வுகள் இராஜஸ்தான் மாநிலத்தின் ஜெயப்பூர் நகரத்திலுள்ள 'Jaipuria Institute of Management' என்ற உயர்கல்வி நிறுவனத்தில் நடைபெற்றது. தொடர்ந்து ஜெயப்பூர் மன்னர்களின் கோட்டையையும் பார்வையிட முடிந்தது.

இந்தியாவின் உத்தரப்பிரதேச மாநிலத்தின் ஆக்ராவில் அமைந்துள்ள உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மகாலினை பார்வையிடவும் ஒருநாள் ஒதுக்கப்பட்டிருந்தது. இன்னொருநாள் NILERD இல் ஒழுங்கமைக்கப்பட்ட இந்தியாவின் சுதந்திரதின கொண்டாட்டத்தில் பங்குகொள்ள அழைக்கப்பட்டிருந்தோம்.

இந்தியாவின் தலைநகர் புதுடில்லியிலுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களான செங்கோட்டை (Red Fort), 'இந்தியா கேட்' (India Gate) மற்றும் கியூரப் மினார் (Qutub Minar) என்பவற்றை நேரடியாக சென்று பார்வையிட்டோம்.




மேலும் புதுடில்லியிலுள்ள தாமரை கோயில் (Lotus Temple) என்ற ஆன்மீக நிலையமானது அனைத்து மதத்தினரும் தமது வாழிபாட்டை மேற்கொள்ளக்கூடியதாக அமைக்கப் பட்டிருந்தது. சீக்கிய மதத்தவர்களது வழிபாட்டு தலத்தையும் தரிசித்தோம்.

பயிற்சியின் ஆரம்ப நாளன்று பத்தொன்பது நாட்டவர்களும் தமது நாடுகள் தொடர்பான முன்வைப்புக்களை மேற்கொண்டிருந்தனர். இறுதியாக நடைபெற்ற குழு முன்வைப்புக்களில் நிலைபேண்தகு அபிவிருத்திக்கான இலக்குகள் தொடர்பாக நாடுகளின் நிலை மற்றும் அவற்றை அடைவதிலுள்ள சவால்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பபட்டது. இந்த பயனுள்ள சர்வதேசரீதியிலான பயிற்சி நெறியை வழங்கிய இந்திய அரசிற்கும் சிறந்த உபசரிப்பை வழங்கிய இந்திய தேசிய தொழிலாளர் பொருளாதார ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்திற்கும் (NILERD) எமது நன்றிகள்.

## இயல் - 02

# 05 இருபத்தியோராம் நூற்றாண்டு ஆசிரியர்களுக்கான தேர்ச்சிகள் மற்றும் திறன்கள்

பல்கலைக்கழகத்தில் கற்பித்தாலென்ன, தேசிய கல்வியியல் கல்லூரியில் கற்பித்தாலென்ன அல்லது பாடசாலையில் கற்பித்தாலென்ன, கற்பித்தல் பணியில் ஈடுபட்டுள்ள நாம் அனைவரும் ஆசிரியர்களே. நாம் இருபத்தியோராம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். உலகளாவியரீதியில், வகுப்பறைகள் பல மாற்றங்களுக்குட்பட்டு வருகின்றன. கற்பித்தலுக்கு பல தேர்ச்சிகள் மற்றும் திறன்கள் தேவைப்படுகின்றன. இச்சந்தர்ப்பத்தில், தற்கால கல்வியுலகிற்கு பொருத்தமான தேர்ச்சிகளையும் திறன்களையும் ஆசிரியர்களாகிய நாம் கொண்டிருக்கின்றோமா? எனச்சிந்தித்துப்பார்ப்பது பொருத்தமானது என நான் நினைக்கின்றேன். நானும் ஒரு ஆசிரிய கல்வியியலாளன் என்றவகையிலும், ஆசிரியர்களுக்கு கற்பிப்பவன் என்றரீதியிலும், நாம் அனைவரும் எமது தேர்ச்சிகள் மற்றும் திறன்களை மீள்பரிசீலனைக்கு உட்படுத்துவது அவசியமானதாகும்.

### இருபத்தியோராம் நூற்றாண்டு கற்றலுக்கு மாணவர்களை தயார்ப்படுத்தல்

நாம் இருபத்தியோராம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த நூற்றாண்டில் வெற்றிகரமாக வாழ்வதற்கு பல திறன்கள் எமக்கு தேவைப்படுகின்றன. கொவிட் - 19 இன் பின்னரான சூழலில் கற்றல் - கற்பித்தல் செயற்பாடு முழுமையாக மாற்றமடைந்து விட்டது. இலங்கையின் பாடசாலைக்

கல்வியில் 2023 ஆம் ஆண்டு தொடக்கம் புதிய கல்விச் சீர்திருத்தம் அறிமுகம் செய்யப்பட உள்ளது. இப்புதிய சீர்திருத்தம், இருபத்தியோராம் நூற்றாண்டு கற்றலுக்கு மாணவர்களை தாயார் செய்யும் வகையில் வடிவமைப்பு செய்யப்பட்டுள்ளது. இதனை அமுலாக்கம் செய்வதில் ஆசிரிய கல்வியியலாளர்கள், உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் பிரதான பங்கு வகிக்கின்றனர்.

**21 ஆம் நூற்றாண்டு திறன்களை எவ்வாறு மாணவர்களுக்கு கற்பிப்பது?**

1.) பொருத்தக்கூடியதாக ஆக்கிக் கொள்ளல்
2.) பாடத்தின் ஊடாக கற்பித்தல்
3.) ஒரே நேரத்தில் தாழ்மட்ட மற்றும் உயர்மட்ட சிந்தனைத் திறன்களை விருத்தி செய்தல்.
4.) கற்றல் இடமாற்றத்தினை ஊக்கப்படுத்தல்.
5) கற்றலுக்காக கற்றல் (learn to learn) தொடர்பாக மாணவர்களுக்கு கற்பித்தல்.
6) மாணவர்களின் தவறான புரிதல்களை, நேரடியாக தீர்த்துவைத்தல்.

**தற்காலத்தில் ஆசிரியர்கள், அவர்களது தேர்ச்சிகள் மற்றும் திறன்கள் தொடர்பாக எதிர்நோக்கும் சவால்கள்**

தற்காலத்தில் உலகளாவியரீதியில் ஆசிரியர்கள் பல்வேறு சவால்களை தொடர்ந்து எதிர்நோக்கி வருகின்றனர். ஆசிரியர் பற்றாக்குறை (Staff shortage), குறைந்தளவிலான பயிற்சி (Poor training) மற்றும் தாழ்நிலை அங்கீகாரம் (Low status) என்பன அவற்றுள் முக்கியமானவை என UNESCO இனங்கண்டுள்ளது.

இலங்கையிலும் ஆசிரியர்கள் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கின்றது. வகுப்பறை மட்டம், பாடசாலை மட்டம் மற்றும் சமூக மட்டத்திலான சவால்களை அவர்கள் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

வகுப்பறைமட்டத்தில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்களாக கலைத்திட்ட வரையறை, மாணவர் பல்வகைமை, வளப்பற்றாக்குறை, விடயதானம் தொடர்பான அறிவு (Subject content knowledge) மற்றும் கற்பித்தலியல் தொடர்பான அறிவுக் (Pedagogical content knowledge) குறைபாடு, தொழில்நுட்ப நிபுணத்துவமின்மை மற்றும் இடைவினையுறவுப் பிரச்சினைகள் என்பன காணப்படுகின்றன.

### ஆசிரியர்கள் கொண்டிருக்க வேண்டிய தேர்ச்சிகள்

தற்கால ஆசிரியர்கள் கொண்டிருக்க வேண்டிய தேர்ச்சிகள் பலவாகும். அவற்றை பின்வருமாறு இலங்கை கல்வியமைச்சு (2015) வகைப்படுத்தி குறிப்பிடுகின்றது.

1. கற்றல் பேறுகளை அடைவதற்காக விளைதிறனாக செயற்படல். இதன்கீழ் சகல ஆசிரியர்களும்,
    - கற்றல் - கற்பித்தல் மற்றும் மதிப்பீட்டுச் செயற்பாடுகளை சிறப்பாகத்திட்டமிடல்.
    - கற்றல் - கற்பித்தல் மற்றும் மதிப்பீட்டுச் செயற்பாடுகளை விளைதிறன்மிக்கதாக செயற்படுத்தல்.
    - மாணவர்கள் தேர்ச்சிகளை பெறுகின்றவகையில் கணிப்பீடு, மதிப்பீடு மற்றும் பின்னூட்டலை மேற்கொள்ளல்.
2. தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவத் தேர்ச்சிகளை வெளிப்படுத்தல். இதன்கீழ் சகல ஆசிரியர்களும்,
    - பாடசாலையின் இலக்கு மற்றும் நோக்கக்கூற்றுக்கு ஏற்றவாறு செயற்படுதல்.
    - விளைதிறன் தொடர்பான தேர்ச்சியை வெளிப்படுத்தல்
    - ஆலோசனை மற்றும் வழிகாட்டல் விடயங்களின்போது தமது பொறுப்பை சிறப்பாக நிறைவேற்றல்.
    - தமது விடயங்களுக்குரிய முகாமைத்துவத் தகவல்களின் அறிக்கைகளை முறையாகப்பேணல்.
3. தொழிற்றகமைமிக்கவராக செயலாற்றல். இதன்கீழ் சகல ஆசிரியர்களும்,
    - தொழிற்றகமையை உறுதிப்படுத்திக்கொள்ளல்.
    - இருக்கின்ற சட்டதிட்டங்களின்படி செயற்படுதல்.
    - பண்பாடுகள் மற்றும் கலாசார விடயங்களுக்கு மதிப்பளித்து முன்மாதிரியான நடத்தைக்கோலங்களை வெளிப்படுத்தல்.
    - சமூகத்தில் தொழில்வாண்மை மிக்கவராக ஏற்றுக்கொள்ளப்படும் விதத்தில் செயற்படுதல்.
4. இணைப்பாடவிதான செயற்பாடுகளில் நேரடியான பங்களிப்பை வழங்க வேண்டும். இதன்கீழ் சகல ஆசிரியர்களும்,

- மாணவர்களின் முழுமையான ஆளுமை விருத்திக்கு உதவுகின்ற விதத்தில் பல்வேறு இணைப்பாடவிதான வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு பங்களிப்பு செய்தல்.
- மாணவர்களின் இயலுமைகளை இனங்கண்டு சகல மாணவர்களையும் பல்வகையான இணைப்பாடச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தல்.
- இணைப்பாடச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற மாணவர்களின் கல்விச்செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுவதை குறைப்பதற்கு வழிசெய்தல்.

**ஆசிரியர்கள் கொண்டிருக்கவேண்டிய இருபத்தியோராம் நூற்றாண்டுத் திறன்கள் (21st Century Skills)**

சகல ஆசிரியர்களும் பின்வரும் இருபத்தியோராம் நூற்றாண்டுத் திறன்களை கொண்டிருக்கவேண்டியது அவசியமானதாகும்.

1. கற்றல் திறன்கள் (Learning Skills)
    - திறனாய்வுச்சிந்தனை (Critical Thinking) - பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் காணுதல்
    - படைப்பாற்றல் (Creativity) - Thinking outside the box
    - கூட்டாகச்செயற்படல் (Collaboration) - ஏனையவர்களுடன் பணியாற்றல்
    - தொடர்பாடல் (Communication) – ஏனையவர்களுடன் உரையாடல்
2. எழுத்தறிவுத்திறன்கள் (literacy skills)
    - தகவல் எழுத்தறிவு (Information literacy) – எண்ணக்கருக்கள், படங்கள், புள்ளி விபரங்கள் மற்றும் தரவுகளை புரிந்துகொள்ளல்.
    - ஊடக எழுத்தறிவு (Media literacy)- Understanding the methods and outlets in which information is published.
    - தொழில்நுட்ப எழுத்தறிவு (Technology literacy) - Understanding the machines that make information age possible.
3. வாழ்க்கைத்திறன்கள் (Life Skills)
    - நெகிழ்ச்சித்தன்மை (Flexibility) - Deviating from plans as needed.
    - தலைமைத்துவம் (Leadership) - Motivating a team to accomplish a goal.

- ஆரம்பித்தல் (Initiative) - Starting projects, strategies, and plans on one's own
- உற்பத்தித்திறன் (Productivity) - Maintaining efficiency in an age of distractions
- சமூகத்திறன்கள் (Social Skills) - Meeting and networking with others for mutual benefit.

**ஆசிரியர்களும் தகவல் தொழில்நுட்ப தேர்ச்சியும் (Teachers and IT competency)**

தற்கால 21ம் நூற்றாண்டில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் அதீத வளர்ச்சி அடைந்துள்ளது. கற்றல்– கற்பித்தல் செயற்பாடுகளில் இதன் பிரயோகம் அதிகரித்துள்ளது. அந்த வகையில் இதன் பிந்திய பரிமாணமாக 'திறன்' அல்லது 'மெய்நிகர்' வகுப்பறைகளைப் (SMART; Classrooms) பயன்படுத்தி கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதற்கேற்ப ஆசிரியர்கள் தமது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவையும் தேர்ச்சியையும் விருத்திசெய்து கொள்வது காலத்தின் கட்டாயமாகும்.

**சுயநெறிப்படுத்தப்படுத்தப்பட்ட கற்பவர்களாக ஆசிரியர்கள் (Teachers as self-regulated learners)**

ஆசிரியர்கள் சுயநெறிப்படுத்தப்படுத்தப்பட்ட கற்றலுக்கான ஆற்றல்களான, கற்றல் இலக்குகளை உருவாக்குதல், திட்டமிடல், சுயஊக்கல், சுயகவனிப்பு, சுயகட்டுப்பாடு, சுயகற்றல் உத்திகளின் பயன்பாடு, சுயமேற்பார்வை, பொருத்தமான புலமைசார்ந்த உறவுகளை சுயமாகத் தேடல், சுய பிரதிபலிப்பு மற்றும் சுயமதிப்பீடு அகியவற்றை கொண்டிருக்க வேண்டும். மேலும் பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

- கற்றலுக்கு தேவையான ஆலோசனைகளை புலமைச்சிறப்புமிக்க பலரிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு முனைதல்.
- கற்றலுக்கான சாதகமான சூழலை தாமே உருவாக்க முனைதல்.
- சுயநெறிப்படுத்தப்படுத்தப்பட்ட கற்றல் செயற்றிறன்களைப் பெற்றிராத சகபாடிகளுடனான தொடர்புகள் இயல்பாகவே குறைதல்.
- அடைவுப்பரீட்சைகளில் உயர் புள்ளிகளைப்பெறுதல்.
- சுயகற்றலில் உயர் நம்பிக்கை கொண்டிருத்தல்.

## நவீன ஆசிரியர்களுக்குத் தேவையான கற்பித்தல் திறன்கள் (Skills needed for modern teachers)

தற்கால ஆசிரியர்கள் பின்வரும் கற்பித்தல் திறன்களை கொண்டிருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

- பாடத்தை அறிமுகஞ்செய்யும் திறன்கள் (Introduction skills)
- விளங்கப்படுத்தும் திறன்கள் (Skills of Explanation)
- வினாக்களை வினாவும் திறன்கள் (Skills of probing questions)
- கற்பித்தல் துணைக்கருவிகளை பயன்படுத்தும் திறன்கள் (Skills of using teaching aids) மற்றும்
- பாடத்தை நிறைவுசெய்யும் திறன்கள் (Skills of closure) என்பவற்றை கொண்டிருக்க வேண்டும்.

மேலும் 21ம் நூற்றாண்டு ஆசிரியரானவர் இசைவாக்கிக்கொள்பவர், சிறந்த தொடர்பாளர், வாழ்க்கை நீடித்த கற்போன், சிறந்த தலைவர், சிறந்த முன்மாதிரி, கூட்டாகப்பணிபுரிபவர், இடர்களை எதிர்கொள்பவர், சிறந்த கதை கூறுபவர், வடிவமைப்பாளர், சிறந்த கலைஞர், உறவுகளை கட்டியெழுப்புபவர் மற்றும் புத்தாக்குனர் ஆவார்.

## ஆசிரியர்களும் கல்வி ஆராச்சியும் (Teachers and Educational Research)

ஆசிரியர்கள் தமது பணியுடன் தொடர்புபட்டவகையில் கல்வி ஆய்வுகளில் ஈடுபடவேண்டுமென தற்காலத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது. பாடசாலைகளில் கற்றல்-கற்பித்தல் மற்றும் நிர்வாக மேம்பாட்டுக்கு உதவும் வகையில் செயல்நிலை ஆய்வுகளில் அதிபர்கள், ஆசிரியர்கள், ஆசிரிய கல்வியியலாளர்கள் மற்றும் கல்விசார் ஆளணியினர் ஈடுபடவேண்டும் என தற்கால கல்வி முறைமை எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கைப் பாடசாலைக் கல்வித்துறையின் ஆய்வுகள் தினம், முதன் முதலாக 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் திகதி கொண்டாடப்பட்டது. அந்த ஆண்டு ஆய்வுதின எண்ணக்கருவானது “கல்வித்துறையின் சிறந்த அடைவுகளை எட்டுவதற்கான ஆய்வுகள்” (Research for Achieving Excellence in Education) என்பதாகும்.

கல்வித்துறையின் அளவுரீதியானதும் (Quantitative) பண்பு ரீதியானதுமான (Qualitative) அபிவிருத்திக்கு ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு தீர்மானமெடுத்தல் அவசியமானதாகும். ஆய்வுகள் தினத்தன்று அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆய்வில் ஈடுபடுத்துவதற்கே எதிர்பார்க்கப்படுகின்றது. இதன்மூலம் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் பரிசோதனை ஆய்வுகள் (Experimental Research) மற்றும் சமூகம்சார் ஆய்வுகளில் (Social Research) ஈடுபட்டு, ஆய்வுகளை அடிப்படையாகக்கொண்டு அவர்களது வாழ்க்கையை வடிவமைத்துக்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

### சுதந்திரமாக கற்பித்தல் (Teaching in Freedom)

சுதந்திரமாக கற்பித்தல் என்றால் என்ன? தம்மிடம் கல்விகற்கின்ற அனைத்து கற்போர்களுக்கும் வினைத்திறனான, தனித்துவமான மற்றும் சமத்துவமான கல்வியை வழங்குவதற்காக மிகப்பொருத்தமான கற்பித்தல் முறைகளையும் (teaching methods), அணுகுமுறைகளையும் (approaches) தெரிவுசெய்யும் சுதந்திரமே அதுவாகும். மேலும் நாட்டில் அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டாலும், நிலையில்லாத உறுதியற்ற சூழ்நிலைகளிலும் ஆசிரியர்கள் பாதுகாப்பாக கற்பிக்ககூடியதாக இருக்கவேண்டும் என்பதே சுதந்திரமாக கற்பித்தல் என்பதன் அர்த்தமாகும்.

முன்பள்ளிகள், பாடசாலைகள், ஆசிரிய கல்வி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கு கல்விசார் சுதந்திரம் (Academic Freedom) என்பது மிக அவசியமானது. ஆனால் தற்காலத்தில் பெரும்பாலான நாடுகளில் ஆசிரியர்களின் கல்விசார் சுதந்திரம் என்பது அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது. இலங்கையிலும் ஆசிரியர்களின் கல்விசார் சுதந்திரம் பல்வேறு சவால்களால் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது.

### ஆசிரியர்களை வலுவூட்டல் (Empowering Teachers)

உலகளாவியரீதியில் ‘ஆசிரியர்களை வலுவூட்டல்’ என்பது தொடர்பாக தொடர்ச்சியாக யுனஸ்கோவினால் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. ‘ஆசிரியர்களை வலுவூட்டல் மற்றும் பேண்தகு சமூகங்களை கட்டியெழுப்பல் (Empowering Teachers, Building Sustainable Societies)’ என்பது 2015 ஆம் ஆண்டின் UNESCO வின் ஆசிரியர்தின மகுட வாசகமாகும். அதேபோல

'ஆசிரியர்களுக்கு பெறுமதியளித்தல் மற்றும் அவர்களின் அந்தஸ்சை உயர்த்தல் (Valuing Teachers, Improving their status)' என்பது 2016 ஆம் ஆண்டின் ஆசிரியர்தின மகுட வாசகமாகும். இதிலிருந்து, உலகளாவியரீதியில் 'ஆசிரியர்களை வலுவூட்டல்' என்பது தொடர்பாக தொடர்ச்சியாக யுனஸ்கோவினால் வலியுறுத்தப்பட்டு வருவதை எம்மால் உணரக்கூடியதாக உள்ளது.

முன்பள்ளிகள், பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர்கள், நிபுணத்துவ அறிவு, விசேட திறன்கள் மற்றும் கற்பித்தல் தேர்ச்சிகள் என்பவற்றை கொண்டிருக்க வேண்டும்.

**தற்காலத்தில் ஆசிரியர்களை வலுவூட்டுவதற்காக முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள்**

தற்காலத்தில் ஆசிரியர்கள் முன்சேவைப் (Pre service training) பயிற்சியினூடாகவும் சேவைக்காலப் பயிற்சிகளினூடாகவும் (In-service trainings) வலுவூட்டப்படுகிறார்கள். இலங்கையில் ஆசிரிய முன்சேவைப் பயிற்சிகளை வழங்குவதற்காக இருபது தேசிய கல்வியியல் கல்லூரிகள் (National College of Education) அமைக்கப்பட்டுள்ளன. இவை தேசிய கற்பித்தல் சான்றிதழை (National Diploma in Teaching) வழங்குகின்றன.

சேவைக்காலப் பயிற்சிகளினை, கல்வி அமைச்சு, மாகாணக்கல்வித் திணைக்களங்கள், வலயக்கல்வி அலுவலகங்கள், ஆசிரிய கலாசாலைகள் (Teachers' training colleges), ஆசிரிய மத்திய நிலையங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களிலுள்ள கல்விப்பீடங்களும் கல்வியில் துறைகளும் ஆசிரியர்களுக்கு வழங்குகின்றன. தற்போது ஆசிரியர் சேவையின் தடைதாண்டலுக்கு, ஆசிரிய வாண்மைவிருத்தியுடன் தொடர்புடைய குறிப்பிட்ட மொடியூல்களை பூர்த்திசெய்தல் கட்டாயமானதாகும்.

பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை அபிவிருத்திச் செயற்பாடுகள் (School Based ProfessionalTeacher Development - SBPTD) பாடசாலைகளில் முன்னெடுக்கப்படுகின்றன.

## இலங்கையில் ஆசிரியர்களை வலுவூட்டலிலுள்ள குறைபாடுகள்

- தேசிய மட்டத்திலும், மாகாண மட்டத்திலும் கணிசமான எண்ணிக்கையான ஆசிரியர்கள் இன்னும் பயிற்றப்படாது பாடசாலைகளில் கற்பித்துக் கொண்டிருக்கின்றனர்.
- ஆசிரியசேவை பிரமாணக்குறிப்பிற்கு முரணாக, அடிப்படை கல்வித்தகைமையற்றவர்கள் தொடர்ச்சியாக ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்கப்படுகின்றனர்.
- வலயமட்டத்தில் சேவைக்காலப் பயிற்சிகள் வழங்குவற்கான ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் பாடரீதியான உதவிக்கல்விப் பணிப்பாளர்களது பற்றாக்குறை பல கல்விவலயங்களில் காணப்படுகின்றது.
- வலயமட்டத்தில் சேவைக்காலப் பயிற்சிகள் வழங்குவற்கான ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் பாடரீதியான உதவிக்கல்விப் பணிப்பாளர்களில் கணிசமான எண்ணிக்கையானவர்கள் தமது வாண்மையை இற்றைப்படுத்திக்கொள்ளாமை.
- மாகாணமட்டத்தில் மற்றும் வலயமட்டத்தில் ஒழுங்கமைக்கப்படும் சில சேவைக்காலப் பயிற்சிகள் வினைத்திறனற்றவையாக நடாத்தப்படுகின்றது.
- மாறிவரும் காலத்திற்கேற்ப பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆசிரிய கல்வி நிறுவனங்கள் தமது கலைத்திட்டங்களை மாற்றியமைக்காமை.
- பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆசிரிய கல்வி நிறுவனங்களில் கடமையாற்றும் விரிவுரையாளர்கள் மற்றும் ஆசிரிய கல்வியியலாளர்களில் கணிசமான எண்ணிக்கையானவர்கள் கால மாற்றத்திற்கு ஏற்ப தமது வாண்மையை இற்றைப்படுத்திக் கொள்ளாமை.
- பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்திச் செயற்பாடுகள் எதிர்பார்த்த அளவில் பாடசாலைகளில் முன்னெடுக்கப்படாமை.
- அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்விசார் ஆளணியினர் தமது ஆசிரிய வாண்மைவிருத்திக்கற்கைநெறிகளில் மேற்கொள்ளும் ஆய்வுகளின் முடிவுகள் சமூகத்தை சென்றடைவதில்லை
- பாடசாலைகளில் நடைபெறும், ஆசிரியர்களின் உள்வாரி மற்றும்

வெளிவாரி மதிப்பீடுகள் ஆசிரியர்களின் பணிமேம்பாட்டுக்கு உதவும்தன்மை குறைவாகக் காணப்படுகின்றது.

**எதிர்காலத்தில் ஆசிரியர்களை சிறந்த முறையில் வலுவூட்டுவதற்கான சிபார்சுகள்**

1. பின்வருவனவற்றுள் இருபத்தியோராம் நூற்றாண்டு திறன்கள் (21st Century Skills) தொடர்பாக எல்லா ஆசிரியர்களும் வலுவூட்டப்பட வேண்டும்.
    - கற்றல் மற்றும் புதுமைத்திறன்கள் (Learning and innovation skills)
    - டிஜிற்றல் எழுத்தறிவுத்திறன்கள் (Digital literacy skills)
    - தொழில் மற்றும் வாழ்க்கைத்திறன்கள் (Career and life skills)
2. பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்திச் செயற்பாடுகள், ஆசிரியர்களின் பங்களிப்புடன், சிறப்பான முறையில் திட்டமிடப்பட்டு முன்னெடுக்கப்பட வேண்டும்.
3. ஆசிரியர்கள் தமது கற்பித்தல் தொடர்பாக சகபாடி மற்றும் சுயமதிப்பீட்டை அடிக்கடி மேற்கொள்ள வேண்டும்.
4. கல்வி அமைச்சு வெளியிட்ட சுற்றறிக்கை இலக்கம் 6/2013 இற்கு அமைவாக தற்போது பாடசாலைகளில் “பாடசாலை ஆலோசனை மற்றும் வழிகாட்டல் வேலைத்திட்டங்கள்” முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வேலைத்திட்டங்களில் மாணவர்களின் உளநலன் மேம்பாடு மட்டுமன்றி ஆசிரியர்களின் உளநலன் மேம்பாட்டுக்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட வேண்டும். இதன்மூலம் ஆசிரியர்களிடமிருந்தும் மாணவர்களிடமிருந்தும் உச்ச அளவு வினைத்திறனைப்பெற்றுக்கொள்ள முடியும்.
5. ஆசிரியர்கள் பொருளாதாரரீதியாக வலுவூட்டப்பட வேண்டும். வாழ்க்கைச்செலவு அதிகரிப்புஏற்ப அவர்களது வேதனம் அதிகரிக்கப்பட வேண்டும்.

**முடிவுரை**

இலங்கையில் நடைபெற்ற நீண்ட உள்நாட்டு யுத்தத்தில் அதிகளவில் பாதிப்பிற்குள்ளானது வடக்கு மாகாணமாகும். இதனால் எமது பாரம்பரியச்சொத்தான கல்வியில் பல பின்னடைவுகளைச்சந்திக்க நேர்ந்துள்ளது. அண்மைக்கால பொதுப்பரீட்சை அடைவு வீழ்ச்சிகள் அதற்கு

கட்டியம் கூறுவனவாக அமைந்துள்ளன. இந்த யதார்த்த நிலையை கல்விசார் சமூகத்தினர் மற்றும் பொதுமக்கள் அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும். ஒருவரையொருவர் குற்றம்சாட்டிக்கொண்டு காலத்தைப்போக்காது, கல்வி மேம்பாட்டுக்கான நடவடிக்கைகளில் ஒற்றுமையாக ஈடுபடுவோம். கால மாற்றத்திற்கு ஏற்ப ஆசிரியர்கள் தம்மை இற்றைப்படுத்திக்கொள்ள வேண்டும். கல்வியமைச்சு மற்றும் ஆசிரிய கல்வி நிறுவனங்கள், காலமாற்றத்திற்கு பொருத்தமாக ஆசிரியர்களை வலுவூட்ட வேண்டும்.

**உசாத்துணைகள்**


1. UNESCO (2017) World Teachers' Day-5th October 2017, Retrieved from https://en.unesco.org/themes/teachers/world-teachers-day on 23-10-2017.
2. சின்னத்தம்பி,மா.(2016), ஆசிரியர்களது எதிர்கால அறைகூவல்கள், ஆசிரியர் மகாநாட்டுப்பேருரை, வடமராட்சிக்கல்விவலயம், 29-04-2016.
3. கல்வி அமைச்சு(2017),இலங்கைப்பாடசாலைக்கல்வித்துறையின் ஆய்வுகள் தினம் (Research Day) - மார்ச் - 15, இசுறுபாய, பத்தரமுல்ல.
4. நித்திலவர்ணன்,ஆ.(2007) சுதந்தரமாக கற்பித்தல் மற்றும் ஆசிரியர்களை வலுவூட்டல், யா/மட்டுவில் கமலாசினி வித்தியாலய ஸ்தாபகரான வித்துவான் இராமலிங்கம் நினைவுப்பேருரை, 25-10-2017.

# 06 நெருக்கடிகளைத் தாங்கக்கூடிய கல்வி முறைமைகளை உருவாக்குதல்

**அறிமுகம்**

கொவிட் - 19 பெருந்தொற்று, பொருளாதார நெருக்கடி, மற்றும் அரசியல் நெருக்கடிகளால் கல்விச் செயற்பாடுகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன. பொருளாதார நெருக்கடி, கல்விச்செயற்பாடுகளை நேரடியாக பாத்தித்துள்ளது. பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

பாடசாலைக் கல்வியைப் பொறுத்தவரை, 2023 ஆம் ஆண்டு எதிர்பார்க்கப்பட்ட புதிய கல்விச்சீர்திருத்த அமுலாக்கம் தாமதமடைந்து செல்கிறது. பொதுப்பரீட்சைகள் பிந்திக்கொண்டு செல்கின்றன. பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதில் காலதாமதம் ஏற்படுகின்றது. பாடசாலைக் கல்வியாண்டு பிந்திக்கொண்டு செல்கிறது.

மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களின் செலவீனம் அதிகரித்து செல்கின்றது. தனியார் வகுப்புக்களிற்கான (Private Tuitions) கட்டணங்கள் உயர்வாக காணப்படுகிறது.

பல மாணவர்கள், காலை உணவு உண்ணாமல் பாடசாலைகளுக்கு வருகிறார்கள். வாழ்க்கைச் செலவு மூன்று அல்லது நான்கு மடங்கு அதிகரித்த போதும், மக்களின் வருமானம் அதிகரிக்கப்படவில்லை.

வெளிமாவட்டங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களின் வேதனத்தின் பெரும்பகுதி, அவர்களது போக்குவரத்திற்கே செலவாகி விடுகிறது. தற்காலத்தில், ஆசிரியர்பணி என்பது, பல்வேறு சவால்கள் நிறைந்ததாக காணப்படுகிறது.

இந்தப் பின்னணியில் கல்வி நெருக்கடி, கல்வி நெருக்கடியின் உலகளாவிய போக்கு, இலங்கையின் பொருளாதார நெருக்கடி கல்வியில் ஏற்படுத்திய தாக்கங்கள் மற்றும் நெருக்கடிகளைத் தாங்கக்கூடிய கல்வி முறைமைகளை உருவாக்குதல் ஆகிய விடயங்களை இந்த கட்டுரை ஆராய்கின்றது.

## கல்வியில் நெருக்கடி (Crisis in Education)

உலகளாவிய கற்றல் நெருக்கடி என்பது, பாடசாலைக் கல்விக்கான அணுகலில் பாரிய அதிகரிப்பு காணப்பட்டபோதிலும், கற்றல் வெளியீடுகள் (Learning Outcomes) தாழ்ந்த மட்டத்தில் காணப்படுதலாகும். குறிப்பாக வளர்ச்சியடைந்துவரும் நாடுகளில் இந்நிலைமை உயர்வாக காணப்படுகின்றது.

தற்காலத்தில் கல்வித்துறைக்கான நிதி ஒதுக்கீடுகள் கணிசமாகக் குறைவடைந்துள்ளது. குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களிலுள்ள பிள்ளைகள் தங்கள் குடும்பத்தை பொருளாதாரரீதியாக ஆதரிப்பதற்காக, பாடசாலைகளில் இருந்து இடைவிலகுகின்றனர். பொருளாதார நெருக்கடியானது சமூக மற்றும் பொருளாதாரரீதியாக பின்தங்கிய அல்லது ஒதுக்கப்பட்ட பின்னணிகளைக்கொண்ட பிள்ளைகளை அதிகளவில் பாதிக்கிறது, ஏழை மாணவர்கள் பணக்கார மாணவர்களை விட 57 சதவீதம் அதிகமான கற்றல் இழப்பை (Learning loss) சந்திப்பதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

## உலகளாவியரீதியில் அச்சுறுத்தலிற்குளளாகியுள்ள கல்வி

உலகளாவியரீதியில் கல்வியானது பாரிய அச்சுறுத்தலுக் குள்ளாகியுள்ளது. அகதிகள் இடப்பெயர்வு, சுகாதாரம் மற்றும் காலநிலையால் ஏற்படும் பேரழிவுகளால் பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை உயர்வாக காணப்படுகின்றது. 222 மில்லியன் பாடசாலை மாணவர்கள் மற்றும் இளையோர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது.

அங்கவீனமான குழந்தைகள் மற்றும் பெண்கள், பழங்குடி சமூகங்கள், இன மற்றும் மதரீதியான சிறுபான்மையினர் ஆகியோர் நெருக்கடியான சூழல்களினால் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர்.

2022 ஆம் ஆண்டில் மட்டும், கட்டாய இடப்பெயர்வினால், 100 மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டனர். அவர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் தரமான கல்வி தேவைப்படும் பாடசாலை மாணவர்கள் மற்றும் இளையோராவர்.

**இலங்கையின் பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட பாதிப்புக்கள்**

இலங்கையின் வடமாகாணத்தில் வாழும் மக்கள், பல்வேறு சவால்கள் மற்றும் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினைகள், காணி அபகரிப்பு, யுத்தப்பாதிப்புக்கள். யுத்தத்திற்குப்பின்னரான மனவடு, சமூகச்சீர்கேடுகள். அதிகரித்த மது மற்றும் போதைப்பாருள் பாவனை, அதிகரித்த வீதிவிபத்துக்கள் மற்றும் மதரீதியானமுரண்பாடுகள் என்பவை அவற்றுள் முக்கியமானவையாகும்.

கொவிட்- 19 பெருந்தொற்று மற்றும் தொடர்ந்துவந்த பொருளாதார நெருக்கடி காரணமாக பல சவால்களை சமகாலத்தில் நாம் எதிர்கொள்கிறோம். எரிபொருட்களுக்கான நெருக்கடியை தொடர்ச்சியாக எதிர்கொண்டுள்ளோம். இதன் விளைவாக பல பொருளாதார பிரச்சனைகள் ஏற்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியின் காரணமாக மக்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சனை விலைவாசி உயர்வு ஆகும், ஆனால் பலரின் வருமானம் மாறாமல் உள்ளது. இதன் விளைவாக, 2021ஆம் ஆண்டு 13% ஆக இருந்த வறுமை வீதம் 25% ஆக (இரு மடங்காக) அதிகரித்துள்ளதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

பொருட்களின் விலைகள் நாள்தோறும் கிடுகிடுவென உயர்கின்றன. உணவுப்பணவீக்கம் 80 சதவீதமாக காணப்படுகின்றது. இலங்கையில் ஒரு சாதாரண குடும்பத்தின் ஒருமாத வாழ்க்கைச் செலவீனம் ஒரு இலட்சத்துப் பத்தாயிரம் என பேராதனைப் பல்கலைக்கழக பொருளியல் துறையினர் தமது ஆய்வின் மூலம் கண்டறிந்துள்ளனர்.

அரிசி, மா, சீனி, பருப்பு, பால்மா போன்ற அத்தியாவசிய உணவுப்பொருட்களின் விலைகள் என்றும் கண்டிராதவாறு உயர்வடைந்துள்ளன. மரக்கறிகளின் விலைகள் சடுதியாக உயர்வடைந்துள்ளன.

கடலுணவுகள், முட்டை மற்றும் இறைச்சி என்பனவற்றின் விலைகளின் அதிகரிப்பால், சாமானிய மக்களால் அவற்றை வாங்கி உண்ண முடியவியாதுள்ளது. பெரும்பாலான இலங்கை மக்கள், தமது உணவை சுருக்கிக் கொண்டுள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றன.

பொருளாதார நெருக்கடியால் பெரும் எண்ணிக்கையானவர்கள் தமது தொழில்களை இழந்துள்ளனர். அரசாங்க உத்தியோகத்தர்களின் வாழ்க்கைச்செலவு அதிகரித்துள்ளது. ஆனால் அவர்களின் சம்பளம் அதிகரிக்கப்படவில்லை. போக்குவரத்து செலவுகளை சமாளிக்கமுடியாமல் திண்டாடுகின்றனர்.

பொருளாதார நெருக்கடியால் வைத்தியசாலைகளில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. புற்றுநோய்க்கான மருந்துகளைக்கூட நோயாளிகள் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய துர்ப்பாக்கியநிலை காணப்படுகின்றது.

பாடசாலை மாணவர்கள் மற்றும் பிள்ளைகள் போசாக்கின்மையால் கடுமையாக பாதிக்கப்படுகின்றனர். போக்குவரத்து கட்டணங்களும் சடுதியாக உயர்ந்துள்ளன. ஆடைகளின் விலைகள் அதிகரித்துள்ளன. ஒட்டுமொத்தமாக நோக்கின் ஒவ்வொரு பொருளின் விலையும் சராசரியாக மூன்று அல்லது நான்கு மடங்கு அதிகரித்துள்ளது.

பொருளாதார நெருக்கடி மக்களின் அன்றாட வாழ்க்கையை அதிகளவில் பாதித்துள்ளது. மக்களில் ஒரு பகுதியினருக்கு உணவை வாங்க முடியாததாக ஆக்கியுள்ளது, குறிப்பாக பிள்ளைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களின் போசாக்கின்மை அதிகரித்துச் செல்கின்றது.

சமூக குற்றச்செயல்கள் அதிகரித்துச் செல்கின்றன. குடும்ப வன்முறைகள் அதிகரித்துச் செல்கின்றன. பலர் நெருக்கடியின்

விளைவுகளிலிருந்து தப்பிக்க ஏற்கனவே இந்தியா, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு புலம்பெயரத் தொடங்கியுள்ளனர். மேலும் சிலர் கடல்மார்க்கமான ஆபத்தான பிரயாணங்களை மேற்கொண்டு வெளிநாடுகள் செல்கின்றனர். கைதாகி திருப்பி அனுப்பப்படுகின்றனர்.

இலங்கையில் பல்பரிமாண வறுமையில் (Multidimensional poverty) வாழும் பல குழந்தைகள் தரமான கல்வியைப் பெறுவதில் தடைகளை எதிர்கொள்கின்றனர்.

**பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட கல்விக்கான அச்சுறுத்தல்**

கல்விக்கான மில்லினியம் அபிவிருத்தி இலக்குகளை (Millennium Development Goals) அடைந்ததாகக் கருதப்பட்டு, சுதந்திரத்திற்குப் பிந்தைய வெற்றிக் கதையாகக் கருதப்படும் இலங்கையின் இலவசக் கல்வி முறை, தற்போது நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது.

தாளின் விலை (Paper Cost) வேகமாக அதிகரித்து வருவதால், மாணவர்கள், குறிப்புகள் எடுக்கவும் வகுப்புப் பயிற்சிகளைச் செய்யவும் பயன்படுத்தும் பயிற்சிப்புத்தகங்களை பணம் கொடுத்து வாங்க முடியாது இடர்படுகின்றனர்.

பிள்ளைகள், பாடசாலைக்குச் செல்லும்போது சுத்தமாகவும் நேர்த்தியாகவும் உடையணிந்து செல்ல வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. கணிசமான இலங்கைப் பிள்ளைகள் காலணி பழுதடைந்ததால் தினமும் அழுது கொண்டே பாடசாலைக்கு சென்று வருகின்றனர்.

பாடசாலை எழுதுபொருட்களின் விலை அதிகரிப்பால் பெற்றோர்கள் தவிக்கின்றனர், இலங்கையின் தொலைதூர கிராமங்களில் வசிக்கும் ஏழைப் பெற்றோர்களுக்கு பெருமளவு பணத்தை பிள்ளைகளின் கல்விக்காக ஒதுக்குவது என்பது பெரும் சவாலாக உள்ளது. பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பலாமா? வேண்டாமா? என்று வேதனையுடன் சிந்திக்கின்றனர்.

சமகாலத்தில் இலங்கையின் பொதுக்கல்வியில் மேலும்பல கல்விசார் பிரச்சினைகள் எதிர்நோக்கப்படுகின்றன. பொதுப்பரீட்சைகள் தொடர்பாக, மாணவர்கள் மற்றும் பெற்றோர்களிடையே காணப்படும் தேவையற்ற போட்டி

மனப்பாங்குகளால், அவர்கள், அதிகளவில் மனவுளைச்சல்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் விழுமியக்குறைபாடுகளும் வன்முறைக்கலாச்சாரமும் அதிகரித்துச் செல்கின்றது. பிள்ளைகளின் ஆன்மீக நாட்டம், விளையாட்டு மற்றும் அழகியல் செயற்பாடுகளில் ஈடுபாடு என்பன குறைவடைந்து செல்கின்றன.

வடமாகாணத்தின் கல்வி நிர்வாகக் கட்டமைப்பில் பதின்மூன்று கல்விவலயங்களும் முப்பத்தைந்து கல்விக்கோட்டங்களும் அமைந்துள்ளன. யுத்தம் நிறைவடைந்து பதின்னான்கு ஆண்டுகள் சென்றபோதும் 87 பாடசாலைகள் இன்னும் மீளத்திறக்கவில்லை.

அதேநேரம், மாணவர் எண்ணிக்கை குறைவு காரணமாக பல சிறிய பாடசாலைகள் மூடப்படும் ஆபத்தினை எதிர்நோக்கியுள்ளன. வலிகாமம் மற்றும் வவுனியா தெற்கு ஆகிய கல்விவலயங்கள் அதிக பாடசாலைகளை கொண்டு இயங்குவதன் காரணமாக அவற்றினை நிர்வகிப்பது மற்றும் பாடசாலைகளின் வெளியக மேற்பார்வை என்பன கடினமாக உள்ளது.

பாடசாலைகளுக்கிடையில் மாணவர் பரம்பல் என்பது முக்கிய கல்விப்பிரச்சினையாக காணப்படுகின்றது. பிரபல பாடசாலைகளில் அளவுக்கதிகமாக மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்றார்கள். இது தொடர்பான விரிவான ஆய்வு தேவைப்படுகின்றது.

ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் ஆசிரியர் - மாணவர் விகிதம் திருப்திகரமாக காணப்படுகின்றபோதும் பாடரீதியான ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. தொடர்ச்சியாக கற்பிப்பதற்கான கல்விசார் மற்றும் தொழில்சார் தகைமையற்ற தொண்டர் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரிய உதவியாளர்கள் நியமனம் செய்யப்படுகின்றனர்.

### அதிகரித்துச் செல்லும் வேலைவாய்ப்பின்மை

தொழில் கல்வியானது, தொழில்வாய்ப்பு, சுயதொழில், மற்றும் பொருளாதார உற்பத்தியை வளப்படுத்துகின்றது. வறுமையை ஒழிப்பதற்கான முக்கியமான கருவியாகவுள்ளதுடன் தனியாள் உற்பத்தியையும் அதிகரிகக்ச் செய்கின்றது.

வேலை உலகின் தேவைகளுடன் பாடசாலைக்கல்வி கலைத்திட்டத்தின் பொருத்தப்பாடு குறைவாகக் காணப்படுகிறது. பெரும்பாலான மாணவர்களும் பெற்றோரும் தொழில் வாய்ப்புக்கள் தொடர்பான விபரங்களை அறிந்திருக்கவில்லை. சுயதொழில், மாற்றீடான திறன்விருத்தி, பயிற்சி வாய்ப்புக்கள், மற்றும் வேலை உலகில் உள்ள பல்வேறுபட்ட தொழில்களின் விபரங்களை அறிந்திருக்கவில்லை.

இலங்கையின் வடபுலத்திலுள்ள திருமண கட்டமைப்பு மற்றும் சீதனம் வழங்கும் முறைமை என்பன அரசாங்க உத்தியோகத்தில் அதிக நாட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. தற்கால இளைஞர்கள் மற்றும் யுவதிகள், முப்படைகள் மற்றும் தாதியியல் போன்ற தொழில்களில் குறைவான ஆர்வத்தை வெளிப்படுத்துகின்றனர் அல்லது முற்றாக புறக்கணிக்கின்றனர். இவை போன்ற காரணிகளால் வேலைவாய்ப்பின்மை அதிகரித்துச் செல்கின்றது.

### வாழ்க்கைத் தேர்ச்சிக் கல்வியின் போதாமை

வாழ்க்கைத்தேர்ச்சிக்கல்வி மற்றும் குடியுரிமைக்கல்வி ஆகிய பெயர்களால் பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இப்பாடங்கள் அன்றாட வாழ்க்கையின் தேவைகளையும் சவால்களையும் திறம்பட சமாளிக்க உதவுவதுடன் தகவமைப்பு, நேரான நடத்தைக்கான திறன்கள். சுயபிரதிபலிப்பு, திறனாய்வுச்சிந்தனை, பிரச்சனைவிடுவித்தல் ஆளிடைத் தொடர்புகள், நம்பிக்கையை கட்டியெழுப்புதல், தொடர்பாடல் மற்றும் ஒத்துழைப்பு ஆகிய திறன்களை விருத்திசெய்யவும் உதவிபுரியும்.

### உயர்கல்வியில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள்

வைத்தியர்கள், பொறியியலாளர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் புலமையாளர்கள் தொடர்ச்சியாக நாட்டைவிட்டு வெளியேறிவருகின்றனர். நீதியற்ற வரி அறவீடுகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். தரமான உயர்கல்வியை வழங்குவதற்கான நிதிவசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் குறைவாக காணப்படுகின்றது.

### மாணவர்களிடம் ஏற்பட்டுள்ள கற்றல் இழப்பு (Learning Loss)

மாணவர்கள் நீண்டகாலம் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டுடன் தொடர்பில்லாமல் இருந்தமையால், அவர்கள் பாடசாலையில் இருந்து

இடைவிலகும் ஆபத்து அதிகமாக காணப்படுகின்றது. நிகழ்நிலை கல்வி மூலம் தேர்ச்சி அடைந்த மாணவர்கள், விடுபட்ட மாணவர்கள், கிராம வாழ்க்கைக்கு மீண்ட மாணவர்கள் மற்றும் நெறிபிறழ்வான மாணவர்கள் ஆகிய நான்கு வகையான மாணவர்களை கொவிட் -19 பெருந்தொற்று உருவாக்கியுள்ளது.

### கொவிட் – 19 பெருந்தொற்றால், கல்வியில் நாம் இழந்தவை

ஆரம்பபிள்ளைக் கல்வி (Early Childhood Education) மற்றும் ஆரம்பக்கல்வி (Primary Education) மாணவர்களின் படிமுறையான எழுத்து மற்றும் வாசிப்பு திறன்கள் குறைவடைந்து காணப்படுகின்றது. மாணவர்களின் கணிதத் திறன்கள் (Mathematical Skills) குறைவடைந்து காணப்படுகின்றது.

மாணவர்களின் ஒழுக்கம் வீழ்ச்சிக்கு உட்படுகிறது. மாணவர்களின் கற்றல் திறன்கள் (Learning skills) குறைவடைந்து காணப்படுகின்றது. மாணவர்களின், நீண்டநேரம் பாடசாலைகளில் மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களில் இருந்து கற்கும் ஆற்றல் குறைவடைந்து கொண்டு செல்கிறது. பரீட்சைகளில் மாணவர்களின் அடைவு மட்டம் குறைவடைந்து கொண்டு செல்கிறது. மாணவர்களின் சமூகத்திறன்கள் (Social skills) வீழ்ச்சி அடைந்தது செல்கிறது. இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபடாமையால், உடல் மற்றும் உள பதிப்புகள் ஏற்படுகிறது.

### வடமாகாண பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளில் காணப்படும் தளம்பல்நிலை

பொதுப் பரீட்சைகளின் பெறுபேறுகளில் தளம்பல்நிலை அல்லது வீழ்ச்சிநிலையில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

- நீண்டகால யுத்தம் ஏற்படுத்திய பாதிப்புக்களும் யுத்தத்திற்கு பின்னரான சூழல் ஏற்படுத்திய பாதிப்புக்களும் - உடல் மற்றும் உளப் பாதிப்புக்கள், பாடசாலைகள் மற்றும் பௌதீக வளங்களின் அழிவு, இடப்பெயர்வு
- வடமாகாண முன்பள்ளிக்கல்வி வழங்கலில் காணப்படும் குறைபாடுகள் - முறையான முன்பள்ளிக் கொள்கை மற்றும் கலைத்திட்டமின்மை, பயிற்சியற்ற ஆசிரியர்கள், ஆசிரியர்களுக்கு போதிய வேதனம் வழங்கப்படுவதில்லை மற்றும் முன்பள்ளிகளின் மேற்பார்வையிலுள்ள குறைபாடுகள்

- மாணவர்கள் தொடர்பான காரணிகள் - விழுமியக்குறைவு, அதிகரித்த சமூக ஊடகப்பாவனை மற்றும் வன்முறைக்கலாசாரம்
- ஆசிரியர்கள் தொடர்பான காரணிகள் - அர்ப்பணிப்பு குறைவு, தூர பணியிடங்களில் பணியாற்ற தயங்குதல், பாடஅறிவு மற்றும் கற்பித்தல் அறிவுக்குறைவு மற்றும் இற்றைப்படுத்தல் குறைவு
- பாடசாலை தொடர்பான காரணிகள் - மனித மற்றும் பௌதீக வளப்பற்றாக்குறை,
- கல்வி நிர்வாகம் தொடர்பான காரணிகள் - நிர்வாகத்திறன் குறைவு மற்றும் தொடர் வாண்மைத்துவமின்மை
- குடும்பம் தொடர்பான காரணிகள் - பிள்ளைகளின் கல்வியில் அக்கறையற்ற பெற்றோர்கள், அதிகரித்த பொழுது போக்குகள் மற்றும் தென்னிந்திய சினிமா மற்றும் தொடர் நாடகங்கள்
- சமூகம் தொடர்பான காரணிகள் - மதுப்பாவனை, போதைப்பொருள் பாவனை மற்றும் வன்முறைக்கலாசாரம்
- அரசியல் மற்றும் திட்டமிட்ட புறக்கணிப்புக்கள் – கல்வியில் இனரீதியான, மதரீதியான, மொழிரீதியான மற்றும் அரசியல்ரீதியான புறக்கணிப்புக்கள்

**கொவிட் - 19 பெருந்தொற்று, முன்பள்ளிச் சிறார்களிடத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள்**

முன்பள்ளிச் சிறார்களிடத்தில், கற்றல் இழப்பு (Learning loss) ஏற்பட்டுள்ளது. அண்ணளவாக இரண்டு வருடங்கள் முன்பள்ளிகள் எதுவும் நடைபெறவில்லை. முன்பள்ளிப் பிள்ளைகளின் கணிதத்திறன் மற்றும் மொழித்திறன் விருத்தி அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

இக்காலப்பகுதியில் சகமாணவர்கள் மற்றும் ஆசிரியருடனான இடைத்தொடர்புகள் குறைவாக காணப்பட்டது. வீட்டில் அதிகளவிலான தொலைக்காட்சிப் பாவனை மற்றும் கைத்தொலைபேசிப் பாவனை காரணமாக பிள்ளைகள் பல்வேறுவிதமான பாதிப்புகளுக்கு உட்பட்டனர். வாசிப்பு மற்றும் எழுத்துத்திறன்கள் குறைவடைந்து சென்றன. பிள்ளைகள் பல்வேறுவிதமான உடல் மற்றும் உளப்பாதிப்புகளுக்கு உள்ளாகினர்.

கொவிட் - 19 பெருந்தொற்று காரணமாக, உலகளாவிய அளவில் மக்களின் உளநலம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் வெளிப்பாடாக, குடும்ப மற்றும் சமூக வன்முறைகள் அதிகரித்து செல்கின்றன. மதுப்பாவனை மற்றும் போதைப்பொருள் பாவனை அதிகரித்து செல்கின்றது. இணையவழி குற்றங்கள் அதிகரித்து செல்கின்றன.

### பாடசாலைகளில் இருந்து மாணவர் இடைவிலகல்

பல காரணங்களால் மாணவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகுகின்றனர். தாழ்கல்வி அடைவுகள், நிதிசார் பிரச்சினைகள், வீட்டில் சகோதரர்களைப் பராமரித்தல் மற்றும் வீட்டு வேலைகளைச் செய்தல், கொவிட் பெருந்தொற்று, பொருளாதார நெருக்கடி, வறுமை மற்றும் கல்வியின் அணுகலும் கிடைப்பனவும், தொழில்களில் ஈடுபடுதல், பாடசாலைகளில் கேலி மற்றும் கிண்டலுக்கு உட்படுதல், மன அழுத்தத்திற்கு உட்படுதல், எதிர்பாராதவகையில் கருவுறுதல், சுதந்திரமின்மை மற்றும் பாடசாலை வரவின்மை ஆகியவற்றை மாணவர்கள் பாடசாலையைவிட்டு இடைவிலகுவதற்கான முக்கியமாக காரணங்களாக குறிப்பிடமுடியும்.

தரம் ஒன்றிலிருந்து தரம் ஒன்பதுவரை வகுப்புகளைக்கொண்ட பாடசாலைகள் இயங்குகின்றன. இவற்றிலிருந்து தரம் ஆறுக்காக ஒருபகுதி மாணவர்கள், பிற பாடசாலைகளில் தம்மை இணைத்துக்கொள்கின்ற போதும் எஞ்சியவர்களில் ஐம்பது சதவீதமான மாணவர்கள், எந்தவொரு பாடசாலையிலும் தம்மை இணைத்துக்கொள்ளாத நிலைமைகள் காணப்படுகின்றன.

ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையிலான இடைவினையுறவு குறைவடைந்துள்ளமையால், மாணவர்களுடன் அதிபர், ஆசிரியர்கள் நெருக்கமற்ற நிலையில் இருக்கின்றனர். இதனால் தொடர்ச்சியாக தாழ் அடைவுகளை பெற்றுக்கொண்டு கல்வி மீதான வெறுப்பில் உள்ள மாணவர்களை தொடர்ந்தும் கற்றல் செயற்பாடுகளில் உள்ளீர்க்க முடியாத கையறு நிலைமை காணப்படுகின்றது.

மாணவர்களாக இருக்கும்போதே வருமானமீட்டுவதற்கு கிராமங்களில் பல்வேறு தொழில்கள் காணப்படுகின்றன. இவ்வாறான தொழில்களில்

மாணவர்கள் ஈடுபடுகின்றபோது பெற்றோரும் அதற்கு ஆதரவளிக்கின்றமை கல்விமீதான நாட்டத்தை குறைப்பதற்கு காரணமாகின்றது. க.பொ.த சாதாரணதரத்தில் மூன்றிலொரு சதவீதமானவர்கள் சித்தியடையாவிட்டாலும், அவர்கள் தொழில்வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பங்கள் காணப்படுவதால் மாணவர் இடைவிலகலை சாதகமாக பார்க்கின்ற தரப்பினரும் உள்ளனர்.

இவ்வாறு பாடசாலையை விட்டு இடைவிலகுபவர்கள், சமூகக்கற்றவாளிகளாக மாறக்கூடிய ஏதுநிலையும் காணப்படுகின்றது. பாடசாலை இடைவிலகல்களினால் வேலைவாய்ப்பின்மை சதவீதம் அதிகரிக்கிறது. தாழ் வருமானமட்டநிலை ஏற்படும். உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படும்

பாடசாலை மாணவர்களின் இடைவிலகலைத் தடுப்பதற்காக காணப்படுகின்ற அரசபொறிமுறைகள் நடைமுறையில் தோல்விகண்டுவிட்டன. பாடசாலைகளில் இருந்து மாணவர்கள் இடைவிலகினால் அவர்களை மீளிணைப்பதற்காக வலயக்கல்வி அலுவலகத்திலும் பிரதேச செயலகத்திலும் தலா ஒவ்வொரு அலுவலர்கள் உள்ளனர். ஆனால் இந்த அலுவலர்களின் செயற்பாடுகள் வெறுமனே சம்பிரதாயபூர்வமாக இருக்கிறது.

கட்டாயக்கல்விக்குழு உள்ளிட்ட கட்டமைப்புக்கள் காணப்பட்டாலும், கொவிட் - 19 இன் பின்னரான காலத்தில் ஏற்பட்டுள்ள சடுதியான மாணவர் இடைவிலகல் நிலைமைகளை அவதானித்து, அதற்கான விசேட நிலைமைகளின் கீழான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவில்லை.

இடைவிலகும் மாணவர்கள் தொடர்பில் பாராமுகமான நிலைமைகள் நீடிக்குமாக இருந்தால் சட்டவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற சமூகவிரோதச் சக்திகள் இடைவிலகிய மாணவர்களை கருவியாக பயன்படுத்துவதற்கான அதிகளவிலான சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக இவ்வாறானவர்களை வன்முறைக்குழுக்கள், போதைப்பொருள் விற்பனையாளர்கள் மற்றும் முகவர்கள் இலகுவாக கையாள்வதால் அவர்கள் நாளடைவில் சமூகத்திற்கு பேராபத்தானவர்களாக மாறிவிடுவார்கள்.

### அதிகரித்து வருகின்ற போதைப்பழக்கம்

தற்கால ஆய்வுகளின்படி இலங்கையில் 2.7 சதவீதமான கட்டிளமைப் பருவத்தினர் போதைக்கு அடிமையானவர்களாக காணப்படுகின்றனர். இதற்கான காரணிகளாக புகைப்பிடித்தல், மதுப்பாவனை மற்றும் போதைப்பொருள் பாவனை, தாழ்வான பாடசாலை அடைவுகள், பெற்றோரின் புறக்கணிப்பு, குடும்பத்தின் தொழிற்பாடற்றநிலை, துஸ்பிரயோகத்திற்கு உட்படல், பெற்றோரின் குறைவான அல்லது அளவுக்கு அதிகமான கட்டுப்பாடு மற்றும் பெற்றோரின் விவாகரத்து என்பன காணப்படுகின்றன.

### சவால்களுக்கு முகங்கொடுக்க முடியாதநிலை

இளைஞர்கள் மற்றும் யுவதிகள் தமது எதிர்கால தொழில் மற்றும் கல்விக்கான தயார்படுத்தல்களிலும் தமது வாழ்க்கையை அனுபவிப்பதிலும் ஈடுபாட்டுடனுள்ளனர். சுமூகப்பிரச்சனைகள் மற்றும் குடும்ப விவகாரங்களில் குறைந்த கவனம் செலுத்துகின்றனர். முதியோர்கள் பெரும்பாலும் புறக்கணிக்கப்படுகின்றனர்.

கணிசமான அளவிலான இளையோர், தமது வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க முடியாதநிலையில் உள்ளனர். உளத்தாக்கங்கள் அல்லது நெருக்கீடுகளுக்கு இலகுவில் உள்ளாகின்றனர். தற்கொலை மற்றும் தொடர்பாடல் குறைபாடுகள் போன்ற சவால்களை எதிர்கொள்கின்றனர்.

### நெருக்கடியான சூழலில் சுய பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் வழிமுறைகள்

நாம் இந்தக்கஷ்டமான சூழலில் இருப்பதைக்கொண்டு மாற்றீட்டுப் பொருட்களை தயாரித்து வாழவேண்டும். வருமானம் தரக்கூடிய மாற்று வழிமுறைகளை நாம் கண்டறிய வேண்டும். கடந்த யுத்தகாலத்தில் வெற்றிகரமாக வாழ்ந்த அனுபவம் எமக்கு உண்டு. ஆனால் எமது பிள்ளைகள் அந்த வாழ்க்கை முறைக்கு தயாராக இல்லை. எமது மாற்றமடைந்த நுகர்வு கலாசாரம், பொருளாதார தடைகளை வெற்றிகொள்ள தடையாக உள்ளது.

வீடுகள் தோறும் வீட்டுத்தோட்டங்களை அமைப்பதை ஒரு சம்பிரதாயமாக அல்லாமல் ஒரு புரட்சியாகவே முன்னெடுக்க வேண்டும். தரிசு நிலங்கள் அனைத்திலும் விதைக்க வேண்டும். பயிரிட வேண்டும்.

கோழிவளர்ப்பு மற்றும் கால்நடை வளர்ப்பில் அனைவரும் ஆர்வம்காட்ட வேண்டும். எமது பிரதேச வளங்களைப் பயன்படுத்தி உள்ளூர் உற்பத்திகளை பெருக்க வேண்டும்.

கடற்கரையில் கொட்டப்படும் கடல் உணவுக்கழிவுகளை பயன்படுத்தி விலங்குணவு (மாஸ்) உற்பத்திகள் மேற்கொள்ளமுடியும். திண்மக்கழிவுகளை திறம்பட முகாமைசெய்து சேதன உரங்களை தயாரித்து வீட்டுத்தோட்டங்களுக்கு பயன்படுத்த முடியும். பெருமளவிலான உணவுப்பொருட்கள் வீடுகளிலும் விழாக்களிலும் வீணடிக்கப்படுகின்றது. அவற்றினை சிறந்த முறையில் முகாமை செய்ய வேண்டும். பனம் உற்பத்தி பொருட்களை அதிகளவில் உற்பத்தி செய்ய வேண்டும்.

### நெருக்கடியைத் தாங்கக்கூடிய கல்வி முறைகளை உருவாக்குதல் (Build crisis-resilient education systems)

பிள்ளைகள் மற்றும் இளையோரின் உரிமைகளின் பாதுகாப்பை உறுதிசெய்யும் நெருக்கடியைத் தாங்கக்கூடிய கல்வி முறைகளை நாம் உருவாக்க வேண்டும். அவர்களுக்கு போதிய ஊட்டச்சத்து, நல்வாழ்வு, போசணை, சுத்தமான குடிநீர், மற்றும் சுகாதாரம் கிடைப்பதை உறுதிசெய்ய வேண்டும்.

வன்முறை, பாலியல் சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகம் ஆகியவற்றிலிருந்து பிள்ளைகள் மற்றும் இளையோர் பாதுகாப்பு உள்ளிட்ட முழுமையான வழியில் கற்பவர்களின் தேவைகளை நிவர்த்தி செய்ய வேண்டும்.

### இலங்கையில் காலத்தின் தேவையாகவுள்ள பெற்றோருக்கானகல்வி

சமகால சவால்கள் நிறைந்த சூழலில், பிள்ளைகளை பூரண வளர்ச்சியுடன் மற்றும் சமநிலை ஆளுமையுடன் வளர்த்தெடுப்பதில் பெற்றோர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக ஆங்காங்கே தமக்குள் கதைத்துக்கொண்டிருந்தாலும், பொது வெளியில் ஆரோக்கியமான உரையாடல்கள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. கல்வியில் முன்னேறிய நாடுகளில் பெற்றோருக்கான கல்விக்கு அதிக முக்கியத்துவமளிக்கப்படுகின்றது. இலங்கையிலும் சில பாடசாலைகள் இதனை சிறப்பாக முன்னெடுக்கின்றன.

## பெற்றோருக்கான கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கமைக்கும் வழிமுறைகள்

பாடசாலைகளில் வாரத்தில் ஒருநாள், மாலை வேளையில் பெற்றோர் மற்றும் அவர்களின் பிள்ளைகள் இணைந்த கற்றல் – கற்பித்தல் செயற்பாட்டை வகுப்பாசிரியர் முன்னெடுத்தல் வேண்டும். தமது பிள்ளைகளின் வளர்ப்பு தொடர்பாக ஒரே வகையான சவால்களை எதிர்கொள்கின்ற பெற்றோர்களை ஒன்றாக வைத்து வழிகாட்டல் வழங்கப்படலாம்.

பிள்ளைகளின் வளர்ப்பு தொடர்பாக பிரச்சனைகளை எதிர்கொள்ளும் பெற்றோருக்கு சீர்மியம் வழங்க வேண்டும். மேலும் பெற்றோர் மற்றும் அவர்களின் பிள்ளைகள் இணைந்த வழிகாட்டல் மற்றும் சீர்மியம் வழங்க வேண்டும். பெற்றோர் மற்றும் அவர்களின் பிள்ளைகள் இணைந்து இலக்கு நிர்ணயம் (Goal setting) செய்ய வேண்டும்.

சிறார்கள் மற்றும் கட்டிளமைப் பிள்ளைகளுக்கான விளையாட்டு, அழகியல் மற்றும் ஆன்மீகச் செயற்பாடுகளை பாடசாலையில் மட்டுமல்லாது சமூகமட்டத்திலும் முன்னெடுக்க வேண்டும். பிள்ளை வளர்ச்சி மற்றும் கட்டிளைமைப்பருவ விருத்தி தொடர்பான துறைசார் நிபுணர்களுடனான கலந்துரையாடல்களை பாடசாலைகளிலும் சமூகமட்டத்திலும் ஒழுங்கமைக்க வேண்டும்.

மேலும், பெற்றோருக்கான கல்வியை ஒழுங்கமைத்து வழங்கக்கூடிய ஆற்றலுள்ள நிறுவனங்களாக பாடசாலைகள், பழயைமாணவர் சங்கங்கள், பல்கலைக்கழகங்கள், ஆசிரியர்கல்வி நிறுவனங்கள், சமயநிறுவனங்கள், சனசமூக நிலையங்கள், மாதர்சங்கங்கள் மற்றும் விளையாட்டுக்கழகங்கள் என்பன காணப்படுகின்றன.

பெற்றோருக்கான கல்வியை ஒழுங்கமைத்து வழங்குவதிலும் பல சவால்கள் காணப்படுகின்றன. ஆரம்பத்தில் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின்பால் பெற்றோர்களை ஈர்ப்பதிலுள்ள சிரமங்கள், பெற்றோர்கல்வி தொடர்பான விழிப்புணர்வின்மை, பங்குதாரர்களிடையே ஒற்றுமையுணர்வின்மை, எல்லாப் பெற்றோருக்கும் இதில் பங்குகொள்ள நேரமின்மை, பிள்ளைகள் மற்றும் பெற்றோர்களை இணைத்துப் பணியாற்றுவதிலுள்ள சவால்கள் என்பன காணப்படுகின்றன.

எமது கல்விசார் பிரச்சினைகளை நாமே தீர்த்துக்கொள்ள வேண்டும். இதில் பெற்றேர்கள் முக்கியமான பங்குதாரர்களாவர். பெற்றோர்களை வளப்படுத்துனூடாக அவர்களின் பிள்ளைகளை வளப்படுத்தலாம். இதன்மூலம் ஒட்டுமொத்த சமூகமும் நன்மையடையும்.

## பிள்ளைகளின் உளநல மேம்பாட்டுக்கான வழிமுறைகள்

பிள்ளைகளின் மனவெழுச்சி ஆரோக்கியநிலை, அவர்களின் உடல்நலத்தை பேணுவதற்கும் அவசியமாகும். பிள்ளைகள் தெளிவாக சிந்திக்கவும், சமூகத்திறன்களை விருத்தி செய்யவும் மற்றும் புதிய திறன்களை கற்றுக்கொள்ளவும் பிள்ளைகளுக்கு சிறந்த உளநலம் அவசியமானதாகும். பெரும்பாலான பிள்ளைகள், சிறந்த உளநலத்தை கொண்டிருக்கின்றனர்.

பரிகார நடவடிக்கைகளை நாம் துரிதமாக முன்னெடுக்க வேண்டும். உளவள ஆற்றுப்படுத்தும் செயற்பாடுகளை பரவலாக முன்னெடுக்க வேண்டும். ஆன்மீக செயற்பாடுகள், தியானம் மற்றும் பஜனை செயற்பாடுகள் அதிகமாக தேவைப்படுகின்றன. உள்ளக மற்றும் வெளியக விளையாட்டில் மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் ஈடுபடுவதன் மூலம் உள ஆரோக்கியத்தை வலுப்படுத்திக் கொள்ளலாம். இசை, நடனம், நாடகம் மற்றும் ஓவியம் போன்ற அழகியல் செயற்பாடுகள் உள ஆரோக்கியத்தை மேம்படுத்தும் சக்தி கொண்டவை. வீட்டுத்தோட்டம் அமைத்தல், வாசிப்பு மற்றும் எழுத்தாக முயற்சிகள் போன்றவை எமது உள நலனை மேம்படுத்தும்.

நல்ல நண்பர்கள், வளர்ந்தோரிடமிருந்து கிடைக்கக்கூடிய ஊக்கப்படுத்தும் வார்த்தைகள் என்பன பிள்ளைகளிடம் தன்னம்பிக்கை, உயர்ந்த சுயகணிப்பு மற்றும் ஆரோக்கியமான மனவெழுச்சிநிலை என்பவற்றை ஏற்படுத்துகின்றன. உளஆரோக்கியமான பிள்ளையின் வாழ்க்கை நேர்மயமானதாகவும் தரமானதாகவும் அமையும். மேலும் அவர்கள் வீட்டில், பாடசாலையில் மற்றும் சமூகத்தில் சிறப்பாக தொழிற்படுவர்.
அன்பு, நல்லிணக்கம் மற்றும் தேர்ச்சிகளை பிள்ளைகளிடையே விருத்தி செய்தல் வேண்டும். நேர்மயமான மற்றும் பாதுகாப்பான பாடசாலைச் சூழலை உறுதிசெய்ய வேண்டும். பிள்ளைகளுக்கு நேர்மயமான நடத்தைகளையும் தீர்மானமெடுத்தலையும் கற்பிக்க வேண்டும்.

பிள்ளைகளிடையே மற்றையவர்களுக்கு உதவும் பண்பை ஊக்கப்படுத்த வேண்டும். நல்ல உடல் ஆரோக்கியத்தை ஊக்கப்படுத்த வேண்டும். பிள்ளைகளுக்கு ஏற்படும் உளசுகாதாரப் பிரச்சனைகள் மற்றும் அதன் அறிகுறிகள் தொடர்பாக ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் விழிப்புணர்வூட்ட வேண்டும்.

## கிராமப்புறப் பாடசாலைகளை வளப்படுத்தல்

நாம் மற்றயவர்களைப் பார்த்து போட்டி, பொறாமை கொள்ளக்கூடாது. எமது கிராமங்களில் இருக்கும் பாடசாலைகள் மிகவும் முக்கியமானவை. தமது வீட்டிற்கு அருகே இருக்கும் பாடசாலைகளில் மாணவர்களை இணைப்பதன் மூலம், உடல் அசதி உள்ளிட்டவற்றை தவிர்த்து கற்றலில் ஈடுபாடு கொள்ள முடியும். அத்துடன் தற்காலத்தில் நிலவும் எரிபொருள் நெருக்கடி மற்றும் பொருளாதார நெருக்கடியை சமாளிக்கவும் முடியும்.

ஒவ்வொரு பாடசாலைகளும் சிட்டுக்குருவிகள் வாழுகின்ற அருமையான கூடுகளே. ஒவ்வோர் பிரதேச மக்களும் தனித்துவமான பண்பாட்டை மற்றும் சமய விழுமியங்களை கொண்டிருக்கின்றார்கள். இவற்றை கட்டிக்காத்து கல்வியை மேம்பாடடைய செய்வதில், பிரதேச பாடசாலைகள் அதிகளவில் பங்காற்ற முடியும்.

## வடமாகாணப் பொதுக்கல்வி மேம்பாட்டுக்கான சிபார்சுகள்

பாடசாலைகளுக்கிடையில் மாணவர் பரம்பல் சீர்செய்யப்படல் வேண்டும். பரீட்சை அடைவுகளுக்கு அப்பால், மாணவரின் அறிவு, திறன் மனப்பாங்கு மற்றும் ஆளுமை விருத்திக்கு பங்களிக்கும் செயற்பாடுகளுக்கு பாடசாலைகளும் பெற்றோர்களும் முக்கியத்துவமளிக்க வேண்டும்.

பெற்றோர்களும் சமூகமும் 'பிரபல பாடசாலை' (Popular School) என்ற போலி மாஜையிலிருந்து விடுபட வேண்டும். தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளுக்கிடையில் ஆசிரியர் பரம்பலை சீராக்க வேண்டும். அதேபோன்று கல்வி வலயங்களுக்கிடையில் ஆசிரியவளம் சமமாகப் பகிரப்பட வேண்டும்.

திறமைமிக்க கல்வி நிருவாகிகள், அதிபர்களை பொருத்தமாக இடப்படுத்தல் செய்ய வேண்டும். பெற்றோர்கள், பாடசாலைகள் மற்றும் சமூகம்

மாணவர்களின் ஒழுக்கம் மற்றும் ஆன்மீக கல்விக்கு முக்கியத்துவமளிக்க வேண்டும்.

**அனைத்து மாணவர்களுக்கும் தரமான கல்வி கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும்**

இந்த இடர்காலத்தில், கிராமப்புற மாணவர்களுக்கு கல்வி கிடைப்பதை உறுதிப்படுத்தும் கடப்பாடு எம் அனைவருக்கும் உள்ளது. இதில் கல்வி அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் சமூகம் கூடிய அக்கறை எடுக்க வேண்டும். தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் புலம்பெயர் உறவுகள் தமது கிராம மாணவர்களின் கல்விக்கு, இச்சந்தர்ப்பத்தில் அதிகளவில் உதவ வேண்டும். பின்வரும் சவால்கள் வெற்றி கொள்ளப்பட வேண்டும்.

- பொருளாதாரரீதியாக பாதிக்கப்பட்ட பிள்ளைக்கும் கல்வியில் சமவாய்ப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
- கிராமப்புற மாணவர்களையும் அவர்களது பெற்றோர்களையும் கல்வியில் ஈர்ப்பதற்கான வழிவகைகளை கண்டறிய வேண்டும்.

**மாற்ற முகவர்களின் வகிபாகம் (Role of Change Agents)**

இந்த கல்விக்கான போராட்டத்தில், ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள்தான் முன்களப் பணியாளர்கள். அவர்கள் மதிக்கப்பட வேண்டும். அவர்களது உடல் மற்றும் உள ஆரோக்கியம் பாதுகாக்கப்பட வேண்டும். கல்வி அதிகாரிகளும் சமூகமும் வழிகாட்ட வேண்டும். ஊக்கப்படுத்த வேண்டும். சில வகுப்புக்களை பாட உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் அதிபர்கள் முன்மாதிரியாக, எடுத்துக்காட்ட வேண்டும். அப்போது, ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர் தாமாக முன்வந்து செயல்படுவார்கள். நெருக்கடியான சூழ்நிலைகளில் கற்றல் - கற்பித்தலை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லல் தொடர்பாக அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோருக்கு முறையான வழிகாட்டல் மற்றும் பயிற்சி வழங்க வேண்டும்.

**எதிர்காலத்தில் முன்னெடுக்க வேண்டிய விடயங்கள்**

தற்போதைய இடர்கால நெருக்கடியில் எங்களிடம், உள்ள விடைகளைக் காட்டிலும் அதிகமான வினாக்கள் உள்ளன. “இங்கே கண்டுபிடிக்கப்

படவில்லை” என்ற வார்த்தைக்கு இடமில்லை. நெருக்கடியில் நாங்கள் அனைவரும் கற்போராக இருக்க வேண்டும். எமது வரலாற்றை எடுத்துப் பார்த்தால், நாம் எதிர்நோக்கிய சவால்கள் அதிகம். நெருக்கடிகள் அதிகம். அத்தனையையும் வெற்றிகரமாக எதிர்கொண்டவர்கள் நாம். பீனிக்ஸ் பறவைகளாக மீண்டவர்கள் நாம். நாளை நமதே, வெற்றியும் நமதே.

# 07 இலங்கையில் காலத்தின் தேவையாகவுள்ள பெற்றோருக்கானகல்வி

**அறிமுகம்**



சமகாலத்தில் இலங்கையின் பொதுக்கல்வியில் பல்வேறு கல்விசார் பிரச்சினைகள் எதிர்நோக்கப் படுகின்றன. தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை தொடர்பாக, மாணவர்கள் மற்றும் பெற்றோர்களிடையே காணப்படும் தேவையற்ற போட்டி மனப்பாங்குகளால், அவர்கள், அதிகளவில் மனவுளைச்சல்களுக்கு உள்ளாகியுள்ளனர். பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் விழுமியக்குறைபாடுகளும் வன்முறைக்கலாச்சாரமும் அதிகரித்துச் செல்கின்றது. பிள்ளைகளின் ஆன்மீக நாட்டம், விளையாட்டு மற்றும் அழகியல் செயற்பாடுகளில் ஈடுபாடு என்பன குறைவடைந்து செல்கின்றன.

சமகால சவால்கள் நிறைந்த சூழலில், பிள்ளைகளை பூரண வளர்ச்சியுடன் மற்றும் சமநிலை ஆளுமையுடன் வளர்த்தெடுப்பதில் பெற்றோர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக ஆங்காங்கே

தமக்குள் கதைத்துக்கொண்டிருந்தாலும், பொது வெளியில் ஆரோக்கியமான உரையாடல்கள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. கல்வியில் முன்னேறிய நாடுகளில் பெற்றோருக்கான கல்விக்கு அதிக முக்கியத்துவமளிக்கப்படுகின்றது. இலங்கையிலும் சில பாடசாலைகள் இதனை சிறப்பாக முன்னெடுக்கின்றன.

**இவ்வாறான பெற்றோருக்கான கல்வி மற்றும் அவர்களுடனான கலந்துரை -யாடல்கள் நிகழ்ச்சித்திட்டங்களை பின்வருமாறு ஒழுங்கமைக்கலாம்.**

1. பாடசாலைகளில் வாரத்தில் ஒருநாள், மாலை வேளையில் பெற்றோர் மற்றும் அவர்களின் பிள்ளைகள் இணைந்த கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை வகுப்பாசிரியர் முன்னெடுத்தல்.
2. பெற்றோருக்கான குழு வழிகாட்டல் : தமது பிள்ளைகளின் வளர்ப்பு தொடர்பாக ஒரே வகையான சவால்களை எதிர்கொள்கின்ற பெற்றோர்களை ஒன்றாக வைத்து வழிகாட்டல் வழங்கப்படலாம்.
3. பெற்றோருக்கான சீர்மியம் : பிள்ளைகளின் வளர்ப்பு தொடர்பாக பிரச்சனைகளை எதிர்கொள்ளும் பெற்றோருக்கு சீர்மியம் வழங்கல்
4. பெற்றோர் மற்றும் அவர்களின் பிள்ளைகள் இணைந்த வழிகாட்டல் மற்றும் சீர்மியம் வழங்கல்
5. பெற்றோர் மற்றும் அவர்களின் பிள்ளைகள் இணைந்த இலக்கு நிர்ணயம் (Goal setting)
6. சிறார்கள் மற்றும் கட்டிளமைப் பிள்ளைகளுக்கான விளையாட்டு, அழகியல் மற்றும் ஆன்மீகச் செயற்பாடுகளை பாடசாலையில் மட்டுமல்லாது சமூகமட்டத்திலும் வழங்கல்
7. பிள்ளை வளர்ச்சி மற்றும் கட்டிளைமைப்பருவ விருத்தி தொடர்பான துறைசார் நிபுணர்களுடனான கலந்துரையாடல்களை ஒழுங்கமைத்தல்.

**பெற்றோருக்கான கல்வியை ஒழுங்கமைத்து வழங்கக்கூடிய ஆற்றலுள்ள நிறுவனங்கள்**

- பாடசாலைகள்
- பாடசாலை பழையமாணவர் சங்கங்கள்
- பல்கலைக்கழகங்கள்
- ஆசிரியர்கல்வி நிறுவனங்கள்

- சமய நிறுவனங்கள்
- சனசமூக நிலையங்கள்
- மாதர்சங்கங்கள்
- விளையாட்டுக்கழகங்கள்

### பெற்றோருக்கான கல்வியை ஒழுங்கமைத்து வழங்குவதிலுள்ள சவால்கள்

பெற்றோருக்கான கல்வியை ஒழுங்கமைத்து வழங்குவதில் பல பிரச்சனைகள் காணப்படுகின்றன.

- ஆரம்பத்தில் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின்பால் பெற்றோர்களை ஈர்ப்பதிலுள்ள சிரமங்கள்
- பெற்றோர்கல்வி தொடர்பான விழிப்புணர்வின்மை
- பங்குதாரர்களிடையே ஒற்றுமையுணர்வின்மை
- எல்லாப் பெற்றோருக்கும் இதில் பங்குகொள்ள நேரமின்மை
- பிள்ளைகள் மற்றும் பெற்றோர்களை இணைத்துப் பணியாற்றுவதிலுள்ள சவால்கள்

### முடிவுரை

எமது கல்விசார் பிரச்சினைகளை நாமே தீர்த்துக்கொள்ள வேண்டும். இதில் பெற்றேர்கள் முக்கியமான பங்குதாரர்களாவர். பெற்றோர்களை வளப்படுத்துனூடாக அவர்களின் பிள்ளைகளை வளப்படுத்தலாம். இதன்மூலம் ஒட்டுமொத்த சமூகமும் நன்மையடையும்.

# 08 STEM மற்றும் STEAM கல்வி : ஓர் அறிமுகம்

## அறிமுகம்

STEAM கல்வி என்பது, நிஜ உலகின் (Real world) பிரச்சினைகள் பற்றி பரந்துபட்டு சிந்திப்பதற்கு மாணவர்களை ஊக்கப்படுத்தும் ஒன்றிணைந்த கற்றல் அணுகுமுறையாகும். விஞ்ஞானம் (Science) , தொழில்நுட்பம் (Technology), பொறியியல் (Engineering), கலை (Arts) மற்றும் கணிதம் (Mathematics) ஆகிய துறைகளின் கூட்டிணைவாகும். Georgette Yakman என்பவர் STEAM கல்வியை முதன்முதலில் 2006 ஆம் ஆண்டு அறிமுகம் செய்தார். STEAM என்பது எழுதப்பட்ட கலைத்திட்டம் ஒன்றல்ல. இதுவொரு கற்றல் அணுகுமுறையாகும். (Learning approach).

## STEM கல்வி மற்றும் STEAM கல்வி இரண்டிற்கும் இடையிலான வேறுபாடு

STEM கல்வி மற்றும் STEAM கல்வி இரண்டுமே விஞ்ஞான எண்ணக்கருக்களை அணுகுவதற்கான வழிமுறையாகும். ஆனால், STEM கல்வி, பிரச்சனைகளை தீர்ப்பதற்கு வன்திறன்களை (Hard skills) மட்டும் பிரயோகிக்கின்றது. ஆனால் STEAM கல்வி பிரச்சனைகளை தீர்ப்பதற்கு வன்திறன்கள் (Hard skills) மற்றும் மென்திறன்கள் (Soft skills) இரண்டையும் பிரயோகிக்கின்றது. மேலும் STEAM கல்வி, STEM எண்ணக்கருக்களை புரிந்துகொள்வதற்காக கூட்டுணர்வை (Collaboration) ஊக்கப்படுத்துகின்றது.

## STEAM கல்வியின் இயல்புகள்

- 21 ஆம் நூற்றாண்டின் பணியாட்களிற்கு தேவையான திறன்களான பிரச்சனை விடுவித்தல் (Problem Solving) மற்றும் திறனாய்வுச் சிந்தனை (Critical thinking) என்பவற்றை கட்டியெழுப்புவதற்கான கல்விசார் மாதிரிகையாக (Educational Model) STEAM கல்வி கருதப்படுகின்றது.
- எதிர்காலத்தில் மனிதகுலம் எதிர்கொள்ளும் சவால்களை வெற்றிகொள்வதற்கு STEAM கல்வி அவசியமாகும்.
- STEAM கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள், விஞ்ஞானம் (Science) , பொறியியல் (Engineering) மற்றும் ஆய்வு (Research) ஆகிய பரந்துபட்ட துறைகளில் மாணவர்களை, வேலைவாய்ப்புக்காக தயார்ப்படுத்துகின்றன.
- STEAM துறையில் கற்றவர்கள், பரந்துபட்ட தொழில்துறையில், வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்ள கூடியதாக இருக்கும்.

## STEAM கல்வியின் நன்மைகள்

- நிஜ உலகின் (real world) பிரச்சனைகளை வெளிக்காட்டுகிறது.
- நேரடிக்கற்றலை (Hands on Learning) உள்ளடக்குகிறது.
- பாடவிடயம் தொடர்பான சுயாதீன கண்டறிதலை (Independent exploration) ஊக்குவிக்கின்றது.
- கூட்டுணர்வை கற்பிக்கிறது.
- கல்வியில் சமத்துவத்தை ஊக்குவிக்கிறது.
- பின்வரும் மென்திறன்களை விருத்திசெய்கிறது.
  - தொடர்பாடல் (Communication)
  - திறனாய்வுச்சிந்தனை (Critical thinking)
  - படைபாற்றல் (Creativity)
  - பிரச்சனை விடுவித்தல் (Problem solving)
  - கூட்டுணர்வு (Collaboration)
  - ஈடுபாடு (Engagement) மற்றும் ஊக்கல் (Motivation)
- கற்றல் அனுபவங்களை தனியுரிமையாக்குதல் (Personalizing the learning approach)

**STEAM கல்வி கற்பித்தல் முறைகள்**

- செயற்றிட்டத்தை அடிப்படையாகக் கொண்ட கற்றல் (Project - based learning)
- கணித்தல் சிந்தனை (Computational thinking)
- Marker spaces

**STEAM கற்றல் செயற்பாட்டுக்கான உதாரணங்கள்**

- DIY engineering
- The bridge building challenges explores engineering ideas
- Build a Volcano (Science)
- Apple oxidation (Science)

# 09 பேரறிகையும் சுயநெறிப்படுத்தப்பட்ட கற்போரும்

தற்காலத்தில் 'வாழ்க்கை நீடித்த கல்வி' (Life-long learning) பற்றியும் அதன் முக்கியத்துவம் பற்றியும் உலகளாவியரீதியில் பேசப்பட்டு வருகின்றது. இதனுடைய ஓர் அங்கமாக 'வளர்ந்தோர் கற்றல்' (Adult learning) மற்றும் வளர்ந்தோருக்கு கற்பித்தல் (Andragogy) என்பன முக்கியத்துவம் பெறுகின்றன. மேலும் வினைத்திறனான வளர்ந்தோர் கற்றல்-கற்பித்தலில் 'பேரறிகையின்' (Meta Cognition) வகிபங்கு பற்றி விளங்கிக்கொள்ளல் மற்றும் அதன் உத்திகளைக் கற்பித்தல் என்பனவும் தற்காலத்தில் முக்கியத்துவம் பெறுகின்றன.

## அறிகை (Cognition)

மனிதர்கள் அறிபவற்றையும் சிந்திப்பவற்றையும் அறிகை என குறிப்பிடலாம். கற்பவர்கள் தமது கற்றலை அதிகளவில் வெற்றிகர மாக்குவதற்காக பயன்படுத்தும் கற்றல் நுட்பங்கள் அறிகை நுட்பங்கள் எனப்படுகின்றன. இவ்வறிகை நுட்பங்களே கற்றலை வளப்படுத்துவதற்கான தகவல்களைப் பெற்றுக்கொள்வதுடன், அவற்றை சிறந்த முறையில் கையாளுகை செய்யவும் எமக்கு உதவிபுரிகின்றன.

## பேரறிகை (Meta Cognition)

மக்கள் தமது சொந்த சிந்தனை தொடர்பாக சிந்தித்தல் பேரறிகை (Meta Cognition) எனப்படும். தற்காலத்தில் சில கல்வியியலாளர்கள், பேரறிகையினை மீஅறிகை என்ற சொற்பதத்தினாலும் அழைக்கின்றனர்.

- பேரறிகை என்பதனை பின்வரும் சொற்றொடர்கள் மூலமும் விளங்கிக்கொள்ளலாம்.
    - அறிதல் பற்றி அறிதல் (Knowing about knowing)
    - கற்றலுக்காக கற்றல் (Learning to learn)
    - உயர்மட்ட சிந்தனை (Higher order thinking )
    - பிரதிபலிப்புச்சிந்தனை (Reflective thinking )
    - பெரிய சிந்தனை (Big thinking)
    - நிறைவேற்றுச்சிந்தனை (Executive thinking)

இலங்கையின் பொதுக்கல்வியின் ஏழாவது கற்றல் தேர்ச்சியான, கற்றலுக்காக கற்றல் (Learn to learn) என்ற தேர்ச்சியானது மாணவர்களின் பேரறிகைத்திறன் விருத்தியை அடிப்படையாகக் கொண்டதாகும். இவ் கற்றலுக்கான கற்றல் தேர்ச்சியானது கலைத்திட்டத்தில் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது.

'விரைவாக மாறுகின்ற, சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கிநிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாக கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கு ஏற்ப இயங்கவும், அதனை முகாமை செய்யவும், வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச்செய்தல்.

பிள்ளைப்பருவத்தினரிலும் பார்க்க கட்டிளமைப் பருவத்தினர் சிறப்பான பேரறிகைத் திறன்களை கொண்டிருப்பார்கள். அதாவது பேரறிகைத் திறன்கள் விருத்தியடைய குறிப்பிட்ட காலம் தேவைப்படுகின்றது. மேலும் அறிகைசார் ஆட்சி, எழுச்சிசார் ஆட்சி மற்றும் உளஇயக்கம்சார் ஆட்சி மூன்று வகைக்கற்றலிலும் பேரறிகையானது தாக்கம் செலுத்துகின்றது. பேரறிகையினைக் கற்றுக்கொள்ள முடியும்.

பேரறிகையானது உளப்பாங்கு வளர்ச்சி, இலக்கு நிர்ணயம் மற்றும் மதிப்பீடு ஆகிய மூன்று தூண்களைக் (Pillars) கொண்டது. பேரறிகையானது

அறிவுக்கூறு (Knowledge component) மற்றும் கட்டுப்பாட்டுக்கூறு (Control component) ஆகிய இரண்டு கூறுகளைக் கொண்டது. பேரறிகையின் ஒழுங்காக்கமானது பின்வரும் ஐந்து செயற்பாடுகளை உள்ளடக்கியது.

- திட்டமிடல் (Planning)
- கட்டுப்படுத்தல் (Control)
- மதிப்பிடல் (Evaluation)
- கண்காணித்தல் (Monitoring)
- அணுகல் (Access)

## பேரறிகை விருத்திக்கான நுட்பங்களை கற்பித்தல் (Teaching strategies to develop metacognition)

- மாணவர்கள் தமது சொந்த கற்றல் மற்றும் சிந்தனையை கண்காணிக்க கற்றுக்கொடுக்க வேண்டும்.
- மாணவர்களுக்கு வேறுபட்ட கற்றல் நுட்பங்களை கற்றுக்கொடுக்க வேண்டும்.
- எண்ணங்களை ஏற்கனவே தம்மிடம் காணப்படும் அறிவுக் கட்டமைப்புடன் தொடர்புபடுத்திப்பார்த்தல்.
- மாணவர்கள் தம்மைச்சுற்றி நடைபெறும் விடயங்கள் தொடர்பாக, தமக்குரிய வினாக்களை வினாவுதல்.
- மாணவர்கள் உதவி கேட்கும்போது அவர்களுக்கு உதவுதல்.
- மாணவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் கற்றுக்கொண்ட அறிவு, திறன்கள், மனப்பாங்குகள் மற்றும் விழுமியங்களை பிறிதொரு சந்தர்ப்பத்தில் அல்லது விடயத்தில் பயன்படுத்துதல்.

## சுயநெறிப் படுத்தப்பட்ட கற்போர் (Self-regulated learners)

சுயநெறிப் படுத்தப்பட்ட கற்போரிடம் (Self-regulated learners) இயல்பாக பேரறிகைத்திறன்கள் காணப்படுகின்றன. மேலும் கற்றல் இலக்குகளை அமைத்தல், திட்டமிடல், சுய ஊக்கல், சுயகவனிப்பு, சுயகட்டுப்பாடு, கற்றல் உத்திகளின் பயன்பாடு, சுயமேற்பார்வை, சுயபிரதிபலிப்பு, சுயமதிப்பீடு, பொருத்தமான புலமைசார்ந்த உறவுகளைச் சுயமாகத் தேடுதல், சுயபிரதிபலிப்பு மற்றும் சுயமதிப்பீடு என்பன சுயநெறிப்படுத்தப்பட்ட கற்றலுக்கான ஆற்றல்களாக இனங்காணப்பட்டுள்ளன.

சுயநெறிப் படுத்தப்பட்ட கற்போரிடம் பின்வரும் விசேட இயல்புகள் காணப்படுவதாக கல்விசார் ஆராய்ச்சிகள் இனங்கண்டுள்ளன.

- சுயகற்றலுக்கான ஊக்கலை கொண்டிருப்பார்கள்
- தமது நுட்பங்களை தாமே திட்டமிடுவார்கள்
- பலவகையான கற்றல் நுட்பங்களைப் பயன்படுத்துவார்கள்
- தமது கற்றலை கண்காணிப்பதுடன் ஒழுங்கமைத்தும் கொள்வார்கள்
- உருவாக்கப்பட்ட நியமங்களுக்கமைவாக தமது கற்றலை மதிப்பிடுவார்கள்
- கற்றலுக்கு தேவையான ஆலோசனைகளை புலமைச்சிறப்புமிக்க பலரிடமிருந்தும் பெற்றுக்கொள்வார்கள்.
- பலவகையான தகவல்களை பல கோணங்களிலும் பெறுவார்கள்
- கற்றலுக்கான சாகமான சூழலை தாமே உருவாக்கிக்கொள்வார்கள்
- சுயநெறிப்படுத்தப்பட்ட கற்றல் செயற்றிறன்களைப் பெற்றிராத சகபாடிகளுடனான தொடர்புகள் இயல்பாகவே குறைவடையும்.
- அடைவுப் பரீட்சைகளில் உயர் புள்ளிகளைப் பெற்றுக்கொள்வார்கள்
- சுயகற்றலில் உயர் நம்பிக்கை கொண்டிருப்பார்கள்.

# இயல் – 03

# 10 பொதுப்பரீட்சை அடைவுகள் மட்டுமே கல்வியின் குறிகாட்டிகள் அல்ல

**தமிழ் மாணவர்களின் தற்போதைய கல்விநிலை எவ்வாறு உள்ளது?**

இலங்கையைப் பொறுத்தவரை அனைத்து மாகாணங்களிலும் தமிழ் மொழிமூலம் பரீட்சைக்கு தோற்றுகின்ற மாணவர்கள் வசிக்கின்ற போதிலும், வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளில் இருந்து அதிகமாக தமிழ் மாணவர்கள் பரீட்சைகளுக்கு தோற்றுகின்றனர். தமிழ்மொழி பேசுகின்ற மாணவர்கள் என்றரீதியில் முஸ்லிம் மாணவர்களும் உள்ளடக்கப்படுவார்கள். இலங்கையிலும், புலம்பெயர் தேசங்களிலும் வாழுகின்ற தமிழர்கள் மத்தியில் தமிழ் மாணவர்களின் பொதுக்கல்வி (General Education) அடைவுகளில் வீழ்ச்சி காணப்படுவது தொடர்பாக கவலை உள்ளது.

கல்வியின் அளவீடு எது என பார்த்தால், பொதுப்பரீட்சைகள் மட்டும் கல்வியியல் ஆகிவிட முடியாது. மாணவர்களுடைய ஆளுமை, ஒழுக்கம் போன்று பல விடயங்களை உள்ளடக்கியிருக்கும். தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரணதரப் பரீட்சை, உயர்தரப் பரீட்சை முடிவுகளை வைத்துக்கொண்டே கல்வி அடைவுகள் பொதுவாக பேசப்படுகின்றன.

அதே போன்று தமிழ் மாணவர்களின் அடைவுகள், சிங்கள மாணவர்களின் அடைவுகளுடனும் முஸ்லிம் மாணவர்களுடனும் ஒப்பிடப்படுகின்றது. கடுமையாக யுத்தம் நடைபெற்ற காலப்பகுதிக்கு பின்னர்

தமிழ் மாணவர்களினது பொதுப்பரீட்சை அடைவுகள் வீழ்ச்சியடைந்திருப்பதாக பரீட்சை திணைக்களத்தின் புள்ளிவிபரங்கள் எடுத்து காட்டுகின்றன.

தரம் - 5 புலமைபரிசில் பரீட்சையை எடுத்துக் கொண்டால், இப்பரீட்சை இரண்டு நோக்கங்களை கொண்டது. ஒன்று மாணவர்களை ஆறாந்தரத்திற்கு பிரபல பாடசாலைகளுக்கு அனுமதிப்பது. இரண்டாவது வறுமைக்கோட்டிற்கு உட்பட்டவர்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்குவது. தற்காலத்தில் அப்பரீட்சை அதன் நோக்கத்திற்கு மாறாக சென்று கொண்டிருப்பது அனைவர் மத்தியிலும் கவலையை ஏற்படுத்தியிருக்கிறது. இப்பரீட்சையினால், மாணவர்கள் பல்வேறு உளநெருக்குதல்களுக்கு உள்ளாகிறார்கள்.

இரண்டு வினாப்பத்திரங்களிலும் சேர்த்து 70 புள்ளிகளுக்குமேல் பெற்றுக்கொள்ளுதல் என்ற அடிப்படையில் நோக்கும்போது, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் குறிப்பாக தமிழ்மொழி பேசும் மாணவர்கள் அல்லது தமிழ் மாணவர்களுடைய அடைவுகள் குறைவாகக் காணப்படுவது மிகவும் கவலைக்குரிய விடயம். இதற்கான காரணம் அடிப்படை எழுத்தறிவு, எண்ணறிவற்ற கணிசமான மாணவர்கள் இருக்கிறார்கள்.

அதேபோல் க.பொ.த உயர்தரத்திலும் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும்போது பல்கலைக்கழக அனுமதியை பெற்றுக்கொள்ளுதல் அல்லது மூன்று பாடங்களிலும் சித்தியடைதல் அதேபோன்று தேசியரீதியில் சாதனை படைக்கின்ற மாணவர்கள் வரிசையிலும் வடக்கு கிழக்கு மாகாணங்கள் பெரியளவில் தாழ்ந்துவிடவில்லை. ஆனால் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடைவோர் வரிசையில் க.பொ.த உயர்தரத்திலும் பின்னணியில் இருக்கும் மாகாணங்களாகவே வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் இருக்கின்றன.

க.பொ.த சாதாரணதரப்பரீட்சை மிகவும் முக்கியமானதாகவே உள்ளது. குறித்த பரீட்சையில் சித்தியடையாவிட்டால், எதிர்கால கற்றல் நடவடிக்கையையோ, தொழில் வாய்ப்பையோ, உயர்நிலையையோ பெற்றுக்கொள்ள முடியாத சூழல் ஏற்படும்.

தேசியத்துடன் ஒப்பிடும்போது சில குறிப்பிட்ட தமிழ் மாணவர்கள் தமது திறமைகளை வெளிக்காட்டவே செய்கிறார்கள். ஆனால் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடையத் தவறுதல் அல்லது அடிப்படைத் தேர்ச்சியைப்

பெற்றுக்கொள்ளத் தவறுதல் போன்ற விடயங்களில் தமிழ் மாணவர்கள் பின்தங்கி இருப்பதாகத்தான் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

## முழு இலங்கையுடன் ஒப்பிடும் போது தமிழ் மாணவர்களின் கல்வித்தரம் குறைவடைந்துள்ளதா?

தமிழ்மொழி மூலமான பரீட்சை முடிவுகளை, சிங்கள மொழி மூலமான பரீட்சை முடிவுகளுடன் ஒப்பிடுவதிவதிலும் சில கருத்து வேறுபாடுகள் உண்டு. அதேபோன்று வடக்கு கிழக்கில் பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் தென்பகுதி மாகாணங்களை விட குறைவானது. பரீட்சைக்குத் தோன்றுகின்ற மாணவர்கள் சமஅளவில் இருந்தால் ஒப்பிடலாம். வடமாகாணத்தைப் பொறுத்தவரை பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவு. தமிழ்மொழி பாட அடைவுகளை சிங்கள மொழி அடைவுகளுடன் (வேறுபட்ட இரண்டு மொழி பாட அலகுகளுடன) ஒப்பிடுவது என்பது விமர்சனத்திற்குரியது. இருந்த போதிலும், அனைத்துப் பாடங்களிலும் சித்தி அடைந்தவர்கள், க.பொ.த சாதாரண தரத்தில் அடிப்படைப் புள்ளிகளைப் பெறத்தவறுதல் போன்ற முக்கிய குறிகாட்டிகளில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் பின்தங்கித்தான் இருக்கின்றன.

இலங்கையில் 33 சதவீதமான மாணவர்கள் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடையத் தவறுகின்ற காரணத்தினால் பாடசாலைக்கல்வியில் இருந்து அகற்றப்படுகிறார்கள். இப்பரீட்சை சித்திவீதத்தில் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும் போது, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் பின்னடைவாகவே இருக்கின்றன. அதேபோன்றே வடக்கு கிழக்கிலுள்ள கல்வி வலயங்களும் பின்னடைவாகவே காணப்படுகின்றன. குறிப்பாக யாழ் மாவட்டத்தில் உள்ள தீவகக் கல்வி வலயம் 99 ஆவது நிலையில் இருக்கின்றது.

## தமிழ் மாணவர்களின் கல்வித்தரம் குறைவடைந்து செல்வதற்கான காரணங்கள் எவை?

பல்வேறு காரணங்கள் இதில் செல்வாக்குச் செலுத்துகின்றன. சமூக ஊடகங்கள் மற்றும் ஊடகங்கள் வாயிலாகவும் பலரும் பல கருத்துக்களைத் தெரிவிக்கின்றார்கள். சிலர் பாடசாலை சார்பாகவும், சிலர் மாணவர்கள் சார்பாகவும், சமூகம், அரசியல் இவ்வாறு பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துவதனைக் காணலாம்.

மாணவர்கள் சார்பான காரணிகள் என்று கூறும் போது, யுத்தத்திற்குப் பின்னரான சூழலில் மாணவர்களுக்கான அதிகரித்த பொழுதுபோக்கு வசதிகள், கற்றலின்மை, அடிப்படை எழுத்தறிவு, எண்ணறிவு, வாசிப்புக் குறைவு போன்ற விடயங்களைக் கூறுகிறார்கள். இன்னுமொரு காரணத்தையும் கூறுகிறார்கள். புலம்பெயர் தமிழர்கள் தமது சொந்த உறவுகளுக்கு அவர்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக அனுப்புகின்ற வசதி வாய்ப்புகளை, இங்குள்ள மாணவர்கள் கற்றல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தாமல், உல்லாசமாக வாழ்வதுடன், வசதி வாய்ப்புக்களை அனுபவிப்பதுமாக ஒரு சூழல் காணப்படுகின்றது.

இவர்களுக்கு உழைப்பின் வலி, கல்வியினுடைய முக்கியத்துவம் என்பன தெரியாது. பொழுதுபோக்குகள், சிமாட் தொலைபேசி, அதிகரித்த செலவில் மோட்டார் சைக்கிள் இவ்வாறான விடயங்களைப் பலரும் குறிப்பிடுகிறார்கள். அதேபோல் பெற்றோர் சார்பான காரணிகளும் செல்வாக்குச் செலுத்துகின்றன.

குடும்ப வன்முறைகள், பாடசாலை தொடர்பான இடைத்தொடர்பின்மை, மதுப்பழக்கம், போதைவஸ்து போன்ற குடும்பசார் காரணிகளும், அதேபோன்று சமூகம்சார் காரணிகளும், யுத்தத்திற்குப் பின்னரான சூழலில் மாணவர்களின் கல்வியில் வீழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது.

வடகிழக்கு மாகாணங்களில் அதிகளவு தொண்டர் ஆசிரியர்கள் நியமிக்கப் பட்டிருக்கின்றார்கள். இவர்கள் ஆரம்ப வகுப்புக்களில் கற்பிக்கின்றார்கள். அவர்கள் போதிய பயிற்சி இல்லாதவர்களாக இருக்கிறார்கள். இவ்வாறான காரணிகள் மாணவர்களின் கற்றலில் செல்வாக்குச் செலுத்துகின்றது. அதேபோன்று கல்வி நிர்வாகத்திலும் பல்வேறு குறைபாடுகள் சொல்லப்படுகின்றன. கல்விநிர்வாகசேவை அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள் போன்றவர்கள் போதிய நிர்வாகத்திறனைக் கொண்டிருக்கவில்லை. அதுவும் மாணவர்களின் கற்றலில் தாக்கத்தை செலுத்துகின்றது. இதுபோன்று அரசியல்ரீதியான காரணங்களும் சொல்லப்படுகின்றது. வரலாறு போன்ற பாடங்களில் தமிழர் வரலாறு குறைவாக காணப்படுகின்றது.

அதேபோன்று சிங்கள மன்னர்களின் வரலாற்று விடயங்கள் அதிகமாகக் காணப்படுகின்றமை, இதனால் அவற்றை படித்து பாடமாக்குவதில் மாணவர்கள் இடர்ப்படுவதாக குறிப்பிடுகின்றார்கள். அத்துடன் ஆசிரியர்களுக்கான வழிகாட்டி கைநூல்கள் கிடையாமை, ஆசிரியர்கள் போதியளவில் பயிற்றுவிக்கப்படாமையும் காணப்படுகின்றது. வடகிழக்கில் பாடசாலை வளங்கள் தற்காலத்தில் ஓரளவு பூர்த்தி செய்யப்பட்டிருந்தாலும், பல பாடசாலைகளில் வசதிக்குறைபாடுகள் காணப்படுகின்றன. வகுப்பறைகள், ஆய்வுகூடங்கள், மலசலகூடம், குடிநீர் போன்ற அடிப்படை வசதிகள் பின்தங்கிய கிராமபுற பாடசாலைகளில் பூரணப்படுத்தப் படவில்லை. இவையும் மாணவர் அடைவில் செல்வாக்கு செலுத்துகின்றது.

அத்துடன் வடகிழக்கில் முன்பள்ளிக்கல்வி பலவீனமான நிலையில் காணப்படுகின்றது. அதில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. முன்பள்ளி ஆசிரியர்கள் முறையாக பயிற்றுவிக்கப் படவில்லை. கணிசமானவர்கள் க.பொ.த சாதாரண உயர்தரம் சித்தியடையாதவர்களாக காணப் படுகின்றார்கள். தொழில்திறமை அல்லது தொழிற்பயிற்சி குறைந்தவர்களாகக் காணப்படுகின்றார்கள். அவர்களுக்கான வேதனம் மிகவும் குறைவாக வழங்கப்படுகின்றது. இதனால் முன்பள்ளிக்கல்வி மிகவும் பலவீனமான நிலையில் உள்ளது. இதனால் காலப்போக்கில் மாணவர்களின் அடிப்படை எழுத்தறிவு எண்ணறிவை பெற்றுக்கொள்ள முடியாமல் இருக்கின்றார்கள். இதுவும் பொதுப் பரீட்சைகளில் கணிசமான அடைவுகளை பெற்றுக் கொள்வதில் செல்வாக்கை ஏற்படுத்துகின்றது.

**தமிழ் மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்த என்ன பணி ஆற்ற வேண்டும்?**

தனியே ஒரு தரப்பினர் மட்டும் முயன்று முன்னேற்றிவிட முடியாது. கல்வி வழங்கலில் பங்குபற்றுகின்ற அனைத்துப் பங்குதாரர்களும் குறிப்பாக மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், சமூகம், கல்வி அதிகாரிகள், அரசாங்கம், அரசசார்பற்ற நிறுவனங்கள், புலம்பெயர் உறவுகள் அனைவரும் இணைந்து ஒரு கூட்டு முயற்சியாக இதை முன்னெடுக்க வேண்டும்.

தற்காலத்தில் நான் ஏற்கனவே குறிப்பிட்ட தடைகளைத் தாண்டுவது தொடர்பான விரிவான ஆய்வு செய்யப்பட வேண்டும். அந்த ஆய்வின்

அடிப்படையில் செயற்றிட்டங்கள் அமைய வேண்டும். மாணவர்களின் எழுத்தறிவு மற்றும் எண்ணறிவு என்பன மேம்படுத்தப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் முன்பள்ளிகளின் கட்டமைப்பு வலுப்படுத்தப்பட வேண்டும். தரமான முன்பள்ளிகளை நிறுவுவதற்கு ஏது நிலைகள் ஏற்படுத்தப்பட வேண்டும். அதே போன்று ஒழுக்க விழுமியங்கள் கணிசமான அளவு குறைந்துள்ளதாக விமர்சனங்கள் எழுகின்றன. அதை தடுப்பதற்குரிய பொறிமுறைகளை ஏற்படுத்த வேண்டும். விழுமியக் கல்வி மாணவர்களிடத்தே வலுப்படுத்தப்பட வேண்டும். அதேபோன்று பயிற்றப்படாமல் இருக்கின்ற ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் முறையாகப் பயிற்றுவிக்கப்பட வேண்டும். பாடசாலைகளில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்.

குறிப்பாக கிராமப்புறப் பாடசாலைகள் வலுப்படுத்தப்பட வேண்டும். அதே போன்று நகர்ப்புறப் பாடசாலைகளில் மாணவர்களின் எண்ணிக்கை அளவுக்கு அதிகமாகக் காணப்படுகின்றது. மாணவர் பரம்பல் பாடசாலைகளுக்கிடையில் சீர்செய்யப்பட வேண்டும். கல்வி நிர்வாகிகள், பாடசாலை அதிபர்கள் வலுவூட்டப்பட வேண்டும். அவர்களுக்கு முறையான பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். அதே போன்று சமூக மட்டத்தில் பெற்றோருக்கான கல்வி வழங்கல் நிகழ்ச்சித் திட்டங்களைச் செய்ய வேண்டும். பெற்றோர்கள் பாடசாலைகளுடன் நல்லுறவைப் பேணி, மாணவர்களின் கல்வி தொடர்பாக ஆரோக்கியமான கலந்துரையாடலில் ஈடுபட வேண்டும்.

அதே போன்று துரித கற்றல் நிகழ்சித் திட்டங்கள் ஊடாக மாணவர்களுடைய கற்றல் செயற்பாடுகள் மேம்படுத்தப்பட வேண்டும். கொவிட்டுக்குப் பின்னரான காலப்பகுதியில் ஏறத்தாழ இரண்டு வருடங்கள் மாணவர்கள் தங்களது கல்வியை இழந்திருக்கிறார்கள். துரித கற்றல் நிகழ்ச்சித் திட்டங்கள் ஊடாக அதனைச் செய்யவேண்டும். அதற்குரிய பொறிமுறைகளை கண்டறிய வேண்டும். அதே போன்று அனைத்து மாணவர்களுக்கும் கலைத்திட்டம், மாணவர் நட்புறவாளராக அமைய வேண்டும். அதே போன்று புலம்பெயர் உறவுகளும் எமது பிரதேசத்தில் கல்வி அபிவிருத்தி தொடர்பாக கூடிய கரிசனையுடன் செயற்பட்டு அதற்குரிய ஊக்கங்களையும் செயற்பாடுகளையும் செய்ய வேண்டும்.

ஏற்கனவே கொவிட்டுக்குப் பின்னர் புலம்பெயர் அமைப்புக்கள் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார்கள். மேலும் ஆய்வின் அடிப்படையில் தேவைகள் என்ன இருக்கின்றது எனக் கண்டறிந்து அந்த நலத்திட்டங்களைச் செய்ய வேண்டும். குறிப்பாகப் பின்தங்கிய வலயங்களான தீவகம், வலிகாமம், கிளிநொச்சி, துணுக்காய், வவுனியா வடக்கு போன்ற கல்வி வலயங்களில் உள்ள பாடசாலைகளின் கல்வி மேம்பாட்டுக்கு அனைவரும் கூடிய கரிசனையுடன் செயலாற்ற வேண்டும்.

# 11 க.பொ.த உயர்தரத்தில் பொருத்தமான பாடத்துறையை தெரிவு செய்தல்



க.பொ.த சாதாரணதரப் பரீட்சை நிறைவடைந்துவிட்டது. நீங்கள் கற்கவுள்ள க.பொ.த உயர்தர பாடத்துறை மற்றும் பாடங்கள் தொடர்பான தெளிவு உங்களிடம் உள்ளதா? தனியார் கல்வி நிறுவனங்கள், உங்களை நோக்கி தமது விளம்பரங்களை ஆரம்பித்து விட்டன. க.பொ.த உயர்தரத்தில் சரியான பாடத்துறையை எவ்வாறு தெரிவுசெய்வது? தெரிவுசெய்த பாடத்துறையில் பாடசேர்மானங்களை எவ்வாறு தெரிவுசெய்வது?

**தரம் – 1 தொடக்கம் தரம் – 11 வரை உங்கள் பாடங்கள்**

தரம் ஒன்று தொடக்கம் தரம் பதினொன்று வரை மாணவர்கள் பல பொதுவான பாடங்களை கற்றிருக்கின்றார்கள். அங்கு பாடத்தெரிவுக்கான வாய்ப்புக்கள் குறைவு. அல்லது குறித்த ஒரு சில பாடங்களினை ஆழமாக கற்பதற்கு அல்லது அதில் நிபுணத்துவம் பெறுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை அல்லது குறைவாக காணப்படுகின்றது. க.பொ.த சாதாரணதரம் வரை

மாணவர்கள், அவர்கள் கற்கும் பாடங்களினூடாக பின்வரும் திறன்களை கற்றுக்கொள்கிறார்கள்.

- அடிப்படை வாழ்க்கைத்திறன்கள் (Basic life skills)
- தொடர்பாடல் திறன்கள் (Communication skills)
- பகுப்பாய்வு மற்றும் எண்சார் திறன்கள் (Analytical & Numeracy Skills)
- பொது அறிவு (General Knowledge)
- சமூக மற்றும் ஆளிடைத் திறன்கள் (Social & Interpersonal skills)
- அறம் மற்றும் சமூகநலன் தொடர்பான விழிப்புணர்வு (Awareness on Ethics and social wellbeing)
- அழகியல் விடயங்கள் (Aesthetic aspects)
- சில அடிப்படை தொழில்நுட்ப அறிவு மற்றும் திறன்கள் (Some technical knowledge & skills)

**க.பொ.த உயர்தரத்தில்**

க.பொ.த உயர்தரத்தில் மாணவர்கள், குறிப்பிட்ட ஒரு பாடத்துறையில் ஆழமாக கற்கவேண்டியுள்ளது. மேலும் குறித்த பாடத்துறையிலுள்ள பிரதானமான மூன்று பாடங்களினை ஆழமாக கற்பதற்கு ஆயத்தமாக வேண்டும். இவற்றுடன் பொதுத்தகவல் தொழில்நுட்பம் (General Information Technology - GIT) மற்றும் பொது ஆங்கிலம் (General English) ஆகிய பாடங்களையும் கற்கவேண்டும்.

**ஏன் க.பொ.த உயர்தரத்தில் சரியான தேர்வு முக்கியமானது?**

இது பெரும்பாலும் மாணவர்களின் நீண்டகால தொழில் வாழ்க்கையை தீர்மானிக்கின்ற, வாழ்நாள் முடிவாகும். இதில் மாணவர்கள் தவறு செய்தால், அதற்கான விலை உயர்ந்ததாக இருக்கும்.

**க.பொ.த உயர்தரத்தில் பாடத்துறைத்தெரிவிற்கான நுட்பங்கள்**

**உங்கள் ஆர்வத்தை அல்லது வேட்கையை பின்தொடருங்கள்**

நீங்கள் க.பொ.த உயர்தரத்தில் தெரிவுசெய்யும் பாடத்துறை, உங்கள் எதிர்கால தொழிலுடன் பொருந்தக்கூடியதாக இருக்க வேண்டும்.

### நீண்ட கால நோக்கில் சிந்தியுங்கள்

நீங்கள் க.பொ.த உயர்தரம் கற்பதற்காக செலவிடும் காலம் குறுகியது. ஆனால் நீங்கள் செய்யப்போகும் தொழில் நீண்ட காலத்திற்கானது. நீங்கள் படிப்பதை ரசிப்பது, நீங்கள் பயிற்சி செய்வதைப் போன்றதாக இருக்காது. எனவே தயவுசெய்து நீண்ட கால நோக்கில் சிந்தியுங்கள்.

### உங்கள் திறன் தொடர்பாக யதார்த்தமாக இருங்கள்

உங்கள் பெற்றோர், அதிபர், ஆசிரியர்கள் மற்றும் அனுபவமுள்ள மூத்தோரிடம் ஆலோசனை பெறுங்கள். ஆனால் அவர்களது வலுக்கட்டாயமான திணிப்பை ஏற்றுக்கொள்ள வேண்டாம். நண்பர்களின் அல்லது நண்பிகளின் பாடத்துறை தெரிவு உங்கள் பாடத்துறை தெரிவை பாதிக்க அநுமதிக்க வேண்டாம். எப்போதும் நினைவில் கொள்ளுங்கள், உங்கள் பாடத்தெரிவு, உங்கள் வாழ்க்கையையும் பணயம் வைத்துள்ளது. நீங்கள் முடிவெடுக்க வேண்டும், மற்றும் உங்கள் முடிவுக்கான பொறுப்பையும் எடுக்க வேண்டும்.

### தெரிவுகளை மிகவும் குறுகியதாக வரையறுக்க வேண்டாம்

உதாரணமாக நீங்கள் ஒரு வைத்தியராக வேண்டும் என்று குறிவைத்து உயிரியல் பாடத்துறையைத் தேர்ந்தெடுத்தால், நீங்கள் எதிர்பார்த்த முடிவுகளை அடைய முடியாவிட்டால் வேறு ஏதேனும் திட்டம் உள்ளதா? உண்மை என்னவென்றால், சிறிய சதவீத மாணவர்கள் மட்டுமே மருத்துவத்துறையை பின்பற்றுவதற்கான வாய்ப்பைப் பெறுகிறார்கள். வேறு சில துறைகளிலும் இதேநிலைமைதான் காணப்படுகிறது.

மேலும் பிரபலமான போக்குகளால் ஒருபோதும் ஏமாற வேண்டாம். உங்கள் திறமை, ஆர்வம் மற்றும் எதிர்கால இலட்சியத்திற்கு ஏற்ப பொருத்தமான பாடத்துறை மற்றும் பாடங்களை தெரிவு செய்யுங்கள். உங்கள் திறன்கள், கிடைக்கும் வாய்ப்புகள் மற்றும் போட்டி குறித்து யதார்த்தமான மதிப்பீட்டைக் கொண்டிருங்கள். COVID -19 பெருந்தொற்றின் பின்னரான கல்விச்சூழலையும் கவனத்தில் கொள்ளவும்.


### உங்கள் படிப்பு மற்றும் வாழ்க்கையை திட்டமிடுங்கள்

உங்கள் படிப்பு மற்றும் வாழ்க்கைக்கு ஒரு முதன்மை திட்டத்தை (Master Plan) வைத்திருங்கள். க.பொ.த உயர்தரமானது, முதன்மை திட்டத்தின் ஒரு பகுதி என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். முதன்மை திட்டத்தில் குறிக்கோள்களை அடைய முடியாவிட்டால் மாற்றுத் திட்டங்களைக் கொண்டிருங்கள் (திட்டம் - B மற்றும் திட்டம் - C)

### முடிவெடுப்பதற்கான படிநிலைகள் (Steps in taking the decision)

உங்களைப் பற்றி ஒரு SWOT பகுப்பாய்வு செய்யுங்கள். வாழ்க்கையில் உங்கள் ஆர்வம் (Passion) மற்றும் சமூகத்திற்கு சேவை செய்வது பற்றி சிந்தியுங்கள்.

பா
து
ற
ரி
ன்
ா
உ
க
ட
ள்
ப
ங்




டத்
ை
தெ
வி
பே
து
ங்
ளி
மு
ள
ல
க

ளை **(Strengths)** கவனத்தில் கொள்ளுங்கள்

சில உதாரணங்கள்

- நேர்மய சிந்தனை (Positive Thinking)
- நல்ல தருக்க சிந்தனை (Good Logical Thinking)
- இலக்கியத்தில் திறமை (Good at literature)
- தலைமைத்துவம் (Leadership)
- படைப்பாற்றல் (Creativity)
- நல்ல ஞாபகத்திறனை கொண்டிருத்தல்

- பெற்றோர்களால் தனியார் கல்விக்கு செலவு செய்ய கூடிய இயலுமை

**பாடத்துறை தெரிவின்போது உங்களிடமுள்ள பலவீனங்ளை (Weakness) கவனத்தில் கொள்ளுங்கள்**

சில உதாரணங்கள்

- கணிதத்தில் பலவீனமான நிலை
- இலக்கியத்தில் பாண்டித்திய குறைவு
- சமூகமயமாக்கல் குறைவு
- கலை திறமைகள் குறைவு
- பெற்றோருக்கு சில நிதி கஷ்டங்கள் உள்ளன
- ஞாபகத்திறன் குறைவு

**பாடத்துறை தெரிவின்போது உங்களுக்கான வாய்ப்புகளை (Opportunities) ஆராயுங்கள்**

- உங்களுக்கு உதவிபுரியக்கூடிய சமூகத்தில் காணப்படுகின்ற நேர்மயமான விடயங்கள்.
- ஒரு குறிப்பிட்ட துறையில் காணப்படுகின்ற அதிக சம்பளத்துடன் கூடிய வேலை வாய்ப்புகள்.
- சமூகத்திற்கு சேவை செய்வதற்கான வாய்ப்புகள்.
- சில துறைகளின் வளர்ச்சி
- கைத்தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சி
- உயர்கல்வி வாய்ப்புகளின் கிடைப்பனவு

**பாடத்துறை தெரிவின்போது உங்களுக்கான அச்சுறுத்தல்களை (Threats) கவனத்தில் கொள்ளுங்கள்**

- சூழலில் காணப்படுகின்ற எதிர்மறையான விடயங்கள் (Negative things in the environment)
- வேலை வாய்ப்புக்கள் அற்றநிலை (Lack of jobs)
- நாட்டின் பொருளாதாரத்தின் உறுதியற்ற தன்மை (Economic instability of the country)
- சில துறைகளில் வேலையின்மை பிரச்சினைகள் (Unemployment

issues in certain sectors)

**பாடத்துறைத் தெரிவுக்கு SWOT பகுப்பாய்வை எவ்வாறு பயன்படுத்துவது?**

உங்களுடைய பலங்கள் (strengths) மற்றும் வாய்ப்புக்களுக்கு (Opportunities) ஏற்றதாகவும் பலவீனங்கள் (Weakness) மற்றும் அச்சுறுத்தல்களால் (Threats) குறைந்தளவு பாதிக்கப்படக்கூடிய பாடத்துறையை தெரிவுசெய்யுங்கள்.

**பாடத்துறைத் தெரிவிலுள்ள பொதுவான ஆபத்துகள் (Common Pitfalls)**

- சிந்திக்காமல் செயல்படுதல்
- சமுதாயத்தின் போக்கிற்கு ஏற்ப செல்லுதல்
- மற்றவர்கள் பரிந்துரைப்பதை கண்ணை மூடிக்கொண்டு ஏற்றுக்கொள்ளுதல்
- பாடத்துறைத் தெரிவு தொடர்பாக தவறான முடிவுகளை எடுப்பது

சரியான பாடத்துறை மற்றும் பாடங்களை தெரிவு செய்து வாழ்க்கையில் வெற்றி பெற எனது வாழ்த்துக்கள்.

# 12 பொதுப்பரீட்சைகளுக்கு தயாராகும் மாணவர்களுக்கான வழிகாட்டல்

## அறிமுகம்

அன்புக்குரிய மாணவர்களே! உங்கள் அனைவருக்கும் வணக்கம். இந்த கட்டுரையினூடாக, இடர்காலத்தை புரிந்துகொள்ளல், பரீட்சைக்கு தயாராதல், கற்றல் நுட்பங்கள், ஞாபக நுட்பங்கள், பரீட்சைக்கால உடல் மற்றும் உளநலம் மற்றும் பெற்றோர்களுக்கான ஆலோசனைகள் ஆகிய விடயங்களை உங்களுடன் கலந்துரையாட விரும்புகிறேன்.

## இடர்காலத்தை புரிந்துகொள்ளல்

இந்த இடர்கால பாதிப்பு என்பது எமது நாட்டிற்கு மட்டுமுரியது அல்ல. இது ஒரு உலகளாவிய பாரிய பிரச்சனை அல்லது சவால் என்பதை அனைவரும் நன்றாக புரிந்துகொள்ள வேண்டும். பெரும்பாலான நாடுகளைப் போன்று, இலங்கையிலும் கல்வி நடவடிக்கைகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன. பாடசாலைகள் மற்றும் தனியார் கல்விநிறுவனங்கள் அடிக்கடி மூடப்படுவதால் நேரடியான கற்பித்தல் மற்றும் கற்றல் செயற்பாடுகள் தொடர்ச்சியாக பாதிக்கப்படுகின்றது. பல்வேறு சிரமங்கள் மத்தியில், நிகழ்நிலை முறையிலும் ஏனைய வழிவகையிலும் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் ஓரளவுக்கு முன்னெடுக்கப்பட்டு வந்தாலும், எமது மாணவர்களின் கல்வி தொடர்பாக நாம் அனைவரும் கவலை கொண்டிருக்கின்றோம். இதிலிருந்து எவ்வாறு

மீள்வது?, இச்சவாலை எவ்வாறு வெற்றிகொள்வது? என்பது பற்றி சிந்தித்து செயலாற்ற வேண்டும். இதற்கு முன்னரும் பல துன்பங்களை நாம் கடந்து வந்துள்ளோம். ஆனால் நாம் கல்வியைக் கைவிடவில்லை என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

**வினைத்திறனான கற்றல் நுட்பங்கள்**

- வகுப்பு குறிப்புகளை எழுதுங்கள்
- கற்ற விடயங்களை மேலும் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் எண்ணக்கருப்படமாக்குங்கள்
- நீங்களே உங்களை மதிப்பீடு செய்யுங்கள்
- உங்கள் உளப்படங்களை ( Mind Maps) வரையுங்கள்
- சுருக்க குறியீடுகளை பயன்படுத்துங்கள்.
- சுருக்கங்களை உருவாக்குங்கள்
- நண்பர்களுக்கு கற்பியுங்கள்

**க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தாயார் செய்தல்**

- உங்கள் கற்றல் இடத்தை ஒழுங்கமையுங்கள். (Organize your study space)
- உங்கள் பரீட்சை நாளை திட்டமிடவும் ( Plan your exam day)
- கற்றலுக்கு சமநிலையான நேர அட்டவணையை தயாரிக்கவும்
- பொருத்தமான நண்பர்களுடன் இணைந்து கற்றல் குழுக்களை ஒழுங்கமைக்கவும்.
- நீங்கள் போதியளவு சுயமாக கற்ற பின்னர் நண்பர்களுடன் இணைந்து குழுவாக கற்கலாம்.
- கற்றல் சந்தேகங்களை நண்பர்களுடன் இணைந்து தீருங்கள்.
- உங்கள் விடைகளை ஏனையவர்களுக்கு விளங்கப்படுத்தவும்.
- வரைபுகள், அட்டவணைகள் மற்றும் கோட்டுப் படங்களை பயன்படுத்தவும்.
- நீங்களே கற்றலுக்கு போதிய நேரத்தை ஒதுக்கீடு செய்யுங்கள்.
- சத்தமாக சொல்லிப் படிக்கவும்

- விடைகளை நேரம் கணித்து எழுதிப் பார்க்கவும்.
- கடந்தகால வினாக்களுக்கு விடையளித்து பழகவும்.

**க.பொ.த உயர்தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான பயனுள்ள வளங்கள் (Useful Resources)**

- கடந்த கால பரீட்சை வினாத்தாள்களை (Past Papers) இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.
- ஒவ்வொரு பாடத்திற்குமான ஆசிரியர் வழிகாட்டிகள் (Teachers' Guides) தனியே ஆசியர்களுக்கு மட்டும் பயன்படக்கூடியவை அல்ல. மாணவர்களும் அவற்றை தமது உசாத்துணை நூல்களாக பயன்படுத்தமுடியும். இவற்றை இலங்கை தேசிய கல்வி நிறுவகத்தின் இணையத்தளத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.
- மாதிரி வினாத்தாள்களை (Model Papers) வடக்கு மாகாண கல்வித் திணைக்கள இணையத்தளத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.
- பயிற்சி பெற வேண்டிய வினாத்தாள்களை, இலங்கையிலுள்ள முன்னணி பாடசாலைகளின் இணைய தளங்களில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

**மாணவர்களின் பரீட்சைக்கால உடல் மற்றும் உளநலம்**

- கற்றல் இடையே ஓய்வு எடுத்துக் கொள்ளவும். (Take intervals)
- அதிகமாக தண்ணீர் குடியுங்கள். (Drink plenty of water)
- உங்கள் உணவில் கவனம் செலுத்த வேண்டும். (Take care of your food)
- மூளைக்கு மற்றும் கற்றலுக்கு உதவக் கூடிய நொறுக்குத் தீனிகளை உண்ண வேண்டும். (Snack on brain food)
- உங்களுக்கு மனஅழுத்தத்தை தரக்கூடிய மூலங்களை அகற்றுங்கள்
- வீட்டில் ஆரோக்கியமான சூழலை உருவாக்கிக் கொள்ளுங்கள்

**பிள்ளைகளின் கற்றலில் பெற்றோரின் வகிபாகம்**

- ஒரு கற்கைத்திட்டத்தை அமைக்க உதவிசெய்யுங்கள்
- பொருத்தமான கற்றல் சூழலை உருவாக்கிக் கொடுங்கள்
- பிள்ளைகளின் சுயசுத்தத்தில் கவனம் செலுத்துங்கள்
- ஞாபகம் மற்றும் கற்றலில் கவனம் செலுத்துவதற்கு ஏற்றவகையில் உணவுகளை தயாரித்து வழங்கவும்.
- உங்கள் பிள்ளைகளை ஊக்கத்துடனும் நம்பிக்கையுடனும் ஆதரிக்கவும்.

# 13 வினைத்திறனான இணையக்கல்வி



இந்த கொவிட் - 19 இடர் காலத்தில் தேக்கநிலையில் இருக்கும் பாடசாலைக் கல்விச் செயற்பாடுகளை ஊக்கப்படுத்தி ஒழுங்கு படுத்த வேண்டும். இணையவழிக் கற்றல் - கற்பித்தலில் எதிர்நோக்கும் சவால்கள் பற்றி கலந்துரை யாடி நல்ல நடைமுறைகளை (Good Practices) பகிர்ந்து கொள்ள வேண்டும். மாற்ற முகவர்கள் மற்றும் பயனர்கள் இவற்றில் பயனுள்ள விடயங்களை பின்பற்றி செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

### மாணவர்களது கடமைகள் மற்றும் பொறுப்புக்கள்

பாடத்தில் கவனத்தை செலுத்துவதற்காக பொருத்தமான சூழலை மாணவர்கள் தெரிவுசெய்துகொள்ள வேண்டும். பொருத்தமான மற்றும் பொருந்தக்கூடிய ஆடைகளை அணிந்து பாடத்தில் இணைந்து கொள்ள வேண்டும். நாளாந்த மற்றும் வாராந்த நேரசூசியை இற்றைப்படுத்திக்

கொள்வதுடன் கண்களுக்கு புலப்படக்கூடிய ஓரிடத்தில் அதனை பார்வைக்கு வைத்தல் வேண்டும். இணையவழி கற்றல் செயற்பாட்டில் இணைகின்றபோது, ஆசிரியர் கூறும் ஆலோசனைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

கற்றல் இடைநடுவில் தமது கருத்தினைக் கூறுகின்றபோது மாத்திரம் Unmute செய்தல் வேண்டும். கேள்விகளைக் கேட்கின்றபோது அல்லது பதிலளிக்கின்றபோது கைகளை உயர்த்த (Hand raise) வேண்டும். அவசியமான தகவல்களை வழங்குவதற்கு மாத்திரம் Chat box ஐ பயன்படுத்தல் வேண்டும். ஆசிரியரால் அறிவுறுத்தல் வழங்க அவசியமாகும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் Video ஐ on செய்தல் வேண்டும். கற்றலுக்கு தடையாக அமையும் விதமாக உணவு உண்ணுதல் போன்ற செயற்பாடுகளை வரையறுத்தல் வேண்டும்.

**பெற்றோர்களது பொறுப்புக்கள் மற்றும் வகிபாகம்**

பிள்ளைகளின் அடிப்படைத்தேவைகள் தொடர்பில் பெற்றோர் தெளிவினைக் கொண்டிருக்க வேண்டும். பிள்ளைகளுக்கு நேரசூசி தொடர்பில் முன்னறிவிப்பு செய்ய வேண்டும். தடையின்றி உரிய பாடத்தில் இணைந்து கொள்வதற்கான சூழலை வீட்டில் உருவாக்கிக்கொடுக்க வேண்டும். முடியுமானவரை அனைத்து சந்தர்ப்பங் களிலும் பிள்ளைக்கும் ஆசிரியருக்கும் இடையில் இடம்பெறும் தொடர்பாடலை மேற்பார்வை செய்தல் வேண்டும்.



இணையவழி கற்றலில் ஏற்படும் தொழில்நுட்ப சிக்கல்களை நிவர்த்தி செய்துகொள்வதற்கு ஒத்துழைக்க வேண்டும். பாடங்களின் இடைவேளைகளில் எழுந்து நடமாட மற்றும் உடற்பயிற்சி செய்ய ஊக்குவிக்க வேண்டும். இணையவழிக் கற்றலின் போது, மாணவர்களின் சமூக ஊடகப் பாவனையை கண்காணிக்க வேண்டும். பிள்ளையின் இணையவழிக் கற்றலில் சிக்கல்கள் காணப்படின், வகுப்பாசிரியர் மற்றும் அதிபருக்கு தெரியப்படுத்த வேண்டும். பாடவேளையின்போது மட்டும்

பிள்ளைகள் டியிட்டல் சாதனங்களை கையாள பரிந்துரைப்பதுடன், இது தொடர்பாக கண்காணிக்க வேண்டும்.

### ஆசிரியர்கள் வகிபாகம்

இணையவழியினூடாக கற்பிக்கப்படும் பாட விடயங்கள் உரிய தேர்ச்சி மட்டத்தை மற்றும் பாட நூலை அடிப்படையாக கொண்டிருப்பதை உறுதிசெய்ய வேண்டும். மாணவர்களின் கவனத்தை தக்கவைத்துக் கொள்ளும் வகையில் கவரும் விதமாக பாடங்கள் தயாரிக்கப்பட வேண்டும். பிள்ளைகளுடன் தொடர்ச்சியாக



இடைவினையுறல் வேண்டும். பின்னூட்டல்களை பெற்றுக்கொள்ள வேண்டும். தினமும் பாடத்திற்குரிய வீட்டுவேலைகள் மற்றும் ஒப்படைகளை மாணவர்களுக்கு வழங்க வேண்டும். இணையவழிக் கற்றலில் பங்குபெறாத மாணவர்கள் தொடர்பில் பிரத்தியேக கவனம் செலுத்தி, மாணவர்களின் தனித்துவம் பாதுகாக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### பாடசாலை அதிபர் வகிபாகம்

அதிபர்கள், தினமும் தமது பாடசாலை ஆசிரியர்களின் இணையவழி கற்பித்தலை ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை செய்ய வேண்டும். ஆசிரியர்கள் முகங்கொடுக்கும் சிரமங்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும். இணையவழிக் கற்றலுக்கான காலம் மற்றும் நேரம் தொடர்பில் விசேட கவனம் செலுத்துதல் வேண்டும். இணையவழிக் கற்றலில் பங்குபெறாத மாணவர்கள் தொடர்பில் பிரத்தியேக கவனம் செலுத்தி, மாணவர்களின் தனித்துவம் பாதுகாக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### இணையவழிக் கற்றல் – கற்பித்தல் செயற்பாட்டில் ஏற்படும் சிக்கல்கள்

இணையவழி முறைமையினூடாக கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுகின்றமை புதியதொரு அனுபவமாக அமைகின்ற காரணத்தால் ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்களுக்கு பல்வேறு சிரமங்கள் ஏற்படக்கூடும்.

- மாணவர்களுடைய ஒழுக்கம் சார் பிரச்சினைகள்
- வீட்டில் தொலைக்காட்சி மற்றும் வானொலி ஆகியவற்றால் ஏற்படும் சத்தங்கள்
- பிள்ளைகள் உடல் மற்றும் உளரீதியான தாக்கங்களுக்கு உட்படுதல்



**மாணவர்களுடைய ஒழுக்கம்சார் பிரச்சினைகள் (Students' disciplinary Problems)**

- சத்தம்
- திரையில் கீறுதல் மற்றும் வரைதல்
- தேவையில்லாத Chatting
- Unsuitable Profile Picture
- வீட்டிலுள்ள ஏனையவர்களின் உரையாடல்
- சில மாணவரது அல்லது ஆசிரியரது Coverage weakness காரணமாக ஏற்படும் தடங்கல்கள்

**வீட்டில் இணையவழிக் கற்றலுக்கான சிறந்த சூழல்**

அமைதியான, பிள்ளையின் கவனம் வேறு திசைகளுக்கு செல்லாததாக, தொடர்ச்சியாக இணைய வசதியை பெறக் கூடிய, தூய்மையான, காற்றோட்டமுள்ள டியிட்டல் பாதுகாப்புமிக்க சூழல், இணையவழிக் கற்றலுக்கான சிறந்த சூழலாக அமையும்.



**மன அழுத்தம் மற்றும் அசாதாரண நிலைமைகளை முகாமை செய்தல்**

எதிர்பாராத சூழல், அன்றாட நடவடிக்கை குழப்பம், பெற்றோரின் மனவழுத்தம் என்பன பிள்ளைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும். ஆசிரியர், பிள்ளையின் வயதிற்கேற்றவிதமாக சரியான தகவல்களை வழங்க வேண்டும்.



**உசாத்துணைகள்**


1. இலங்கை கல்வி அமைச்சு, இணையவழிக்கல்வி வழிகாட்டல் கோவை (Guideline for online Education), இசுறுபாய, பத்திரமுல்லை.
2. நித்திலவர்ணன்,ஆ. (2021)எமது கல்விக்கான போராட்டம் - 1,2,3,4,5,6 முகநூல் பதிவுகள்,
3. நித்திலவர்ணன், ஆ.(2021) Zoom ஊடான கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள், முகநூல் பதிவுகள்

## இயல் - 04

# 14 முன்பள்ளி சிறார்களின் உளவிருத்தி

பிள்ளைகளின் ஆரம்ப வருடங்கள், அவர்களின் வாழ்க்கையின் அத்திவாரமாக அமைகின்றது. குறைந்தபட்சம் ஒருவருடமேனும் முன்பள்ளி சென்று கற்ற மாணவர்கள், பின்னாளில் தமது பாடசாலைக்கல்வியை வெற்றிகரமாக தொடர்வதற்கு தேவையான திறனாய்வுத் திறன்களை பெற்றுக்கொள்கின்றனர் என ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. மேலும் முன்பள்ளிக் கல்வியை பெற்றுக்கொண்ட மாணவர்கள், ஒரே தரங்களில் மீளமீள கற்கும் நிலையை அடைய மாட்டார்கள் என்பதுடன் பாடசாலையை விட்டு இடைவிலகும் தன்மை குறைவாகவும் காணப்படுகின்றது. அத்துடன் இவர்கள் வளர்ந்து பெரியவர்கள் ஆனதும், நாட்டின் சமாதானத்திற்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் பங்களிப்பு செய்யக்கூடியவர்களாக இருப்பார்கள்.

### இலங்கையில் முன்பள்ளி கல்வி வழங்கல் கட்டமைப்பு

இலங்கையில் முன்பள்ளிக்கல்வி தொடர்பான தேசிய கொள்கை, முதன்முதலாக 2019 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம், தேசிய கல்வி ஆணைக்குழுவால் உருவாக்கப்பட்டது. இலங்கையில் முன்பள்ளிகளினை பல்வேறு நிறுவனங்கள் நடாத்திச் செல்கின்றன. இலாப நோக்கற்ற

நிறுவனங்கள் மற்றும் வணிக நடவடிக்கையாக முன்னெடுக்கின்ற நிறுவனங்கள் முன்பள்ளிகளினை நிர்வகிக்கின்றன.

### முன்பள்ளிகளிடம் இருந்து பெற்றோர் எதிர்பார்ப்பவை எவை?

மகிழ்ச்சியாகவும், வினைத்திறனாகவும் மற்றும் ஈடுபாட்டுடன் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் தமது பிள்ளைகளுக்கு முன்பள்ளியில் கற்பிக்க வேண்டும் என எதிர்பார்க்கிறார்கள். பாதுகாப்பான மற்றும் ஆதரவான முன்பள்ளிச்சூழலை எதிர்பார்க்கிறார்கள். அறிவார்ந்த, மனவெழுச்சி விருத்திக்கான சூழல் முன்பள்ளிகளில் காணப்படவேண்டுமென எதிர்பார்க்கின்றார்கள். முன்பள்ளிக்கும் பெற்றோருக்குமிடையில் நல்ல தொடர்பாடல் காணப்பட வேண்டுமென எதிர்பார்க்கின்றனர்.

### தற்காலத்தில் முன்பள்ளி ஆசிரியர்களின் வகிபாகம்

முன்பள்ளி ஆசிரியர்கள், பிள்ளைகளுக்கான அடிப்படை வசதிகளை வழங்குதல் வேண்டும். கற்றல் கருவிகளையும் வளங்களையும் பொருத்தமாக பயன்படுத்த வேண்டும். பிள்ளைகளின் ஆர்வத்திற்கும் அவர்களின் கற்றல் பாங்கிற்கும் ஏற்றவகையில் கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்த வேண்டும். வகுப்பறையில் மாணவர்களின் நடத்தைகள் தொடர்பான ஒழுக்க விதிமுறைகளை வலியுறுத்தல் வேண்டும். வகுப்பறையை சிறந்த முறையில் முகாமை செய்ய வேண்டும். பெற்றோருடன் சிறந்த இடைவினையுறவைப் பேணுதல் வேண்டும்.

### கொவிட் – 19 பெருந்தொற்று, முன்பள்ளிச் சிறார்களிடத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள்

முன்பள்ளிச் சிறார்களிடத்தில், கற்றல் இழப்பு (Learning loss) ஏற்பட்டுள்ளது. அண்ணளவாக இரண்டு வருடங்கள் முன்பள்ளிகள் எதுவும் இயங்கவில்லை. முன்பள்ளிப் பிள்ளைகளின் கணிதத்திறன் மற்றும் மொழித்திறன் விருத்தி அதிகளவில் பாதிக்கப்பட்டுள்து. இக்காலப்பகுதியில் சகமாணவர்கள் மற்றும் ஆசிரியருடனான இடைத்தொடர்புகள் குறைவாக காணப்பட்டது. வீட்டில் அதிகளவிலான தொலைக்காட்சிப் பாவனை மற்றும் கைத்தொலைபேசிப் பாவனை காரணமாக பிள்ளைகள் பல்வேறு விதமான பாதிப்புகளுக்கு உள்ளாகினர். வாசிப்பு மற்றும் எழுத்துத்திறன்கள்

குறைவடைந்து சென்றன. பிள்ளைகள் பல்வேறுவிதமான உடல் மற்றும் உளப்பாதிப்புகளுக்கு உள்ளாகினர்.

### முன்பள்ளி சிறார்களின் உளநலம்

பிள்ளைகளின் மனவெழுச்சி ஆரோக்கியநிலை, அவர்களின் உடல்நலத்தை பேணுவதற்கு அவசியமாகும். பிள்ளைகள் தெளிவாக சிந்திக்கவும், சமூகத்திறன்களை விருத்தி செய்யவும் மற்றும் புதிய திறன்களை கற்றுக்கொள்ளவும் பிள்ளைகளுக்கு சிறந்த உளநலம் அவசியமானதாகும். பெரும்பாலான பிள்ளைகள், சிறந்த உளநலத்தை கொண்டிருக்கின்றனர்.

நல்ல நண்பர்கள், வளர்ந்தோரிடமிருந்து கிடைக்கக்கூடிய ஊக்கப்படுத்தும் வார்த்தைகள் என்பன, முன்பள்ளிப்பிள்ளைகளிடம் தன்னம்பிக்கை, உயர்ந்த சுயகணிப்பு மற்றும் ஆரோக்கியமான மனவெழுச்சிநிலை என்பவற்றை ஏற்படுத்துகின்றன. உளஆரோக்கியமான பிள்ளையின் வாழ்க்கை நேர்மயமானதாகவும் தரமானதாகவும் அமையும். மேலும் அவர்கள் வீட்டில், பாடசாலையில் மற்றும் சமூகத்தில் சிறப்பாக தொழிற்படுவர்.

### முன்பள்ளி சிறார்களின் உளநலத்தினை விருத்தி செய்வதற்கான வழிமுறைகள்

அன்பு, நல்லிணக்கம் மற்றும் தேர்ச்சிகளை முன்பள்ளி சிறார்களிடையே விருத்தி செய்தல் வேண்டும். நேர்மயமான மற்றும் பாதுகாப்பான முன்பள்ளிச் சூழலை உறுதிசெய்ய வேண்டும். பிள்ளைகளுக்கு நேர்மயமான நடத்தைகளையும் தீர்மானமெடுத்தலையும் கற்பிக்க வேண்டும். பிள்ளைகளிடையே மற்றையவர்களுக்கு உதவும் பண்பை ஊக்கப்படுத்த வேண்டும். நல்ல உடல் ஆரோக்கியத்தை ஊக்கப்படுத்த வேண்டும். முன்பள்ளிப் பிள்ளைகளுக்கு ஏற்படும் உளசுகாதாரப் பிரச்சனைகள் மற்றும் அதன் அறிகுறிகள் தொடர்பாக ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் விழிப்புணர்வூட்ட வேண்டும்.

# 15 மாணவர் இடைவிலகலும் போதைப்பழக்கமும்

க.பொ.த சாதாரணப் பரீட்சையில் மூன்றிலொரு பங்கினர் சித்தியடையாவிட்டாலும், அவர்கள் தொழில்வாய்ப்புக்களை பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பங்கள் காணப்படுவதால் மாணவர் இடைவிலகலை சாதகமாக பார்க்கின்ற தரப்பினரும் உள்ளனர். மாணவர்களாக இருக்கும்போதே வருமானமீட்டுவதற்கு கிராமங்களில் பல்வேறு தொழில்கள் காணப்படுகின்றன. இவ்வாறான தொழில்களில் மாணவர்கள் ஈடுபடுகின்றபோது பெற்றோரும் அதற்கு ஆதரவளிக்கின்றமை கல்விமீதான நாட்டத்தை குறைப்பதற்கு காரணமாகின்றது.

**பாடசாலை இடைவிலகல்களுக்கான காரணங்கள்**

பல காரணங்களால் மாணவர்கள் பாடசாலையைவிட்டு இடைவிலகுகின்றனர். தாழ்கல்வி அடைவுகள், நிதிசார் பிரச்சினைகள், வீட்டில் சகோதரர்களைப் பராமரித்தல் மற்றும் வீட்டு வேலைகளைச் செய்தல், கொவிட் பெருந்தொற்று, பொருளாதார நெருக்கடி, வறுமை மற்றும் கல்வியின் அணுகலும் கிடைப்பனவும், தொழில்களில் ஈடுபடுதல், பாடசாலைகளில் கேலி மற்றும் கிண்டலுக்கு உட்படுதல், மன அழுத்தத்திற்கு உட்படுதல், எதிர்பாராதவகையில் கருவுறுதல், சுதந்திரமின்மை மற்றும் பாடசாலை

வரவின்மை ஆகியவற்றை மாணவர்கள் பாடசாலையைவிட்டு இடைவிலகுவதற்கான முக்கியமாக காரணங்களாக குறிப்பிடமுடியும்.

தரம் ஒன்றிலிருந்து தரம் ஒன்பதுவரை வகுப்புகளைக்கொண்ட பாடசாலைகள் இயங்குகின்றன. இவற்றிலிருந்து தரம் ஆறுக்காக ஒருபகுதி மாணவர்கள், பிற பாடசாலைகளில் தம்மை இணைத்துக்கொள்கின்ற போதும் எஞ்சியவர்களில் ஐம்பது சதவீதமான மாணவர்கள், எந்தவொரு பாடசாலையிலும் தம்மை இணைத்துக்கொள்ளாத நிலைமைகள் காணப்படுகின்றன.

ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையிலான இடைவினை யுறவு குறைவடைந்துள்ளமையால், மாணவர்களுடன் அதிபர், ஆசிரியர்கள் நெருக்கமற்ற நிலையில் இருக்கின்றனர். இதனால் தொடர்ச்சியாக தாழ் அடைவுகளை பெற்றுக்கொண்டு கல்வி மீதான வெறுப்பில் உள்ள மாணவர்களை தொடர்ந்தும் கற்றல் செயற்பாடுகளில் உள்ளீர்க்க முடியாத கையறு நிலைமை காணப்படுகின்றது.

### பாடசாலை இடைவிலகல்களின் விளைவுகள்

இவ்வாறு பாடசாலையை விட்டு இடைவிலகுபவர்கள், சமூகக்குற்ற வாளிகளாக மாறக்கூடிய ஏதுநிலையும் காணப்படுகின்றது. பாடசாலை இடைவிலகல்களினால் வேலைவாய்ப்பின்மை சதவீதம் அதிகரிக்கிறது. தாழ் வருமானமட்டநிலை ஏற்படும். உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படுகின்றது.

### இடைவிலகலை குறைப்பதற்கான அரசபொறிமுறைகள் தோல்வி

பாடசாலை மாணவர்களின் இடைவிலகலைத் தடுப்பதற்காக காணப்படுகின்ற அரசபொறிமுறைகள் நடைமுறையில் தோல்வி கண்டுவிட்டன. பாடசாலைகளில் இருந்து மாணவர்கள் இடைவிலகினால் அவர்களை மீளிணைப்பதற்காக வலயக்கல்வி அலுவலகத்திலும் பிரதேச செயலகத்திலும் தலா ஒவ்வொரு அலுவலர்கள் உள்ளனர். ஆனால் இந்த அலுவலர்களின் செயற்பாடுகள் வெறுமனே சம்பிரதாயபூர்வமாக இருக்கிறது.

கட்டாயக்கல்விக்குழு உள்ளிட்ட கட்டமைப்புக்கள் காணப்பட்டாலும், கொவிட்டின் பின்னரான காலத்தில் ஏற்பட்டுள்ள சடுதியான இடைவிலகல்

நிலைமைகளை அவதானித்து, அதற்கான விசேட நிலைமைகளின் கீழான செயற்பாடுகளை கல்வி அமைச்சோ, ஆளுனர் அலுவலகமோ அல்லது அரசசார்பற்ற நிறுவனங்களோ முன்னெடுக்கவில்லை.

இடைவிலகும் மாணவர்கள் தொடர்பில் பாராமுகமான நிலைமைகள் நீடிக்குமாக இருந்தால் சட்டவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற சமூகவிரோதச் சக்திகள் இடைவிலகிய மாணவர்களை கருவியாக பயன்படுத்துவதற்கான அதிகளவிலான சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக இவ்வாறானவர்களை வன்முறைக்குழுக்கள், போதைப்பொருள் விற்பனையாளர்கள் மற்றும் முகவர்கள் இலகுவாக கையாள்வதால் அவர்கள் நாளடைவில் சமூகத்திற்கு பேராபத்தானவர்களாக மாறிவிடுவார்கள்.

## இலங்கையின் பிறப்புவீத வீழ்ச்சி, கல்வித்துறையில் ஏற்படுத்திவரும் தாக்கங்கள்

இலங்கையின் தற்போதைய பிறப்புவீதம் 14.84 சதவீதம் ஆகக் காணப்படுகின்றது. இதன் கருத்து 1000 மக்கள்தொகைக்கு 14.84 பிறப்புக்கள் நிகழ்கின்றன என்பதாகும். பின்வரும் அட்டவணை, 1960 ஆம் ஆண்டு மற்றும் அண்மைய மூன்றாண்டுகளில் இலங்கையின் பிறப்புவீதத்தை எடுத்துக்காட்டுகின்றது.

**அட்டவணை – 1: 1960 ஆம் ஆண்டு மற்றும் கடந்த மூன்றாண்டுகளில் இலங்கையின் பிறப்புவீதம்**

| ஆண்டு | பிறப்புவீதம் |
|---|---|
| 1960 | 37.10% |
| 2020 | 15.43% |
| 2021 | 15.13% |
| 2022 | 14.84% |

பெண்களின் கல்வியறிவு மட்டம் அதிகரிக்கும் போது, அவர்கள் குறைந்த எண்ணிக்கையான பிள்ளைகளை பெற்றுக்கொள்வதாக ஆய்வுமுடிவுகள் கூறுகின்றன. தற்காலத்தில் பாடசாலைகளில், தரம் ஒன்றிற்கு அனுமதி பெறுகின்ற மாணவர்கள் எண்ணிக்கையில் வீழ்ச்சி காணப்படுகின்றது. கணக்காய்வாளர் நாயகத்தின் அண்மைய விசேட அறிக்கையின்படி, இலங்கையிலுள்ள பாடசாலைகளில் அரைவாசி எண்ணிக்கையான பாடசாலைகளில், 200 இற்கும் குறைவான மாணவர்களே கல்வி கற்றுக்கொண்டிருக்கின்றனர்.

### அதிகரித்து வருகின்ற போதைப்பழக்கம்

தற்கால ஆய்வுகளின்படி இலங்கையில் 2.7 சதவீதமான கட்டிளமைப் பருவத்தினர் போதைக்கு அடிமையானவர்களாக காணப்படுகின்றனர். இதற்கான காரணிகளாக தாழ்வான பாடசாலை அடைவுகள், பெற்றோரின் புறக்கணிப்பு, குடும்பத்தின் தொழிற்பாடற்றநிலை, துஸ்பிரயோகத்திற்கு உட்படல், பெற்றோரின் குறைவான அல்லது அளவுக்கு அதிகமான கட்டுப்பாடு மற்றும் பெற்றோரின் விவாகரத்து என்பன காணப்படுகின்றன.

### சவால்களுக்கு முகங்கொடுக்க முடியாதநிலை

இளைஞர்கள் மற்றும் யுவதிகள் தமது எதிர்கால தொழில் மற்றும் கல்விக்கான தயார்படுத்தல்களிலும் தமது வாழ்க்கையை அனுபவிப்பதிலும் ஈடுபாட்டுடனுள்ளனர். சுமூகப்பிரச்சனைகள் மற்றும் குடும்ப விவகாரங்களில் குறைந்த கவனம் செலுத்துகின்றனர். முதியோர்கள் பெரும்பாலும் புறக்கணிக்கப்படுகின்றனர்.

கணிசமான அளவிலான இளையோர், தமது வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க முடியாதநிலையில் உள்ளனர். உளத்தாக்கங்கள் அல்லது நெருக்கீடுகளுக்கு இலகுவில் உள்ளாகின்றனர். தற்கொலை மற்றும் தொடர்பாடல் குறைபாடுகள் போன்ற சவால்களை எதிர்கொள்கின்றனர்.

### கிராமப்புறப் பாடசாலைகளும் சிட்டுக்குருவிகள் வாழும் கூடுகளே

நாம் மற்றயவர்களைப் பார்த்து போட்டி, பொறாமை கொள்ளக்கூடாது. எமது கிராமங்களில் இருக்கும் பாடசாலைகள் மிகவும் முக்கியமானவை. தமது

வீட்டிற்கு அருகே இருக்கும் பாடசாலைகளில் பிள்ளைகளை இணைப்பதன் மூலம், உடல் அசதி உள்ளிட்டவற்றை தவிர்த்து கற்றலில் ஈடுபாடு கொள்ள முடியும். அத்துடன் தற்காலத்தில் நிலவும் எரிபொருள் நெருக்கடி மற்றும் பொருளாதார நெருக்கடியை சமாளிக்கவும் முடியும்.

ஒவ்வொரு பாடசாலைகளும் சிட்டுக்குருவிகள் வாழுகின்ற அருமையான கூடுகளே. ஒவ்வோர் பிரதேச மக்களும் தனித்துவமான பண்பாட்டை மற்றும் சமய விழுமியங்களை கொண்டிருக்கின்றார்கள். இவற்றை கட்டிக்காத்து கல்வியை மேம்பாடடைய செய்வதில், பிரதேச பாடசாலைகள் அதிகளவில் பங்காற்ற முடியும்.

# 16 சமூகமும் உளநலமும்

உளநல மேம்பாட்டுக்கல்வி மற்றும் உளநலன் விழிப்புணர்வு என்பவற்றை நோக்காகக் கொண்டு உலக உளநலநாள் ஒவ்வோராண்டும் ஒக்ரோபர் பத்தாந்திகதி கொண்டாடப்படுகின்றது. உலக உளநல சம்மேளத்தினால் முதன்முதலாக 1992 ஆம் ஆண்டில் உலக உளநலநாள் அனுஸ்டிக்கப்பட்டது. தற்போது, 150 இற்கும் மேற்பட்ட நாடுகளில் உலக உளநலநாள் கொண்டாடப்படுகின்றது. சில நாடுகள் உளநோய் விழிப்புணர்வு வாரமாக கொண்டாடுகின்றன. இலங்கையில் முதன்முதலாக, 1994 ஆம் ஆண்டு தேசிய உளநலன் ஆணைக்கழுவால் (Sahanaya) உலக உளநலநாள் அனுஸ்டிக்கப்பட்டது.

## இலங்கை மக்களும் உளநலமும்

பொதுமக்களில் எவரும் பாலின வேறுபாடு, கல்விமட்டம் மற்றும் பொருளாதார வேறுபாடின்றி, உளரீதியான பாதிப்புக்கு உள்ளாகலாம். உலக சுகாதார நிறுவனத்தின் புள்ளிவிபரத்தின்படி, உலகளாவியரீதியில் பத்துப்பேரில் ஒருவர், உளநலக்குறைபாட்டால் அவதியுறுகிறார்.

தேசிய உளசுகாதார நிறுவனத்தின் புள்ளிவிபரங்களின்படி, இலங்கையில் ஐவரில் ஒருவர் உளக்குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் அவர்களில் 20% ஆனவர்கள் மட்டுமே உளச்சிகிச்சை பெற்றுக் கொள்கின்றனர். பாரம்பரியமாக குறிப்பிட்ட ஒரு தொகையினர் உளநோய்களுக்கு சிகிச்சை பெற்றுவரும் அதேவேளை, உளநலத்துடன் தொடர்புபட்ட பல்வேறு குறைபாடுகளினால் அவதியுற்று வருகின்றனர்.

மது மற்றும் போதைப்பொருள் பாவனை, கற்றல் இடர்பாடுகள், நரம்புசார் உளக்குறைபாடுகள், டிமென்சியா (dementia), தற்கொலை நடத்தைகள், உளவியல் துன்பம் (Psychological distress), விருத்திசார் குறைபாடுகள், துஸ்பிரயோகங்கள், ஆளுமைக்குறைபாடுகள், வன்முறை, உறவுமுறைகளை பேணுவதிலுள்ள குறைபாடுகள் போன்ற உளநலத்துடன் தொடர்புபட்ட பல்வேறு குறைபாடுகளினால் அவதியுற்று வருகின்றனர்.

தற்கொலை முயற்சிகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. இலங்கையில் தினசரி பத்து தற்கொலை முயற்சிகள் பதிவாகின்றன. அவர்களில் அரைவாசிப்பேர் மனவழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளது இனங் காணப்பட்டுள்ளது. இவற்றல் 21 - 30 வயதிற்குட்பட்ட பெண்கள் அதிக தொகையினராக உள்ளனர். அவர்களுக்கு அடுத்ததாக 20 வயதிலும் குறைந்தவர்கள் உள்ளனர். இதற்கான காரணங்களாக நகரமயமாக்கல், குடிப்பெயர்வு, யுத்தமனவடு, யுத்தத்திற்கு பின்னரான காரணிகள் மற்றும் கொவிட் பெருந்தொற்று என்பன காணப்படுகின்றன.

### இளையோரும் உளநலமும்

2014 ஆம் ஆண்டின் சர்வதேச இளையோர் தினம் இளையோரும் உளநலமும் (Youth and Mental Health) என்ற தலைப்பில் அனுஸ்டிக்கப்பட்டது. இலங்கையைப் பொறுத்தவரை மதுபானம் மற்றும் போதைப்பொருள் பாவனை, தற்கொலை மற்றும் இளவயதுக்கர்ப்பம் என்பன இளைஞர் யுவதிகளின் உளநலத்துடன் தொடர்புபட்ட பிரச்சனைகளாக காணப்படுகின்றன. இலங்கையின் சனத்தொகையில் 50 சதவீதத்தினர் மதுப்பாவனையால் துன்பப்படுகின்றனர். மேலும் இளைஞர்களின் உளநலமானது, அவர்களின் பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதாரத்தில் தாக்கம் விளைவிக்கின்றது. அதுவும் குறிப்பாக ஒதுக்கப்பட்ட மற்றும் உள்நாட்டு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இளையோரின் உளநிலைமைகள் மோசமானவையாகக் காணப்படுகின்றன.

இலங்கையில் இளவயதுக் கர்ப்பம் தரித்தல் வீதமானது கிழக்கு மாகாணத்திலும் மலையகத்திலும் உயர்வானதாக காணப்படுகின்றது. மேலும் தமது குடும்பத்தை திட்டமிட்டு வெற்றிகரமாக கொண்டுநடாத்த முடியாதவர்களாகவும் காணப்படுகின்றனர். புள்ளிவிபரங்களின்படி மதுப்பாவனை கூடிய மாகாணமாக வடமாகாணமும், போதைப்பொருள் பாவனை கூடிய மாகாணமாக கிழக்கு மாகாணமும் உள்ளன. இது நேரடியாக மக்களின் உளநலனைப் பாதிக்கக் கூடியதாகும்.

உள்நாட்டு யுத்தத்தினால் அதிகளவில் பாதிக்கப்பட்ட மக்களாக வடக்கு மாகாணத்தில் வாழும் மக்கள் காணப்படுகின்றனர். பல்வேறுவிதமான உளநலன் குறைபாட்டினால் தற்போதும் அவதியுற்றுவருகின்றனர் என பேராசிரியர் தயா சோமசுந்தரம் அவர்கள் குறிப்பிடுகின்றார். மேலும் வடக்கு மாகாணத்தில் உளச்சுகாதார சேவைகளை மீளநிறுவவேண்டிய தேவையுள்ளதாகவும் குறிப்பிடுகின்றார்.

**கொவிட் – 19 பெருந்தொற்றும் மக்களின் உளநலமும்**

கொவிட் - 19 பெருந்தொற்று காரணமாக, உலகளாவிய அளவில் மக்களின் உளநலம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் வெளிப்பாடாக, குடும்ப மற்றும் சமூக வன்முறைகள் அதிகரித்துச் செல்கின்றன. மதுப்பாவனை மற்றும் போதைப்பொருள் பாவனை அதிகரித்துச் செல்கின்றது. இணையவழி குற்றங்கள் அதிகரித்து செல்கின்றன.

இவற்றுக்கான பரிகார நடவடிக்கைகளை நாம் துரிதமாக முன்னெடுக்க வேண்டும். உளவள ஆற்றுப்படுத்தும் செயற்பாடுகளை பரவலாக முன்னெடுக்க வேண்டும். ஆன்மீக செயற்பாடுகள், தியானம் மற்றும் பஜனை செயற்பாடுகள் அதிகமாக தேவைப்படுகின்றன. உள்ளக மற்றும் வெளியக விளையாட்டில் மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் ஈடுபடுவதன் மூலம் உள ஆரோக்கியத்தை வலுப்படுத்திக் கொள்ளலாம். இசை, நடனம், நாடகம் மற்றும் ஓவியம் போன்ற அழகியல் செயற்பாடுகள் உள ஆரோக்கியத்தை மேம்படுத்தும் சக்தி கொண்டவை. வீட்டுத்தோட்டம் அமைத்தல் , வாசிப்பு மற்றும் எழுத்தாக முயற்சிகள் போன்றவை எமது உள நலனை மேம்படுத்தும்.

## தற்போது இலங்கையில் வழங்கப்படும் உளநலன் சுகாதார மேம்பாட்டுச் சேவைகள்

உளநலன் சுகாதார மேம்பாட்டுச்சேவைகள் நகரங்களை மையப் படுத்தியதாகவும் (City - based) வைத்தியசாலைகளை மையப் படுத்தியதாகவும் (Hospital - based) காணப்படுகின்றது. இலங்கையில் உளமருத்துவர்களின் பற்றாக்குறை காணப்படுகின்றது. 200 உள மருத்துவர்களுக்கான ஆளணி வெற்றிடம் காணப்படுகின்ற போதிலும் 67 உள மருத்துவர்களே உள்ளனர். அதிலும் 60 சதவீதமான உளமருத்துவ நிபுணர்கள் மேல் மாகாணத்திலேயே பணியாற்றிவருகின்றனர். பின்தங்கிய மாவட்டங்களில் உளமருத்துவ நிபுணர்கள் இல்லை. மேலும் இலங்கையின் அரச வைத்தியசாலைகளில் உளவியலாளர்களின் (Psychologist) பற்றாக்குறை நிலவுகின்றது.

## உளநலன் சுகாதார மேம்பாட்டுக்கான விதப்புரைகள்

சமுதாயத்தை அடிப்படையாக் கொண்ட உளநல சுகாதார மேம்பாட்டு சேவைகள் மேலும் பயன்தரக்கூடிவையாகும் என தேசிய உளநல நிறுவன நிபுணத்துவ ஆலோசகர் வைத்தியர் பெர்னாண்டோ அவர்கள் குறிப்பிடுகின்றார். பரீட்சார்த்தமாக கொலன்னாவ மற்றும் கடுவெல பிரதேசங்களில் முன்னெடுக்கப்பட்ட இந்நிகழ்ச்சித்திட்டம் வெற்றி யளித்துள்ளதாக குறிப்பிடுகின்றார்.

உளநலனுடன் தொடர்புபட்ட உளமருத்துவர்கள், உளவியலாளர்கள், உளசமூகப்பணியாளர்கள், கல்வித்துறையைச் சேர்ந்தோர், தாதியர்கள், தொழில்சார் சிகிச்சை வழங்குவோர் மற்றும் சுகாதாரம்சார் பின்னணியுள் ளோர் இணைந்து பணியாற்றுவதன் மூலமே நிறைவான சேவையை வழங்க முடியும்.

உளநல ஆரோக்கியம் எமது ஆரோக்கியத்தில் ஓர் அங்கம் ஆகும். அதனை சிறப்புற பேணுவதன்மூலம் எமது வாழ்வை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும்.

# 17 வடமாகாண பாடசாலைக் கல்வியின் பேண்தகுநிலை

**இலங்கையின் வடமாகாணத்தில் யுத்தத்திற்குப் பின்னரான சூழமைவு**

இலங்கையில் முப்பது ஆண்டுகளாக நடைபெற்ற உள்நாட்டு யுத்தம் 2009 ஆம் ஆண்டு மே மாதம் நிறைவடைந்ததாக இலங்கை அரசாங்கத்தினால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. யுத்தத்திற்குப் பின்னரான (2009 - 2023) பதின்னான்கு ஆண்டுகளில் வடமாகாணத்தின் அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூகம் சார்ந்த துறைகளில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன.

இலங்கையின் வடமாகாணத்தில் வாழும் மக்கள், பல்வேறு சவால்கள் மற்றும் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினைகள், காணி அபகரிப்பு, யுத்தப்பாதிப்புக்கள். யுத்தத்திற்குப்பின்னரான மனவடு, சமூகச் சீர்கேடுகள் அதிகரித்த மது மற்றும் போதைப்பாருள் பாவனை, அதிகரித்த வீதிவிபத்துக்கள் மற்றும் மதரீதியான முரண்பாடுகள் என்பவை அவற்றுள் முக்கியமானவையாகும். இந்தப்பின்னணியில், கடந்த பதின்னான்கு ஆண்டுகளில் பாடசாலைக் கல்வியின்நிலை பற்றி ஆராய்வதே இந்த கட்டுரையின் நோக்கமாகும்.

**இலங்கையின் பொதுக்கல்விக்கட்டமைப்பு (Sri Lankan Education System)**

இலங்கையின் பொதுக்கல்விக்கட்டமைப்பு பின்வரும் ஒழுங்கமைப்புக் களைக் கொண்டது.

01. ஆரம்ப பிள்ளைக்கல்வி (Early Childhood Education) (3-5 year age)

02. பாடசாலைக்கல்வி (School Education)

- ஆரம்பக்கல்வி (Primary Education) (தரம் 1 - 5)
- கனிஸ்ட இடைநிலைக்கல்வி (Junior Secondary Education) (தரம் 6 - 9)
- சிரேஸ்ட இடைநிலைக்கல்வி (Senior Secondary Education) (தரம் 10 - 13)

**வடமாகாணம் எதிர்நோக்கும் பொதுக்கல்விசார் பிரச்சினைகள்**

வடமாகாணத்தின் கல்வி நிர்வாகக் கட்டமைப்பில் பதின்மூன்று கல்விவலயங்களும் முப்பத்தைந்து கல்விக்கோட்டங்களும் அமைந்துள்ளன. யுத்தம் நிறைவடைந்து பதின்னான்கு ஆண்டுகள் நிறைவடைந்த போதிலும் 87 பாடசாலைகள் இன்னும் மீளத்திறக்கவில்லை. அதேநேரம், மாணவர் எண்ணிக்கை குறைவு காரணமாக பல சிறிய பாடசாலைகள் மூடப்படும் ஆபத்தினை எதிர்நோக்கியுமுள்ளன. வலிகாமம் மற்றும் வவுனியா தெற்கு ஆகிய கல்விவலயங்கள் அதிக பாடசாலைகளை கொண்டு இயங்குவதன் காரணமாக அவற்றினை நிர்வகிப்பது மற்றும் பாடசாலைகளின் வெளியக மேற்பார்வை என்பன கடினமாக உள்ளது.

பாடசாலைகளுக்கிடையில் மாணவர் பரம்பல் என்பது முக்கிய கல்விப்பிரச்சினையாக காணப்படுகின்றது. பிரபல பாடசாலைகளில் அளவுக்கதிகமாக மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்றார்கள். இது தொடர்பான விரிவான ஆய்வு தேவைப்படுகின்றது. ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் ஆசிரியர் - மாணவர் விகிதம் திருப்திகரமாக காணப்படுகின்ற போதும் பாடரீதியான ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. தொடர்ச்சியாக கற்பிப்பதற்கான கல்விசார் மற்றும் தொழில்சார் தகைமையற்ற தொண்டர் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரிய உதவியாளர்கள் அதிகளவில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

**பொதுப்பரீட்சைகளின் பெறுபேறுகளில் தளம்பல்நிலை அல்லது வீழ்ச்சி நிலைக்கான காரணங்கள்**

பொதுப் பரீட்சைகளின் பெறுபேறுகளில் தளம்பல்நிலை அல்லது வீழ்ச்சிநிலையில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

- நீண்டகால யுத்தம் ஏற்படுத்திய பாதிப்புக்களும் யுத்தத்திற்கு பின்னரான சூழல் ஏற்படுத்திய பாதிப்புக்களும் - உடல் மற்றும் உளப் பாதிப்புக்கள், பாடசாலைகள் மற்றும் பௌதீக வளங்களின் அழிவு, இடப்பெயர்வு
- வடமாகாண முன்பள்ளிக்கல்வி வழுங்கலில் காணப்படும் குறைபாடுகள் - முறையான முன்பள்ளிக் கொள்கை மற்றும் கலைத்திட்டமின்மை, பயிற்சியற்ற ஆசிரியர்கள், ஆசிரியர்களுக்கு போதிய வேதனம் வழுங்கப் படுவதில்லை மற்றும் முன்பள்ளிகளின் மேற்பார்வையிலுள்ள குறைபாடுகள்
- மாணவர்கள் தொடர்பான காரணிகள் - விழுமியக்குறைவு, அதிகரித்த சமூக ஊடகப்பாவனை மற்றும் வன்முறைக்கலாசாரம்
- ஆசிரியர்கள் தொடர்பான காரணிகள் - அர்ப்பணிப்பு குறைவு, தூர பணியிடங்களில் பணியாற்ற தயங்குதல், பாடஅறிவு மற்றும் கற்பித்தல் அறிவுக்குறைவு மற்றும் இற்றைப்படுத்தல் குறைவு
- பாடசாலை தொடர்பான காரணிகள் - மனித மற்றும் பௌதீக வளப்பற்றாக்குறை,
- கல்வி நிர்வாகம் தொடர்பான காரணிகள் - நிர்வாகத்திறன் குறைவு மற்றும் தொடர் வாண்மைத்துவ விருத்தியின்மை
- குடும்பம் தொடர்பான காரணிகள் - பிள்ளைகளின் கல்வியில் அக்கறையற்ற பெற்றோர்கள், அதிகரித்த பொழுது போக்குகள் மற்றும் தென்னிந்திய சினிமா மற்றும் தொலைக்காட்சி தொடர் நாடகங்கள்
- சமூகம் தொடர்பான காரணிகள் - மதுப்பாவனை, போதைப்பொருள் பாவனை மற்றும் வன்முறைக்கலாசாரம்
- அரசியல் மற்றும் திட்டமிட்ட புறக்கணிப்புக்கள் - கல்வியில் இனரீதியான, மதரீதியான, மொழிரீதியான மற்றும் அரசியல் ரீதியான புறக் கணிப்புக்கள்

**இலங்கையின் பொதுக்கல்வியில் புதிய அறிமுகங்களும் சீர்திருத்தங்களும்**

தேசியரீதியாக பல புதிய அறிமுகங்களும் சீர்திருத்தங்களும் கல்வியில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றுள் முக்கியமானவையாக பின்வருவ னவற்றை குறிப்பிடலாம்.

- க.பொ.த உயர்தரத்தில் தொழில்நுட்ப பாடத்துறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
- பதின்மூன்று வருட உத்தரவாத கல்வித்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
- தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்கள் கட்டாயமாகத் தோற்ற வேண்டிய தேவைப்பாடில்லை என்று கல்வியமைச்சு அறிவித்துள்ளது.
- தரம் - 6 தொடக்கம் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக்கல்வி கல்வி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- தரம் - 1 தொடக்கம் வாய்மொழி ஆங்கிலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**வடமாகாணப் பொதுக்கல்வி மேம்பாட்டுக்கான சிபார்சுகளும் ஆலோசனைகளும்**

வடமாகாணப் பொதுக்கல்வி மேம்பாட்டுக்காகன சில சிபார்சுகளை முன்வைக்க விரும்புகிறேன்.

- ❖ பாடசாலைகளுக்கிடையில் மாணவர் பரம்பல் சீர்செய்யப்படல் வேண்டும்.
- ❖ பரீட்சை அடைவுகளுக்கு அப்பால், மாணவரின் அறிவு, திறன் மனப்பாங்கு மற்றும் ஆளுமை விருத்திக்கு பங்களிக்கும் செயற்பாடுகளுக்கு பாடசாலைகளும் பெற்றோர்களும் முக்கியத்து வமளிக்க வேண்டும்.
- ❖ பெற்றோர்களும் சமூகமும் 'பிரபல பாடசாலை' (Popular School) என்ற போலி மாஜையிலிருந்து விடுபட வேண்டும்.
- ❖ தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளுக்கிடையில் ஆசிரியர் பரம்பலை சீராக்க வேண்டும். அதேபோன்று கல்வி வலயங்களுக் கிடையில் ஆசிரியவளம் சமமாகப் பகிரப்பட வேண்டும்.
- ❖ திறமைமிக்க கல்வி நிருவாகிகள், அதிபர்களை பொருத்தமாக இடப்படுத்தல் செய்ய வேண்டும்.
- ❖ பெற்றோர்கள், பாடசாலைகள் மற்றும் சமூகம் மாணவர்களின் ஒழுக்கம் மற்றும் ஆன்மீக கல்விக்கு முக்கியத்துவமளிக்க வேண்டும்.

# 18 வெற்றிகரமான தொழில் வாழ்க்கைக்கான வழிகாட்டல்கள்

வேலை உலகின் தேவைகளுடன் பாடசாலைக்கல்வி கலைத்திட்டத்தின் பொருத்தப்பாடு குறைவாகக் காணப்படுகிறது. பெரும்பாலான மாணவர்களும் பெற்றோரும் தொழில் வாய்ப்புக்கள் தொடர்பான விபரங்களை அறிந்திருக்க வில்லை. சுயதொழில், மாற்றீடான திறன்விருத்தி, பயிற்சி வாய்ப்புக்கள், மற்றும் வேலை உலகில் உள்ள பல்வேறுபட்ட தொழில்களின் விபரங்களை அறிந்திருக்கவில்லை. இலங்கையின் வடபுலத்திலுள்ள திருமண கட்டமைப்பு மற்றும் சீதனம் வழங்கும் முறைமை என்பன அரசாங்க உத்தியோகத்தில் அதிக நாட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. தற்கால இளைஞர்கள் மற்றும் யுவதிகள், முப்படைகள் மற்றும் தாதியியல் போன்ற தொழில்களில் குறைவான ஆர்வத்தை வெளிப்படுத்துகின்றனர் அல்லது அவற்றை முற்றாக புறக்கணிக்கின்றனர். இவை போன்ற காரணிகளால் வேலைவாய்ப்பின்மை அதிகரித்துச் செல்கின்றது. அட்டவணை - 1, 2019ஆம் ஆண்டின் வயது மற்றும் பால்ரீதியாக இலங்கையின் வேலைவாய்ப்பின்மையையும், அட்டவணை - 2, 2019ஆம் ஆண்டின் கல்விமட்டம் மற்றும் பால்ரீதியாக இலங்கையின் வேலை வாய்ப்பின்மையையும் எடுத்துக்காட்டுகின்றன.

**அட்டவணை – 1: வயது மற்றும் பால்ரீதியாக இலங்கையில் வேலைவாய்ப்பின்மை – 2019**

| வயதெல்லை | எண்ணிக்கை | வேலைவாய்ப்பின்மை (%) | | |
|---|---|---|---|---|
| | இலங்கை | இலங்கை | பாலினம் | |
| | | | ஆண் | பெண் |
| 15 - 24 | 56818 | 1.2 | 0.9 | 1.7 |
| 25 - 29 | 201698 | 21.5 | 17.6 | 28.7 |
| 30 - 39 | 93793 | 11.0 | 6.6 | 18.5 |
| 40 வயதிற்கு மேல் | 59009 | 3.1 | 1.3 | 6.3 |
| மொத்தம் | 411318 | 4.8 | 3.3 | 7.4 |

**அட்டவணை – 2 : கல்விமட்டம் மற்றும் பால்ரீதியாக இலங்கையில் வேலைவாய்ப்பின்மை – 2019**

| கல்விமட்டம் | எண்ணிக்கை | வேலைவாய்ப்பின்மை சதவீதம் (%) | | |
|---|---|---|---|---|
| | இலங்கை | இலங்கை | பாலினம் | |
| | | | ஆண் | பெண் |
| தரம் – 10 மற்றும் அதற்கு குறைவு | 140781 | 2.8 | 2.4 | 3.8 |
| க.பொ.த சாத.தரம் | 98346 | 6.5 | 4.9 | 9.6 |
| க.பொ.த உயர்தரம் மற்றும் அதற்கு மேல் | 172191 | 8.5 | 5.0 | 11.9 |
| மொத்தம் | 411318 | 4.8 | 3.3 | 7.4 |

**தொழிற்கல்வி மேம்பாட்டின் தேவைப்பாடு**

தொழில் கல்வியானது, தொழில்வாய்ப்பு, சுயதொழில், மற்றும் பொருளாதார உற்பத்தியை வளப்படுத்துகின்றது. வறுமையை ஒழிப்பதற்கான முக்கியமான கருவியாகவுள்ளதுடன் தனியாள் உற்பத்தியையும் அதிகரிக்கின்றது.

**வாழ்க்கைத் தேர்ச்சிக் கல்வியின் போதாமை**

வாழ்க்கைத்தேர்ச்சிக்கல்வி மற்றும் குடியுரிமைக்கல்வி ஆகிய பெயர்களால் பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இப்பாடங்கள் அன்றாட வாழ்க்கையின் தேவைகளையும் சவால்களையும் திறம்பட சமாளிக்க உதவுவதுடன் தகவமைப்பு, நேரான நடத்தைக்கான திறன்கள். சுயபிரதிபலிப்பு, திறனாய்வுச்சிந்தனை, பிரச்சனைவிடுவித்தல் ஆளிடைத் தொடர்புகள், நம்பிக்கையை கட்டியெழுப்புதல், தொடர்பாடல் மற்றும் ஒத்துழைப்பு ஆகிய திறன்களை விருத்திசெய்யவும் உதவிபுரியும்.

**தொழிலை திட்டமிடும் செயன்முறை (Career Planning Process)**

1. சுய மதிப்பீடு (Self -Assessment)

ஒருவர் தனது ஆர்வம், ஆளுமை, திறன்கள், பலங்கள், வாழ்க்கை முறை மற்றும் வேலைசார் விழுமியங்களை சுய மதிப்பீடு செய்ய வேண்டும்.

2. கண்டறிதல் (Exploration)

நேர்காணல்கள், பயிற்சிப்பட்டறைகள், மாநாடுகள், தொழில் தேடல் வளங்கள், கட்டுறுப் பயிற்சி, மற்றும் தன்னார்வப்பணிகள் போன்ற பல்வேறு முறைகளினூடாக குறிப்பிட்ட தொழில் தொடர்பாக ஆராய்ந்து தகவல்களை அறிய வேண்டும்.

3. நடவடிக்கை எடுத்தல் (Taking action)

- தீர்மானமெடுத்தல்
- தொழில் தேடல்
- தொழிலுக்கான விண்ணப்பம் தயாரித்தல்
- பொருத்தமானவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளல்
- நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளல்

**வெற்றிகரமான தொழிலை கட்டியெழுப்புவதற்கான 7 நுட்பங்கள்**

- உங்கள் இலக்குகளை (Goals) இனங்காணவும்
- ஒரு தொழில்முறை விண்ணப்பத்தை (Professional Resume) உருவாக்கவும்

- உங்கள் பலங்களை (Strengths) அறியவும்
- உங்கள் வாழ்க்கையின் முழுப்பொறுப்பையும் ஏற்கவும்
- எப்போதும் உங்கள் தராதரத்தை (Standards) உயர்த்திக் கொண்டிருங்கள்
- நீங்களே உங்களுக்கான தரத்தை வழங்குங்கள் (Brand Yourself)
- அதிகளவிலான தொடர்புகளை உருவாக்கிக் கொள்ளுங்கள் (Network....A lot)

**தொழில் வழங்குனர்கள் எதிர்பார்க்கும் அவசியமான தொழில் திறன்கள்**

தொடர்பாடல், நேரமுகாமைத்துவம், தலைமைத்துவம், தனியாள் திறன்கள், சுய திறன்கள், அணியாக மற்றும் கூட்டாக பணிசெய்தல், பொதுப்பேச்சு, திறனாய்வுச் சிந்தனை, வாய்மொழி மற்றும் எழுத்து மூலமான தொடர்பாடல், எண்ணிம தொழில்நுட்பம், தலைமைத்துவம், தொழில் முகாமைத்துவம், வணிக விழிப்புணர்வு, ஒழுங்குபடுத்தல் திறன், நெருக்கடிக்குள் பணியாற்றும் ஆற்றல் மற்றும் இசைவாக்கமடைதல் தற்கால தொழில் வழங்குனர்கள் எதிர்பார்க்கும் அவசியமான தொழில் திறன்களாகும்.

**ஆங்கில மொழியை கற்க வேண்டியதன் அவசியம்**

- ஆங்கிலம் உலகளாவிய மொழியாகும்.
- ஆங்கிலம், சர்வதேச தொடர்பாடலுக்கான மொழியாகும்.
- ஆங்கிலம், வணிகத்திற்கான மொழியாகும்
- பொழுதுபோக்கு உலகத்திற்கான அணுகலை ஆங்கிலமொழி வழங்குகின்றது.
- இணைய அணுகலுக்கான அதிகளவு வாய்ப்பை வழங்குகின்றது.
- ஆங்கிலமொழி, புதிய மனிதர்களை சந்திப்பதற்கு உதவிபுரியும்.
- ஆங்கில பல கலாச்சார அணுகலை வழங்குகின்றது.
- ஆங்கிலமொழி ஊடக தொழில்த்துறைக்கான மொழியாகும்.

### சிறந்த தொழிலொன்றை பெற்றுக்கொள்ள ஆங்கில மொழி உதவும்

இலங்கை பல்கலைக்கழகங்களில் கலைத்துறைப் பாடங்கள் பெரும்பாலும் சுதேச மொழிகளிலேயே (சிங்களம் மற்றும் தமிழ்) போதிக்கப்படுகின்றது. உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும், சிறந்த தொழி லொன்றை பெற்றுக்கொள்ள ஏனைய பாடத்துறை பட்டதாரிகளுடன் போட்டியிட வேண்டியுள்ளது. இதற்கு ஆங்கில மொழியறிவு அவசியமானதாகும்.

உலகின் முன்னணிப் பல்கலைக்கழகங்கள் ஆங்கில மொழியிலேயே கற்கைநெறிகளை நடாத்துகின்றன. இலங்கைப் பல்கலைக்கழகங்களில் கலைப்பீடங்களின், சமூகவிஞ்ஞானம், மானிடவியல் மற்றும் கலைத்துறை நவீன கற்கைநெறிகள் பெரும்பாலும் ஆங்கில மொழிமூலமே நடாத்தப்படுகின்றன.

பெரும்பாலான உசாத்துணை நூல்கள் மற்றும் உசாத்துணை கருவிகள் ஆங்கில மொழியிலேயே எழுதப்பட்டுள்ளன. பிந்திய மற்றும் தரமான ஆய்வுகள் மற்றும் தரமான ஆய்வுச் சஞ்சிகைகள் ஆங்கில மொழியிலேயே வெளிவருகின்றன. உள்ளூர் மற்றும் சர்வதேச ஆய்வு மாநாடுகளில் கலந்து கொண்டு ஆய்வு முடிவுகளை சிறந்த முறையில் முன்வைக்க ஆங்கில மொழியாற்றல் அவசியமாகும். உள்ளூர் மற்றும் சர்வதேச பயிற்சிப் பட்டறைகளில் கலந்துகொள்ள தகைமை பெறுவதற்கும், அங்கு சிறப்புற செயற்படுவதற்கும் ஆங்கில மொழியாற்றல் அவசியமாகும்.

### போட்டிப்பரீட்சைகளில் பொதுவாக பரீட்சிக்கப்படும் திறன்கள்

போட்டிப்பரீட்சைகளில் பொதுவாக நுண்ணறிவு, பொது அறிவு, கிரகித்தல், தமிழ்மொழி அறிவு, ஆங்கில மொழியறிவு மற்றும் விடய ஆய்வு ஆகிய விடயங்கள் பரீட்சிக்கப்படும்.

### போட்டிப்பரீட்சைகளுக்கு தயார்செய்தல்

தொடர்ச்சியான தயார்ப்படுத்த வேண்டும். சுயமாக தயார்ப்படுத்தல் மற்றும் குழுவாக கற்றல், தொடர்ச்சியான நூலகப்பாவனை மூலம் விடயங்களை இற்றைப்படுத்த வேண்டும்.

### தொழில் முயற்சியாளர் ஆகுங்கள்

காளான் வளர்ப்பு, கோழி வளர்ப்பு, தாரா வளர்ப்பு, கற்றாளைவளர்ப்பு, பனை உற்பத்திகள், மீன் மற்றும் இரால் வளர்ப்பு, தேக்கமரம் பயிர்ச்செய்கை, உழுந்து மற்றும் மஞ்சள் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் ஆகிய புதிய தொழில் முயற்சிகளை மேற்கொள்ளுங்கள்.

### தொழில் முயற்சியாளருக்கான வசதிகள்

தொழில் முயற்சியாளருக்கான வங்கிக்கடன்கள் மற்றும் காணித்துண்டுகள் என்பன வழங்கப்படுகின்றன. பல்கலைக்கழக மாணவர்களுக்கான மடிக்கணனிகள் கடனடிப்படையில் வழங்கப்படுகின்றன. இவ்வாறான வசதிகளைப் பயன்படுத்தி அனைவரும் தொழில் முயற்சியாளராக மாற வேண்டும்.

# இயல் - 05

# 19 முன்பள்ளிச்சிறார்களின் நடத்தைக்கோலங்களில் பண்பாட்டுக்காரணிகளின் செல்வாக்கு

**நிஷாந்தினி நித்திலவர்ணன்**

## ஆய்வுப்பின்னணி

ஒரு இனத்தின் பண்பாட்டின் நிலைபேறு என்பது, அதனைப் பேணிப்பாதுகாத்தல் மற்றும் கவனமாக அடுத்த சந்ததிக்கு கையளித்தல் ஆகிய செயற்பாடுகளில் தங்கியுள்ளது. மனித விருத்திப்பருவங்களில், முன்பள்ளிப்பருவம் பண்பாட்டு கையளிப்புக்கு பொருத்தமான பருவமாகும். முறையான பாடசாலைக்கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னதாக பிள்ளை பெற்றுக்கொள்ளும் கல்வியாக முன்பள்ளிக்கல்வி (Pre School Education) அல்லது ஆரம்பப்பிள்ளைக்கல்வி (Early Childhood Education) விளங்குகின்றது. தற்காலத்தில் 3 வயது தொடக்கம் 5 வயது வரையிலான காலப்பகுதியில் சிறார்கள் முன்பள்ளிகளில் கற்கிறார்கள். இக்காலப்பகுதி மனித விருத்திப்பருவங்களில் ஒன்றான பிள்ளைபப்பருவத்தின் ஆரம்ப காலப்பகுதியில் வருவதனால், முன்பள்ளிச்சிறார்களிடம் உளவிருத்தியும், மூளைவிருத்தியும் அதிகளவில் ஏற்படுகின்றது. எனவே இப்பருவம் கற்றலுக்கும், நேரான நடத்தை மாற்றத்துக்கும் சிறப்பான பருவமாகும். முன்பள்ளிச்சிறார்களின் நடத்தைக்கோலங்களில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச்செலுத்துகின்றன. அக்காரணிகளில் பண்பாட்டுக்காரணிகள் முக்கியத்துவம்வாய்ந்தவை.

### ஆய்வுப்பிரச்சினை

பண்பாடானது, பரம்பரை பரம்பரையாகக் கையளிக்கப்பட்டுவரும் ஒன்றாக காணப்படுகின்றது. இருந்தபோதிலும் உலகமயமாக்கலின் செல்வாக்கினால் பல சுதேசியப்பண்பாடுகள் தமது சுயத்தினை இழக்கும் ஆபத்தினை எதிர்நோக்கியுள்ளன.

இலங்கையில் நீண்டகாலமாக இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம், அதன் விளைவாக ஏற்பட்ட இடப்பெயர்வு, அகதிமுகாம் வாழ்க்கை, வெளிநாடுகளுக்கு புலம்பெயர்தல், கலாசார சீர்கேடுகள் மற்றும் அந்நிய நாகரிகமோகம் என்பவற்றினால் தமிழர் பண்பாடும் ஆட்டங்காணத்தொடங்கியுள்ளது. பண்பாட்டின் நிலைபேறு என்பது, அதனைப் பேணிப்பாதுகாத்தல் மற்றும் கவனமாக அடுத்த சந்ததிக்கு கையளித்தல் ஆகிய செயற்பாடுகளில் தங்கியுள்ளது.

“ஓர் இனத்தின் இனத்துவஅடையாளங்களாக அந்தஇனத்தின் பண்பாடும், கலாச்சாரப்பாரம்பரியங்களுமே காணப்படுகின்றன. அவற்றின் பாதுகாப்பிலேயே அவ்வினத்தின் பாதுகாப்பு தங்கியுள்ளது. தனித்துவம் என்றபோர்வையில் ஒதுங்கிப்புறநடையாகச்செல்லாமலும், பன்மைத்துவம் என்றவகையில் கரைந்து காணாமல்போகாமலும், ஒவ்வொரு இனமும் தமது கலாசாரத்தைப்பாதுகாத்து வாழவேண்டும்.” என பருத்தித்துறைப்பள்ளிவாசல் பிரதமஇமாம் அஜ்மல்.ஏ.காதர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார். மேலும் இலங்கை அரசதகவல்திணைக்களப்பணிப்பாளர் பேராசிரியர் ஆரியரத்தின அத்துக்கல அவர்கள் கலாச்சாரத்தைப்பற்றி அண்மையில் யாழ்ப்பாணத்தில் குறிப்பிடும்போது, “எந்தவொரு கலாச்சாரமும் மற்றுமொருகலாச்சாரத்தை மிஞ்சிவிடமுடியாது. ஒவ்வொரு கலாச்சாரத்திலும் உன்னதநிலையாக மற்றைய கலாச்சாரத்தை மதிப்பதே எனக்கூறப்படுகின்றது.” எனவும் “யாழ்பாணத்திற்கே உரிய பல கலாச்சாரமுக்கியத்துவங்கள் காணப்படுகின்றன. முன்னேற்றமடைந்த அதேவேளை பண்டைய கலாச்சாரத்தை உடையவர்களே யாழ்ப்பாணமக்கள்” எனவும் குறிப்பிடுகின்றார்.

ஆனால் இன்றுநாம் எமது “கலாச்சாரப்பாதுகாப்பு” தொடர்பாகக்கவலை கொண்டிருக்கின்றோம். பண்பாட்டு அடையாளங்களான தாய்மொழி, வாழ்க்கைமுறை, பாரம்பரியகலைகள் உணவுமுறை மற்றும் ஆடைஅணிகலன்கள் என்பன சிதைவடைய ஆரம்பித்துள்ளன. இதற்கான காரணங்களாக உலகமயமாக்கல், மேலைத்தேயமோகம் மற்றும் உள்நாட்டில் காண்பிக்கப்படும் இனரீதியானபாகுபாடு என்பன காணப்படுகின்றன.

புலம்பெயர்ந்து ஐரோப்பியநாடுகளில் வாழும் எமது உறவினர்களின் இரண்டாம் தலைமுறைப்பிள்ளைகள் பலர் தமிழ்மொழியை எழுதவாசிக்கத்தெரியாதவர்களாக இருக்கின்றார்கள்.

புலம்பெயர் உறவுகள் எங்களது வாழிவியலில் இருந்து பிரிக்க முடியாதவர்கள். எங்கள் பலகுடும்பங்களின் பொருளாதாரமூலங்கள். அவர்கள் தமது திருமணபந்தங்களுக்கான மணமகள் மற்றும் மணமகன்களை இங்கிருந்தே பெரும்பாலும் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. இனி ஒவ்வோராண்டும் கோடை விடுமுறைக்கு அவர்கள் இங்குதான் வருவார்கள். ஏனெனில் அவர்களது வேரும், வேரடிமண்ணும் இங்குதானுள்ளது. அவர்கள் சிலரின் நடவடிக்கைகள் எமதுபண்பாட்டைச்சிதைப்பதாக உள்ளன. அவர்களின் இரண்டாம் தலைமுறைக்கான பண்பாட்டுக்கையளிப்பு மற்றும் தமிழ் கற்றல் - கற்பித்தலுக்கான ஆக்கபூர்வமான முயற்சிகளை நாம் எடுக்கவேண்டும்.

எமது தாய்மொழியான தமிழ்மொழி பல்வேறுவழிகளிலும் அழிவுக்குட்பட்டுவருகின்றது. அதனை அழிவிலிருந்து பாதுகாக்கவேண்டும். எமது கலாசார உடைகளை நாம் அணியவேண்டும். எமக்கே தனித்துவமான உணவுகளைத்தயாரித்து உண்ணவேண்டும். பாரம்பரிய கலைகளைப் பேணிப்பாதுகாக்க வேண்டும். இது தொடர்பான விழிப்புணர்வு பாடசாலைகளிலிருந்தே ஊட்டப்படவேண்டும். பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் சமூகத்திலுள்ள இளைஞர் யுவதிகள் தமது தார்மீகக்கடமையாக இதனை ஏற்கவேண்டும். இதுதொடர்பான சமூகவிழிப்புணர்வு ஊட்டப்படவேண்டும். இதுவும் நிலை பேண்தகுஅபிவிருத்திக்கான கல்வியின் ஒரு அங்கமாகும்.

ஒரு இனத்தின் பண்பாட்டின் நிலைபேறு என்பது, அதனைப் பேணிப்பாதுகாத்தல் மற்றும் கவனமாக அடுத்த சந்ததிக்கு கையளித்தல் ஆகிய செயற்பாடுகளில் தங்கியுள்ளது. மனித விருத்திப்பருவங்களில், முன்பள்ளிப்பருவம் பண்பாட்டு கையளிப்புக்கு பொருத்தமான பருவமாகும்.

**ஆய்வின் நோக்கங்கள்**

இந்த ஆய்வானது பின்வரும் நோக்கங்களைக்கொண்டது,

1) முன்பள்ளிச் சிறார்களுக்கு பண்பாடு எவ்வாறு கையளிக்கப்படுகிறது என்பதை இனங்காணல்.

2) முன்பள்ளிச் சிறார்களின் நடத்தையில் பண்பாட்டுத் தாக்கத்தை அறிந்து கொள்ளல்
3) முன்பள்ளிச் சிறார்களின் நடத்தைகளில் நேரான மாற்றத்தை ஏற்படுத்தி பண்பாட்டை சிறந்த முறையில் கையளிப்பதற்கான தீர்வுகளை முன்வைத்தல்

### ஆய்வு முறையியல்

இந்த ஆய்வு, அளவைநிலை (Survey Method) ஆய்வாக முன்னெடுக்கப்பட்டது. அளவறிரீதியான (Quantitative) மற்றும் பண்பறிரீதியான (Qualitative) முறையியல்கள் இரண்டும் இணைந்த கலப்புமுறையியல் (Mixed Method) பயன்படுத்தப்பட்டது. முதல்நிலை மற்றும் இரண்டாம்நிலைத்தரவுகள் சேகரிக்கப்பட்டன.

### குடித்தொகையும் மாதிரியும்

வடமராட்சி வடக்குப் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட முன்பள்ளிகளில் கல்வி கற்கும் 1672 மாணவர்களே இங்கு ஆய்வுக் குடித்தொகை ஆகும். வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள 35 கிராம சேவையாளர் பிரிவில் இயங்குகின்ற 69 முன்பள்ளிகளில் இம் மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள்.

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள 14 முன்பள்ளிகள் தெரிவு செய்யப்பட்டன. இங்கு மாதிரி எடுத்தல், நுட்பமாக நோக்கு மாதிரி எடுத்தல் பயன்படுத்தப்பட்டது. அதாவது இப் பிரதேச செயலர் பிரிவில் இயங்கும் முன்பள்ளிகளில் வேறுபட்ட சமூகப் பின்னணியைக் கொண்ட முன்பள்ளிகள் தெரிவு செய்யப்பட்டன.

### தரவு சேகரித்தல் கருவிகளும் தரவுசேகரித்தல் முறைகளும்

இங்கு தரவு சேகரித்தல் கருவிகளாக வினாக்கொத்து, அவதானிப்புப் பட்டியல், நேர்காணல், ஆவணங்கள் என்பன தெரிவு செய்யப்பட்டன. அவதானிப்புப் பட்டியல் தயாரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் மாணவர் நடத்தை தொடர்பில் ஆய்வாளரினால் குறித்த முன்பள்ளிகளில் அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டது. முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வினாக்கொத்து வழங்கப்பட்டு தரவு சேகரிக்கப்பட்டது. குறித்த முன்பள்ளி அமைந்துள்ள சமூகங்களில் அல்லது பிரதேசங்களில் நிகழும் விழாக்கள், சடங்குகள், நிகழ்சிகள் என்பவற்றில் கலந்துகொண்டு நேரடியான அவ தானிப்பு மூலமும்

கலந்துரையாடல் மூலமும் தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. குறித்த சமூகத்தில் வாழும் சமூகப் பெரியார்களுடனான கலந்துரையாடல். மூலமும் தரவுகள் சேகரிக்கப்பட்டன.

## ஆய்வு முடிவுகள்

5.1வடமராட்சி பிரதேசத்தின் சமூக பண்பாட்டுப் பாரம்பரிய அம்சங்கள்

- வடமராட்சி பிரதேசத்தின் சமூக பண்பாட்டுப் பாரம் பரியங் களாக, சமூகம், உணவு, உடை, விளையாட்டு, அணிகலன்கள், வழிபாட்டு முறைமை, சிறு தெய்வவழிபாடும் கலைகளும், கூத்துமரபு, நாட்டுப்பாடல்கள் மற்றும் சடங்குகள் என்பன காணப்படுகினற்றன.
- இப்பண்பாட்டுக்காரணிகளை முன்பள்ளிச் சிறார்களுக்கு கையளிக்கின்ற முகவர்களாக குடும்பம், முன்பள்ளி ஆசிரியர், சமூகம், சகபாடிகள், சமூக நிறுவனங்கள், சமய நிறுவனங்கள் மற்றும் ஊடகங்கள் என்பன காணப்படுகின்றன.

## முன்பள்ளிகளில் சிறார்களின் மொழிப்பாவனை

முன்பள்ளிச்சிறார்கள் தமது உறவினர்களை, நாகரிகம் கலவாத சரியான முறைப்பெயர் சொல்லி அழைக்கின்றார்கள். அத்துடன் வயதுக்கு மூத்தவர் களை மரியாதையுடன் அழைக்கின்றனர். முன்பள்ளியில் சலங்கழித்தல், மலங்கழித்தல் ஆகிய செயல்களைக் குறிப்பதற்கு இடக்கரடக்கல் சொற்பதங்களைப்பயன்படுத்து கின்றார்கள்.

## முன்பள்ளிச்சிறார்களின் உணவுப்பழக்கவழக்கங்கள்

வடமராட்சிப்பிரதேசத்துக்கு தனித்துவமான உணவுப்பழக்கங்கள் முன்பள்ளிச் சிறார்களிடமும் காணப்படுகின்றன. தலைக்கு நல்லெண்ணை, கிரந்தி எண்ணை, மற்றும் தேங்காய் எண்ணை ஆகியவற்றை வைத்துக்கொண்டு முன்பள் ளிக்கு வருகின்றார்கள். முன்பள்ளியில் உணவு உட்கொள்ளும் போது, அனைத்து மாணவர்களும் சேர்ந்திருந்து உணவுண்பதுடன், உணவைப்பகிந்தும் உண்கின்றனர்.

வடமராட்சிப்பண்பாட்டை பிரதிபலிக்கும் உணவுவகைகளான ‘பருத்தித்துறைவடை’, ‘எள்ளுப்புண்ணாக்கு’, ‘பல்லுக்கொழுக்கட்டை’, மற்றும் ‘பிடிக்கொழுக்கட்டை’ ஆகிய உணவுகள் பற்றி தெரிந்து வைத்திருப்பதுடன் அவற்றை உண்டும் இருக்கின்றனர். பனை உணவுகளான புளுக்கொடியல், ஒடியல்கூழ், பனங்கட்டி, பனாட்டு, பனங்கிழங்கு, மற்றும்

பனங்காய்ப்பணியாரம் என்பவற்றைப்பற்றி தெரிந்து வைத்திருப்பதுடன், பெரும்பாலான மாணவர்கள் 'கருப்பனீர்' பற்றி தெரிந்து வைத்திருக்கவில்லை.

### முன்பள்ளிப்பிள்ளைகளின் உடையும் அணிகலன்களும்

பெரும்பாலான முன்பள்ளிகளில் மாணவர்கள் சீருடை அணியும் அதேவேளை ஒரு சில முன்பள்ளிகளில் மாணவர்கள் சீருடை அணிவதில்லை.முன்பள்ளிகளில் நடைபெறும் சமய விழாக்கள் மற்றும் கலைவிழாக்களுக்கு, தமிழர் பண்பாட்டை பிரதிபலிக்கும் உடைகளான பாவாடை சட்டை, வேட்டி சால்வை என்பவை அணிதல் வழக்கமாகவுள்ளது.
விளையாட்டுப்போட்டியில் நடாத்தப்படும் வினோத உடைப்போட்டியில் தத்தம் சமூகம் சார்ந்த பண்பாட்டை பிரதிபலிக்கும் வகையில் மாணவர்கள் தமது ஆற்றலை வெளிப்படுத்துகின்றார்கள். முன்பள்ளிச்சிறார்கள் முன்பள்ளிக்கு பல்வேறுபட்ட அணிகலன்களையும் அணிந்து வருகின்றார்கள். பெண்பிள்ளைகள் அனைவரும், பிராமண ஆண்பிள்ளைகளும் தோடு அணிகின்றனர்.சில பெண்பிள்ளைகள் கால்சங்கிலி அணிகின்றனர். பொதுவாக பெண்பிள்ளைகள் தலை அலங்காரத்திற்காக 'கிளிப்', 'றிபன்', 'பூல்பாண்ட்' மற்றும் 'அலிஸ்பாண்ட்' போன்ற நாகரிக அணிகலன்களை அணிந்திருந்தனர்.

### முன்பள்ளி ஆசிரியர்கள் தொடர்பான பின்னணித்தகவல்கள்

க.பொ.த(சா/த) கல்வித்தகைமை மட்டும் கொண்டவர்கள் 69.69% ஆகும். க.பொ.த(உ/த) கல்வித்தகைமை கொண்டவர்கள் 21.21% ஆகும். கலைப்பட்டதாரிகள் 3% ஆகவும் உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமாதாரிகள் 3% ஆகவும் உள்ளனர்.

யாழ்ப்பாணப்பல்கலைக்கழக புறநிலைப்படிப்புக்கள் அலகினால் நடாத்தப்படும் முன்பள்ளிச்சான்றிதழ் பயிற்சி நெறியை 03 ஆசிரியர்கள் பெற்றுள்ளார்கள். ஆசிரிய வாண்மைவிருத்தி நிறுவகத்தால் நடாத்தப்பட்ட முன்பள்ளிச்சான்றிதழ் கற்கைநெறியை 02 ஆசிரியர்கள் பெற்றுள்ளார்கள். இது தவிர பெரும்பாலான ஆசிரியர்கள் UNICEF, JRS, Caritas-Hudec, போரூட் மற்றும் வலயக்கல்வித்திணைக்களம் ஆகிய நிறுவனங்களால் வழங்கப்பட்ட பயிற்சிகளையும் பெற்றுள்ளனர்.

முன்பள்ளி ஆசிரியர்கள் முன்பள்ளிக்கு சேலை, பாவாடை-சட்டை, பஞ்சாபி போன்ற உடைகளை அணிகின்றார்கள். இதேபோல் அணிகலன் களாக காப்பு, சங்கிலி, தாலிக்கொடி ஆகியவற்றை அணிகின்றனர்.

### முன்பள்ளிக்கலைத்திட்டத்திலுள்ள பண்பாட்டு அம்சங்கள்

1. பாடல்கள்

முன்பள்ளிகளில் நாட்டார் பாடல்களான கும்மிப்பாடல்கள், கோலாட்டப்பாடல்கள், தலாட்டுப்பாடல்கள், மீனவப்பாடல்கள், அருவிவெட்டுப் பாடல்கள் போன்ற பாடல்கள் சொல்லிக்கொடுக்கப்படுகின்றன. பொம்மை, நிலா, அணில், கப்பல், பறவைகள், பழங்கள், மிருகங்கள், மழை, பூக்கள் என்பவற்றை சித்தரிக்கும் சிறுவர் பாடல்களும் கற்பிக்கப்படுகின்றன. நாளாந்த செயற்பாடுகளை விபரிக்கும் ஒழுக்கப்பாடல்களுடன், ஆங்கிலப் பாடல் களும் சொல்லிக்கொடுக்கப்படுகின்றன.

2. கதைகள்

நீதிக்கதைகள், புராண இதிகாசக்கதைகள், சமயம் சார்ந்த கதைகள், மற்றும் மிருகங்கள் பற்றிய கதைகள் என்பன சொல்லிக்கொடுக்கப்படுகின்றன.

3. சித்திரமும் ஆக்கச்செயற்பாடுகளும்

மண்ணினால் உருவங்கள் செய்தல், களியினால் (Clay) உருவங்கள் செய்தல், சித்திரங்கள் வரைததல், பூக்களினால் கோலங்கள் அமைத்தல் ஆகிய ஆக்கச்செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார்கள்.

4. நடனங்கள்

காவடி, கோலாட்டம், கும்மி, மீனவ நடனம், கரகம், அபிநயங்கள், ஆடலுடன்பாடல், தீப நடனம் ஆகிய நடனங்கள் முன்பள்ளிகளில் சொல்லிக்கொடுக்கப்படுகின்றன.

### முன்பள்ளிச்சூழலும் பண்பாட்டு அம்சங்களும்

### முன்பள்ளி அமைந்துள்ள வளாகம்

கணபதி முன்பள்ளி, மாதிரி முன்பள்ளி, இன்பருட்டி முன்பள்ளி, சைவமன்றம், கலாமன்றம் ஆகிய முன்பள்ளிகள் ஆலய வளாகங்களினுள்ளேயே அமைந்துள்ளன. சக்கோட்டை சவேரியர் முன்பள்ளியானது, சக்கோட்டை சவேரியார் தேவாலயத்துக்கு அருகில் அமைந்துள்ளது.

### முன்பள்ளியினுள் அமைந்துள்ள பூஜை அறை

சர்வோதயம் முன்பள்ளி, திக்கம் முன்பள்ளி ஆகியவற்றில் தனியான பூஜை அறைகள் காணப்படுகின்றன.

**விழாக்களின்போது மாவிலை தோரணங்கட்டுதல் மற்றும் நிறைகுடம் வைத்தல் பண்பாடு**

முன்பள்ளிகளில் நடைபெறும் விளையாடடுப்போட்டி, கால்கோல் விழா, நவராத்திரி விழா, முத்தமிழ்விழா, மற்றும் தைப்பொங்கல்விழா ஆகிய அனைத்து விழாக்களின்போதும் மாவிலை கட்டுதல், தோரணங்கட்டுதல், நிறைகுடம் வைத்தல் வழக்கம் காணப்படுகின்றது.

**முன்பள்ளிகளின் சுவர்களில் காணப்படும் பண்பாட்டை எடுத்தியம்பும் ஓவியங்கள்**

முன்பள்ளிகளின் உட்புறச்சுவர்களிலும், வெளிப்புறச்சுவர்களிலும் தமிழ், ஆங்கில அரிச்சுவடிகளும் பல்வேறுபட்ட ஓவியங்களும் காணப்படுகின்றன. பழங்கள், விலங்குகள், பல்வேறு தொழில் புரிபவர்கள் மற்றும் பல்வேறு கலைகள் பற்றிய ஓவியங்கள் உள்ளன.

**முன்பள்ளிகளில் காணப்படும் சமூகப்பெரியார்களின் படங்களும், அறிவுறுத்தல்களும்**

ஞானசம்மந்தர் முன்பள்ளியில் பாரதியார், விவேகானந்தர், இராமகிருஸ்ணபரமகம்சர், விபுலானந்தர், நேரு, மற்றும் காந்தியடிகள் ஆகிய சமூகப்பெரியார்களின் படங்கள் காணப்படுகின்றன. சதாவதானி முன்பள்ளி வளாகத்தில் சதாவதானி கதிரவேற்பிள்ளை அவர்களின் சிலை காணப்படுகின்றது.

**முன்பள்ளிகளில் காணப்படும் அறிவுறுத்தல்களில் வெளிப்படும் பண்பாட்டு அம்சங்கள்**

சர்வோதயம் முன்பள்ளியில் பெற்றோருக்கான அறிவுறுத்தலில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. 'ஞாயிற்றுக்கிழமை விஜயதசமியன்று, மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும். (பூசைப்பொருட்கள் கொண்டுவரவும், பெண் - பாவாடை சட்டை, ஆண் - வேட்டிசேட்) சதாவதானி முன்பள்ளியிலும் விஜயதசமி கொண்டாட்டம் தொடர்பான அறிவுறுத்தல் காணப்பட்டது.

**ஆய்வு முடிவுகளின் சுருக்கம்**

- முன்பள்ளிகள் அமைந்துள்ள கிராமங்கள் அவற்றிற்கென தனித்துவமான பண்பாடுகளைக் கொண்டுள்ளன.
- முன்பள்ளிச் சிறார்களின் நடத்தைக் கோலங்களில் சமயங்கள்

பெருமளவில் செல்வாக்குச்செலுத்துகின்றன. அதாவது சமயங்கள் மூலம் முன்பள்ளிச்சிறார்கள்,

- நல் விழுமியங்களைப்பெற்றுக்கொள்கிறார்கள்
- கலைகளைப்பற்றித்தெரிந்துகொள்கிறார்கள்
- முன்பள்ளி ஆசிரியா்களின் வயதும் அனுபவமும் சிறாா்களின் நடத்தைக் கோலங்களில் பெரிதும் செல்வாக்குச் செலுத்துகின்றன. அனுபவம் மிக்க ஆசிரியா்களி னால் பண்பாட்டுக் காரணிகளினை எடுத்துக்காட்டும் விதமான செயற்பாடுகள் முன்பள்ளிகளில் நிகழ்வதனைக் காணலாம். நவராத்திரி காலங்களில் சிறாா்களிடையே கோலப்போட்டி, மாலைப் போட்டிபோன்றன நடைபெறுகின்றன.
- முன்பள்ளி ஆசிரியா்களுக்கு வழுங்கப் படும் வேதனத்தில் பல்வேறு வேறுபாடுகளும் வேதனக்குறைவும் அவையும் ஒழுங்காக வழங்கப்படுவதில்லை போன்ற குறைபாடுகளினால் ஆசிரியா்கள் வேலையில் ஈடுபாடு இல்லாமல் இருக்கின்றனர்.
- முன்பள்ளி ஆசிரியா் கல்வி, பயிற்சிகளில் பல பிரச்சினைகள், குறைபாடுகள் காணப்படுகின்றன.

5.14 ஆய்வின் விதப்புரைகள்

- குடும்பமானது பாரம்பரியமான அம்சங்களான விளையாட்டுக்கள், உடைகள், அணிகலன்கள், உணவுகள், பண்டிகை நடைமுறைகள், விரதங்கள், சடங்குகள், விழுமியங்கள், புராண இதிகாசக்கதைகள் மரபு வழிக்கதைகள் போன்ற விடயங்களை அவைகளின் தனித்துவங்கள் சிதறாதவகையில் சிறாா்களுக்கு வழங்கவேண்டும்.
- முன்பள்ளி ஆசிரியர்கள், தாம் பண்பாட்டம்சங்களை முறையாகக் கடைப்பிடிப்பதுடன், சிறார்களுக்கு அவற்றை முறையாகக் கையளிக்க வேண்டும்.
- பாலா் நிறுவனங்களின் பொருத்தப்பாடு, ஒழுங்கமைப்பு, ஆசிரியா் கல் வித்தரம், அவா்களுக்கான கல்வி, பயிற்சி, வினைத்திறன் மிக்கதான கலைத்திட்ட ஆக்கம், சம்பளம், சலுகைகள், வளப்பகிா்வு, புத்தாக்கங்களை ஊக்குவித்தல், பொருத் தமான உட்கட்டமைப்பு இவற்றோடு இணைந்ததான முழுமையான செயற்பாடுகள் என யாவற்றையும் முடிந்தளவில் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதிலும் வழிகாட்டுவதிலும் அரசாங்கம் கரிசனையுடன் பொறுப்பேற்றுச் செயற்படவேண்டும்.

- சிறார்கள் பண்பாட்டு விழிப்புடையவர்களாக வளர்வதை ஊக்குவிக்கு முகமாக கல்வியியலாளர்கள் செயற்படவேண்டும்.
- முன்பள்ளிகள் பெரும்பாலும் சமூக நிறுவனங்களாகிய சனசமூக நிலை யங்கள், ஆலய நிர்வாகங்கள் ஆகியவற்றின் கீழேயே இயங்குகின்றன. பண்டிகைகளை முன்பள்ளிகளில் கொண்டாடுதல், கலாசார உணர்திறன் மிக்க நிகழ்வுகளை நடாத்து தல் மூலம் பண்பாட்டு அம்சங்களை சிறார்களுக்கு கையளிக்கலாம்.
- முன்பள்ளிச் சிறார்களின் நடத்தைக் கோலங்களில் ஊடகங்கள் பெரிதும் செல்வாக்குச் செலுத்துகின்றன. காலத்தின் தேவைக்கு ஏற்ப சிறார்களின் பண்பாட்டினை வளர்த்துச் செல்வதற்கான அறிவுசார்ந்த, சமயம் சார்ந்த, பண்பாடு சார்ந்த பல்வேறு விடயங்களின் ஊடாக ஊடகங்களை சிறார்களின் வளர்ச்சிக்குப் பயன்படுத்திக்கொள்வது அவசியமாகும்.

### உசாத்துணை நூல்கள்


1) பக்தவத்சலபாரதி (1999) பண்பாட்டு மானிடவியல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
2) மனோன்மணி,ச.(2003) தமிழர் ஜப்பானியர் வாழ்வில் தைப்பொங்கல், கிறிப்ஸ் பதிப்பகம், கொழும்பு.
3) முன்பள்ளி ஆசிரியர் பயிற்றுனர் கைநூல் -2002, ஆரம்ப பிள்ளைப்பருவ அபிவிருத்திப்பிரிவு, யுனிசெவ், திருகோணமலை.
4) சிவத்தம்பி, கா.(2005) வடமராட்சி தெற்கு மேற்கு வரலாற்றுக்குறிப்புக்கள் சில.., புதிய கட்டடத்திறப்புவிழா சிறப்புமலர், பிரதேசசெயலகம், வடமராட்சி தெற்கு மேற்கு, கரவெட்டி.
5) சிவலிங்கராஜா, எஸ்.(1984) வடமராட்சியின் கல்விப்பாரம்பரியமும் இலக்கிய வளமும், வடமராட்சி கல்வி வட்டம், பருத்தித்துறை.
6) இராசநாயகம், ஜெ.(2009) யாழ்ப்பாண மாவட்ட முன்பள்ளிகளின் தற்போதய நிலை, அகவிழி, றொறிங்டன் அவெனியு, கொழும்பு-7.
7) அந்தோனிமுத்து, சீ.(2008) வடமராட்சி வடக்கு(பருத்தித்துறை) பிரதேச செயலர் பிரிவில் றோமன் கத்தோலிக்க திருமறை, பிரதேச செயலக புதிய கட்டடத்திறப்புவிழா மலர், வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை.
8) இரகுவரன், பா. (2008) வடமராடசியில் சிறுதெய்வவழிபாடு, பிரதேச செயலக புதிய கட்டடத்திறப்புவிழா மலர், வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை.

# 20 திறன்வகுப்பறையைப் பயன்படுத்தி தமிழ்ப்பாடம் கற்றல் - கற்பித்தல்

*நிஷாந்தினி நித்திலவர்ணன்*

## அறிமுகம்

தற்கால 21ம் நூற்றாண்டில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் அதீத வளர்ச்சி அடைந்துள்ளது. கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் இதன் பிரயோகம் அதிகரித்துள்ளது. அந்த வகையில் இதன் பிந்திய பரிமாணமாக திறன் வகுப்பறைகளைப் (SMART Classrooms) பயன்படுத்தி கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் முன்னேடுக்கப்பட்டு வருகின்றது. இலங்கையிலும் இதன் முக்கியத்துவம் தற்போது உணரப்பட்டுள்ளது. நாடளாவியரீதியில் கணிசமான எண்ணிக்கையான பாடசாலைகளில் இச்செயற்றிட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலையில் திறன் வகுப்பறையைப் பயன்படுத்தி கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் முன்னேடுக்கப்பட்டு வருகின்றது. இந்த ஆய்வானது, திறன் வகுப்பறையைப்பயன்படுத்தி தமிழ் பாடம் கற்றல்-கற்பித்தலின் தாக்கத்தினை (Impact) மதிப்பிடும் நோக்கோடு மேற்கொள்ளப்பட்டது.

## ஆய்வுப் பிரச்சினை

தற்கால உலகமயமாக்கல் சூழலில், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமானது, கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் பெரும் செல்வாக்கினைச்செலுத்தி வருகின்றது. குறிப்பாக தமிழ் மொழி கற்றல் - கற்பித்தலில் இதன் வகிபங்கு அளப்பரியது. ஆனால் துரதிஸ்டவசமாக

சிங்கப்பூர், மலேசியா, தமிழ்நாடு மற்றும் தமிழர் புலம்பெயர்ந்து வாழும் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில், இலங்கையில் தமிழ்மொழி கற்றல் - கற்பித்தலில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு குறைந்த நிலையில் காணப்படுகின்றது.

மாணவர்கள் மத்தியில் தாய்மொழியை கற்கும் ஆற்றல் குறைந்து வருகின்றது. க.பொ.த.சாதாரண தரத்தில் தமிழ்மொழிப்பாடத்தில் சித்திவீதம் குறைவடைந்து செல்கின்றது. (இலங்கை பரீட்திணைக்களப்புள்ளி விபரங்கள்) தமிழைத்தாய் மொழியாகக் கொண்ட ஆங்கில மொழி மூலம் பயிலும் மாணவர்களின் தமிழ் பாடஅடைவில் சரிவுப்போக்கும் ஆர்வமின்மையும் அதிகரித்துச் செல்கின்றது. எனவே தமிழ் மொழிப்பாட கற்றல் - கற்பித்தலில் புதுமையான முறைகளைக் (Innovative Methods) கையாள வேண்டியுள்ளது. மேலும் மாணவர்களிடத்திலே தமிழ் மொழியினை விருப்புடன் கற்கும் ஆர்வத்தினையும் ஏற்படுத்தவேண்டியுள்ளது.

நவீன தொழிலுடன் இணைந்த வகையில் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டியுள்ளது. இத்தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் அறிமுகம் செய்யப்பட்டவையே திறன் வகுப்பறைகளாகும். எனவே தமிழ்பாட கற்றல் கற்பித்தலுக்கு இதன் பொருத்தப்பாடு பற்றி ஆராய்வது அவசியமாகும். அந்த வகையில் இந்த செயல்நிலை ஆய்வு முன்னெடுக்கப்பட்டது.

## ஆய்வு நோக்கமும் குறிக்கோள்களும்

இந்த ஆய்வின் நோக்கம் திறன் வகுப்பறையைப்பயன்படுத்தி தமிழ் பாடம் கற்றல்-கற்பித்தலின் தாக்கத்தினை மதிப்பிடலாகும். இந்த ஆய்வின் குறிக்கோள்களாக பின்வருவன அமைகின்றன.

1. திறன் வகுப்பறையில் தமிழ்ப்பாடம் கற்பது தொடர்பாக மாணவர்களின் புலக்காட்சியை அறிதல்.
2. பாரம்பரிய வகுப்பறைக் கற்பித்தலுக்கும் திறன் வகுப்பறைக் கற்பித்தலுக்கும் இடையிலான வேறுபாடுகளை இனங்காணல்.
3. திறன் வகுப்பறையைப் பயன்படுத்தி கற்பித்தலில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அறிதல்.
4. எதிர்காலத்தில் திறன் வகுப்பறையைப் பயன்படுத்தி தமிழ்ப்பாடத்தினை சிறந்த முறையில் கற்பிப்பதற்கான சிபாரிசுகளை முன்வைத்தல்.

## ஆய்வு முறையியல்

இது ஒரு செயல்நிலை ஆய்வாகும். யா/பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலையில் கல்விகற்கும் தரம் 7C ஐச் சேர்ந்த 30 மாணவிகளை ஆய்வுக்குடித்தொகையாகக்கொண்டு இச்செயல்நிலை ஆய்வு முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆய்வுக்காக முதல்நிலைத்தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் என்பன சேகரிக்கப்பட்டன. முதல்நிலைத்தரவுகள், மாணவர்களுக்கான வினாக்கொத்து, ஆய்வாளரின் பிரதிபலிப்புஜேணல், ஆய்வாளரின் அவதானிப்பு பட்டியல் முற்சோதனை மற்றும் பிற்சோதனைகள், மாணவருடனான குவிவுமையக்கலந்துரையாடல் போன்ற தரவு சேகரிப்புக்கருவிகளைப் பயன்படுத்தி சேகரிக்கப்பட்டது. இரண்டாம் நிலைத்தரவுகளாக தமிழ்ப்பாட தவணைப்புள்ளிகள் மற்றும் கணிப்பீட்டுப்புள்ளிகள் என்பன புள்ளிப்பதிவேட்டில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டன. செயல்நிலை ஆய்வுத்தலையீடு பின்வரும் ஒழுங்குமுறையில் மேற்கொள்ளப்பட்டது.

1. முற்சோதனை ஒன்று நடாத்தப்பட்டது.
2. திறன் வகுப்பறையைப் பயன்படுத்தி கற்பித்தல் மேற்கொள்ளப்பட்டது.
3. முற்சோதனை ஒன்று நடாத்தப்பட்டது.

**SMART வகுப்பறையைப்பயன்படுத்தி கற்பிக்கப்பட்ட பாடப்பரப்பு : தமிழ் இலக்கணம்**

**முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள்**

1. சொற்புணர்ச்சி மற்றும் அவற்றின் வகைகள் என்பவற்றை அறிந்து இனங்காணுதல்.
2. Monster quiz மூலம் பொருத்தமான சொற்களை இணைத்தல்
3. ஒத்தசொல், எதிர்ச்சொற்களை Monster quiz மூலம் பொருத்தமாக இணைத்தல்



உரு 1: திறன்பலகையைப் பயன்படுத்தி ஆசிரியர் கற்பித்தல் செயற்பாட்டினை முன்னெடுத்தல்



உரு 2: திறன் வகுப்பறையில் மாணவர்கள் ஆர்வத்துடன் கற்றல்



உரு 3: மாணவிகள் திறன் பலகையில் சொற்புணர்ச்சி மற்றும் அவற்றின் வகைகளை இனங்காண்பதற்கு Monster quiz மூலம் பொருத்தமாக இணைத்தல்,



உரு 4: மாணவிகள் திறன் பலகையில் Monster quiz ஐப் பயன்படுத்தி ஒத்த சொல், எதிர்ச்சொற்களை இனங்கண்டு பொருத்துதல்

ஆய்வு முடிவுகளும் விதப்புரையும்

**'திறன் வகுப்பறை' (SMART Classroom) பற்றிய மாணவிகளின் அபிப்பிராயம்**

நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி கற்கும் அறையாக, புதிய விடயங்களை கற்றுக்கொள்ளும் இடமாக, மகிழ்ச்சிகரமான கற்றல் நடைபெறும் இடமாக மற்றும் கற்றலுக்கு உதவும் இடமாக திறன் வகுப்பறையை மாணவர்கள் குறிப்படுகின்றனர்.

**திறன் வகுப்பறையில் தமிழ்ப்பாடம் கற்பது தொடர்பாக மாணவிகளது அபிப்பிராயங்கள்**

- திறன் வகுப்பறையில் தமிழ்ப்பாடம் கற்பதும் விளங்கிக்கொள்வதும் இலகுவானது.
- திறன் வகுப்பறை, பாடவேளை முழுவதும் தமது கவனத்தை பாடத்தில் செலுத்த உதவுகின்றது.
- திறன் வகுப்பறை, எம்மை படிக்க தூண்டுகிறது.
- திறன் வகுப்பறை, எமது சிந்தனையை தூண்டியது
- திறன் வகுப்பறை, தமிழ் மொழியின் கூறுகளை அதிகளவில் கற்க எனக்கு உதவியது
- திறன் வகுப்பறை, பாடவேளை நேரத்தை அதிகளவு வினைத்திறனாக்க உதவியது
- திறன் வகுப்பறை, பாடவேளையின்போது முக்கிய விடயங்களை மீட்டுப்பார்க்க உதவியது

- திறன் வகுப்பறை, பாடவேளையின்போது அதிகளவு என்னை ஊக்குவிக்கிறது
- தமிழ் பாடம் கற்றலுக்கு திறன் வகுப்பறை, அதிகளவு பயனுடையது

**திறன் வகுப்பறையைப் பயன்படுத்தி கற்றல்–கற்பித்தலில் எதிர்நோக்கும் பிரச்சினைகள்**

- முதலில் திறன் வகுப்பறையில் கற்பது கஸ்டமாக இருந்தது எனவும் பின்னர் படிப்படியாக எனக்கு விளங்கியது எனவும மாணவிகள், குறிப்பிட்டுள்ளனர்.
- திறன் வகுப்பறையில் கற்பதில் எதுவித பிரச்சனையுமில்லை என குறிப்பிட்டுள்ளனர்.
- எழுதும்போது பிழையாக எழுதினால், அழிந்துபோய் திருப்பி எழுத நேரம் எடுக்கும் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.
- படிப்படியாக தொழில்நுட்பத்தை அடையக்கூடியதாக இருந்தது எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

**திறன் வகுப்பறையைப் பயன்படுத்தி தமிழ்ப்பாடத்தினை சிறந்த முறையில் கற்பிப்பதற்கான சிபாரிசுகள்**

- திறன் வகுப்பறையில் video மூலம் கற்பிப்பது சிறந்தது என குறிப்பிட்டுள்ளனர்.
- திறன் வகுப்பறையில், SMART board இல் அதிகம் எழுதுவதற்கான சந்தர்ப்பங்களை வழங்குவது சிறந்தது என குறிப்பிட்டுள்ளனர்.
- திறன் வகுப்பறையில், படங்களைப்பார்ப்பதற்கான சந்தர்ப்பங்களை வழங்குவது சிறந்தது என குறிப்பிட்டுள்ளனர்.
- SMART வகுப்பறையில், விளையாட்டுமூலம் கற்பதற்கான சந்தர்ப்பங்களை வழங்குவது சிறந்தது என குறிப்பிட்டுள்ளனர்.

**விதப்புரைகள்**

மாணவிகளின் அனைத்து பாடங்களைக் கற்பதற்கும் திறன் வகுப்பறைகளை அதிகளவு பயன்படுத்த வேண்டும். தமிழ் பாடத்தை கற்பதற்கு திறன் வகுப்பறைகளை மேலும் அதிகளவு பயன்படுத்த வேண்டும். SMART வகுப்பறையினை பயன்படுத்தும் திறன்களை, ஆசிரியர்களும் மாணவிகளும் மேலும் விருத்திசெய்ய வேண்டும். ஏனைய வகுப்புக்களுக்கு கற்பிக்கும்

தமிழ்ப்பாட ஆசிரியர்களும் SMART வகுப்பறையைப் பயன்படுத்தி கற்பிக்க வேண்டும். SMART வகுப்பறையில் கற்பிப்பதற்கான இலத்திரனியல் உள்ளடக்கங்கள் விருத்திசெய்யப்பட வேண்டும்.

## உசாத்துணைகள்


1. AZmi, N. (2013) Multi-Sensory Delivery in EFL 'Smart' classroom: Students' Perceptions of Benefits, Limitations and Challenges, Journal of Education and Social Research, 3(I), PP.31-41.
2. Davidovitch, N & yavich , R.T.(2017). The Effect of Smart Boards on the cognition and Motivation of Students, Higher Education Studies, 7(1), PP. 60-68
3. Gerard,F, & Widener,J.A SMARTer way to Teach Foreign Language : The SMART Board TM Interactive whiteboard as a Language Learning Tool,
4. Hallili, S.H. &Suguneswary (2016) Teachers' ACCEPTANCE ON USING INFORMATION COMMUNICATION AND TECHNOLOGY (ICT) INTEACHING TAMIL LANGUAGE, The online Journal Of New Horizons in Education, 6, PP. 101-111
5. Ikan, E.M & Dagan, O. (2011) Using the Interative White Board in Teaching and Learning – An Evaluation Interdisciplinary, Journal of E-Learning and Learning Objects, 7.PP. 249-273
6. நித்திலவர்ணன், ஆ. (2008) கல்வித்தொழில்நுட்பமும் கற்றல்-கற்பித்தல் செயற்பாடும், அகவிழி
7. தக்ஷாயினி, சு. கற்றல் கற்பித்தலின் வினைத்திறனை அதிகரிப்பதில் தகவல் தொழில்நுட்பத்தின் வகிபங்கு, பேராசிரியர் மா.கருணாநிதி கல்விச்சேவை பாராட்டுவிழா மலர்,
8. சுதர்சன், தி. (2016) நவீன இலத்திலனியல் கற்றல்-கற்பித்தல் சாதனங்களைப் பயன்படுத்துவதில் ஆசிரியர் எதிர்நோக்கும் சவால்கள் - கல்வியியல் முதுமாணி ஆய்வு
9. சுபோதினி திஸாகரன், ஆனந்தமயில் நித்திலவர்ணன், பாடசாலைகளில், தரம் 10,11 இல் தகவல் தொழில்நுட்ப பாடம் கற்றல்-கற்பித்தலில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளும், அவற்றுக்கான தீர்வுகளும் - (சங்கானைக் கல்விக் கோட்டத்திலுள்ள தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)



பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் தமிழ்ப்பாட ஆசிரியரான நிஷாந்தினி நித்திலவர்ணன் அவர்கள், முன்னனராக பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி மற்றும் கிளிநொச்சி மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளிலும் ஆசிரியராக கடமையாற்யுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பட்டதாரியான இவர் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் கல்வி டிப்புளோமா மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக பண்பாட்டியல் முதுகலைமாணி, முதுகல்விமாணி ஆகிய பட்டப்பின் தகைமை களினையும் பெற்றுக்கொண்டார். தனித்துவமான பல சிறப்பம்சங்களை தன்னகத்தே கொண்டவர். அர்ப்பணிப்புமிக்க சிறந்த ஆசிரியர், இவர் கற்பித்தல் மீது காட்டும் அக்கறை, ஆற்றல், தேடல், பற்றுறுதி அற்புதமானது. மாணவர்களின் நேர்மையான முன்மாதிரி, பல்வகை ஆளுமை கொண்டவர், தலைமைத்துவப் பண்புகள் மிக்கவர். மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் சிறந்த வழிகாட்டி. தனது குடும்பத்தின் மேன்மைக்காக அல்லும் பகலும் அயராது உழைத்தவர். கணவன் மற்றும் பிள்ளைகள் மீது அளவற்ற அன்பு கொண்டவர். அவர்களின் முன்னேற்றத்திற்காக தன்னை அர்ப்பணித்தவர். தனது பெற்றோர் மற்றும் சகோதரியை எப்போதும் அன்பாக அரவணைத்துச் சென்றவர். அவரது தனித்துவமான சிறந்த பண்புகளால், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் மற்றும் சமூகத்தால் என்றும் மதிக்கப்பட்டவர்.

*** *** ***

நிஷாந்தினி நித்திலவர்ணன் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட இரண்டு ஆய்வுகள், இந்த நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன. 'முன்பள்ளிச் சிறார்களின் நடத்தைக் கோலங்களில் பண்பாட்டுக் காரணிகளின் செல்வாக்கு (Factors influencing on the behavioral patterns of the Preschool Children: A study based on the Preschools in Vadamaradchi North Divisional Secretariat)' என்ற தலைப்பிலான ஆய்வுக்கட்டுரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் International Movement for Tamil Culture, Canada என்ற அமைப்பும் இணைந்து நடாத்திய 13th International Conference on Challenges and Initiatives of the Tamil Language and Culture என்ற சர்வதேச ஆய்வு மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வாகும். மேலும் இவ்வாய்வு அவரது பண்பாட்டியல் முதுகலைமாணி பட்டத்திற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரையை அடிப்படை யாகக் கொண்டதுமாகும். இரண்டாவது ஆய்வு 'திறன் வகுப்பறையைப் பயன்படுத்தி தமிழ்ப்பாடம் கற்றல் - கற்பித்தல் (Teaching – Learning Tamil by using SMART board )' என்ற தலைப்பிலான ஆய்வுக்கட்டுரை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை நடாத்திய Educational Research Symposium – 2023 என்ற கல்வி ஆய்வு மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வாகும். மேலும் இவ்வாய்வு அவரது கல்வி முதுமாணி பட்டத்திற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரையை அடிப்படையாகக் கொண்டதுமாகும்.

9 786249 301931

Guru Printers - 021 221 4777